கல்கி



KALKI மார்ச் 14, 1954

4 அணா



நாள் முழுவதும்
காலை வேளையில்
புத்துணர்ச்சி
பிற்பகலில்
அளிக்க . . .
இரவில்
Himalaya Bouquet
குளுமையான, நறுமணம் கொண்ட
ஹிமாலயா புக்கே பௌடர்களை உபயோகியுங்கள்
ஹிமாலயா புக்கே ஸ்னோ எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் சருமத்தைப் பாதுகாக்கிறது.
HBP 10-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 13 இதழ் 33 | 1954 மார்ச் 14 | விஜய ௵ பங்குனி 1

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



வெற்றி
வெற்றி மேல் வெற்றி
வெள்ளம்போல் மக்கள் கூட்டம் - அவர்கள்
உள்ளமெலாம் உணர்ச்சி முழக்கம்
நாடெல்லாம் - வீடெல்லாம் - நல்லவர்
ஏடெல்லாம் இதய வாழ்த்து
மனோகர் பிக்சர்ஸ்
மனோகரா
RIGHTS CONTROLLED BY
ராதாகிருஷ்ண பிலிம்ஸ் லிமிடெட்.
ஆலப்புழை
திரைக் கதை. வசனம்:
கலைஞர்
மு. கருணாநிதி
கதை
நாடகப் பேராசிரியர். ராவ்பகதூர்
P. சம்பந்த முதலியார்
சென்னை
ஸ்ரீ. கிருஷ்ணா
சித்ரா
ராஜகுமாரி
உமா.. லக்ஷ்மி
மற்றும்
தென்னாடெங்கும்
நடைபெறுகிறது

கல்கி

மலர் 13 } தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் { இதழ் 33

எந்தத் திட்டம் நல்ல திட்டம்?

ஐந்து வருஷத் திட்டம் வகுத்த காலத்திலிருந்து அதைப் பற்றி அவ்வப்போது விவாதம் நடந்து வந்திருக்கிறது. சிலர் அத் திட்டத்தைப் போற்றிப் புகழ்ந்து வந்திருக்கிறார்கள். ஐந்து வருஷத் திட்டத்தினால் இந்த நாட்டில் பாலாறும் தேனாறும் பெருகி வறுமை நீங்கி வளம் செழித்துச் செல்வம் கொழித்து நாட்டு மக்கள் சுபிட்ச வாழ்வு அடைவார்கள் என்று சிலர் சொல்லி வந்திருக்கிறார்கள். வேறு சிலர் "ஐந்து வருஷத் திட்டம் வெறும் காகிதத் திட்டம்; அச்சுக் கூலி தண்டம்; அதனால் ஒரு பயனும் விளையப் போவதில்லை; குப்பைத் தொட்டியில் எறிய வேண்டியதுதான்" என்று கூறி வந்திருக்கிறார்கள். இன்னும் சிலர் அடக்கத்துடன், "இந்த ஐந்து வருஷத் திட்டம் ஆரம்பத் திட்டந்தான்; இதற்கடுத்த படியாக வரப் போகிற இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தினால் தான் நாட்டில் சுபிட்சம் ஏற்படப் போகிறது!" என்றும் சொல்லி வந்திருக்கிறார்கள்.

சென்ற வாரத்தில் ஐந்து வருஷத் திட்டத்தைப் பற்றிப் பலர் பல இடங்களில் பேசியிருக்கிறார்கள். அதிலுள்ள குணங்களையும் குறைகளையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அகில இந்திய வர்த்தக சம்மேளனத்தார் தங்கள் நோக்கி விருந்து பார்த்து ஐந்து வருஷத் திட்டத்தைப் பற்றி "அவ்வளவு திருப்திகரமில்லை" என்று அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள்.

ஜவாஹர்லால் நேருவோ, "நாடு பொருளாதாரத் துறையிலும் தொழில் துறையிலும் மிக மிக அவசரமாக முன்னேறியே தீர வேண்டும்! அப்படி முன்னேறா விட்டால் வரப் போகும் உலக நெருக்கடியைச் சமாளிக்க முடியாது. ஆகையால் ஐந்து வருடத் திட்டத்தை நிறைவேற்ற முன் வாருங்கள்!" என்று அறை கூவியிருக்கிறார்.

நிலைமை இவ்வளவு தூரத்துக்கு வந்து விட்ட பிறகு நாமும் ஐந்து வருஷத் திட்டத்தைப் பற்றிக் கவனியாமலிருப்பது உசிதமாகாது. விரிவாக அதை அலசி ஆராய்ச்சி செய்வதற்குத் தற்சமயம் அவகாசமில்லாதபடியாலும், அவசரமாக முன்னேற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாலும், சில பொதுப் படையான கொள்கைகளை மட்டும் குறிப்பிட்டு நம்மாலியன்ற பணியைச் செய்ய விரும்புகிறோம்.

ஐந்து வருஷத் திட்டமோ, பத்து வருஷத் திட்டமோ, எத்தனை வருஷம் நீடித்த திட்டமோ,—தேச முன்னேற்றத்துக்குரிய எந்தத் திட்டத்தையும், பின் வரும் நாலு அம்சங்களில் ஏதேனும் ஒன்றைப் பிரதானமாக வைத்துக் கொண்டு அமைக்கலாம்.

1. செலவுப் பிரதானமான திட்டம்

ஐந்து வருஷத்திற்குள்ளே தேச முன்னேற்றத்துக்காக இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவு செய்து விடுவது என்பதைப் பிரதானமாகக் கொண்டு திட்டம் வகுக்கலாம்.

இதன்படி "சாலைகள் அமைப்பதற்கு ஐந்நூறு கோடி ரூபாய்", "விஞ்ஞான வளர்ச்சிக்கு முப்பது கோடி ரூபாய்", "பெரிய தொழிற் சாலைகளுக்கு நானூறு கோடி ரூபாய்", "நீர்ப்பாசன வேலைகளுக்கு அறுநூறு கோடி ரூபாய்" "வானொலி விஸ்தரிப்புக்குப் பதினைந்து கோடி ரூபாய்" "தொழிற் கல்வி அபிவிருத்திக்கு ஐம்பது கோடி ரூபாய்" என்றெல்லாம் மொத்த ரூபாய்ச் செலவுக் கணக்கில் திட்டம் போட்டு விடலாம்.

இவ்வளவு கோடிக் கணக்கான பணத்தைச் செலவிட்டு விடுவதும் பெரிய காரியமன்று. பணம் மட்டும் தட்டாமல் கிடைத்து வந்தால், செலவு செய்வதற்கென்ன?

செலவு செய்யும் பணம் சரியானபடி உபயோகப்படுகிறதா, சரியான பயனை அளிக்கிறதா என்பது வேறு விஷயம். நீர்ப்பாசனத் திட்டங்களில் செலவாகும் அறுநூறு கோடி ரூபாயில் இருநூறு கோடி ரூபாய் வெளிநாட்டு நிபுணர்களை வரவழைத்துப் பராமரிப்பதில் செலவாகி விடலாம். இன்னும் இருநூறு கோடி ரூபாய் போதிய முன் யோசனையில்லாமல் அணைக்கட்டு வேலை துவங்கிப் பாதி வேலையில் பழுது கண்டு பிடித்துக் கட்டிய அணையை இடித்துக் கட்டுவதில் விரயமாகி விடலாம்.

சாலைகள் அமைப்பதற்கென்று ஒதுக்கிவைத்த ஐந்நூறு கோடி ரூபாயில் இருநூறு கோடி ரூபாய் இடையிலுள்ள கண்டிராக்டர்களின் லாபமாகப் போய் விடலாம்.

யுத்த காலத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் அவசர மாக ஆகாய விமானக் கூடங்கள் முதலியவை அமைப்பதற்குக் கோடி கோடியாகச் செலவு செய்தார்கள். விமானக் கூடங்கள் கட்டுவதில் மூன்றில் ஒரு பங்குதான் செலவாயிற்று; மற்ற மூன்றில் இரண்டு பங்கு கண்டிராக்டர்களுக்கும் அவர்களுக்குச் சலுகை அளித்த உத்தியோக வர்க்கத்துக்கும் போய் விட்டது.

ஐந்து வருஷத் திட்டங்களும் இம்மாதிரி முறை யில் நடத்தி வைக்கப் பட்டால், அவற்றினால் உத் தேசித்த பலன் நிச்சயமாக விளையாது.

ஸ்ரீ நிதிமந்திரி தேசமுக் அத்திட்டத்தை வகுப்பதில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டபடியால், செலவாகப் போகும் பணத்துக்கே பிரதானம் கொடுக்கிறார். மற்றவர்களும் அதே முறையைப் பின் பற்றுகிறார்கள்.

சென்ற வாரத்தில் ஸ்ரீ தேசமுக் பார்லிமெண் டில் பேசியபோது வரும் இரண்டு வருஷங்களில் ஐந்து வருஷத் திட்டத்தை நிறைவேற்றுவதற் காகத் தேசம் அறு நூறு கோடி ரூபாய் வரையில் வருமானத்தைக் காட்டிலும் அதிகச் செலவு செய்ய நேரும் என்று குறிப்பிட்டார்.

பத்திரிகைகளும் இந்தத் தொகைக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன.

திட்டம் அமைப்பதற்கு மிகவும் மட்டரகமான முறை இம்மாதிரி பணச் செலவைப் பிரதான மாகக் கொண்டு அமைக்கும் திட்டந்தான்.

2. பொருள் உற்பத்திப் பிரதானமான திட்டம்

ஐந்து ஆண்டுகளுக்குள்ளே ஒவ்வொரு தொழில் துறையிலும் இவ்வளவு பொருள் உற்பத்தி பெருகியாக வேண்டும் என்பதை முக்கியமாகக் கொண்டு ஐந்து வருஷத் திட்டத்தை வகுக்கலாம்.

இத்தனை கப்பல்கள் கட்டப்பட வேண்டும்: இத்தனை நிலப் புதிய சாலைகள் போடப்பட வேண்டும்; இத்தனை டன் இரும்பு எஃகு உற் பத்தி செய்ய வேண்டும்; இத்தனை வானொலிப் பெட்டிகள், இத்தனை க்ஷவரக் கத்திகள். இத் தனை மோட்டார்கள், இத்தனை பைசைக்கிள்கள் உற்பத்தியாக வேண்டும்; இத்தனை நிலம் புதி தாகப் பாசனத்துக்கு வரக்கூடிய அணைக் கட்டுகள் கட்ட வேண்டும்; இவ்வளவு மின்சார சக்தி புதிதாக உற்பத்தியாகக் கூடிய இயந்திரங் களை அமைக்க வேண்டும்; — என்று இம்மாதிரி முறையில் பொருள் உற்பத்திப் பெருக்கத்தை முக்கிய நோக்கமாகக் கொண்டு திட்டத்தை வகுப்பது சாதாரண முறை.

இந்த முறையினால் பொதுவாக நாட்டின் வளம் பெருகக் கூடும். ஆனால் இந்த முறையிலும் ஒரு பெரிய அபாயம் இருக்கிறது.

பொருள் உற்பத்தி பெருகப் பெருக, அதற்குத் தகுந்தபடி மக்களிடம் பொருள் வாங்கும் சக்தி யும் பெருக வேண்டும்.

அம்மாதிரி இரண்டும் சேர்ந்து வளராமல், பொருள் மட்டும் அதிகமாக உற்பத்தியாகி விட் டால், தேக்க நிலைமை ஏற்பட்டு விடும். சாமான்கள் வாங்குவாரில்லாமல் குவிந்து கிடக் கும். எவ்வளவோ பணச் செலவு செய்து, பெரும் பிரயத்தனங்கள் செய்து ஏற்படுத்திய தொழிற் சாலைகளை மூடும்படியாகவும் நேரிடலாம்.

இதனால் ஏற்படும் விபரீத நிலைமை, தொழில் களே இல்லாதிருந்த காலத்து நிலைமையை விடப் பன்மடங்கு மோசமானதா யிருக்கும்.

3. வேலை அளிப்புப் பிரதானமான திட்டம்

இதன்படி, பொருள் உற்பத்தி பெருகுவதற் குரிய தொழில்களைப் பற்றிச் சிந்திக்கும் போதே இன்ன இன்ன தொழிலை ஆரம்பித்து வளர்த்தால், இத்தனை அதிகம் பேருக்கு வேலை கொடுக்கலாம் என்பதைப் பற்றியும் ஆராயப்படும்.

நூறு கோடி ரூபாய் முதலீடு செய்து ஒரு தொழிலை ஆரம்பிக்கிறதாக வைத்துக் கொள்ள லாம். இதில் 75 கோடி ரூபாய் அன்னிய நாட்டிலிருந்து வாங்கும் பெரிய இயந்திரங் களுக்காகவே போய் விடக் கூடும். அப்படிப் பெரிய இயந்திரங்களைக் கொண்டு நடக்கும் தொழிலில் இரண்டாயிரம் பேருக்குத்தான் வேலை கொடுப்பது சாத்தியமா யிருக்கலாம்.

இதற்குப் பதிலாக, மேற்படி நூறு கோடி ரூபாயையும் நம் நாட்டிலேயே செலவு செய்து சிறிய அளவில் பற்பல தொழில்களை அமைப்பதின் மூலம் இரண்டு லட்சம் ஜனங்களுக்கு வேலை கொடுப்பது சாத்திய மாகலாம்.

அதிகமான மக்களுக்கு வேலை தரக்கூடிய இரண்டாவது முறைதான் தேச முன்னேற்றத் துக்கு உகந்தது என்பதைக் குருடனும் ஒத்துக் கொள்வான்.

இரண்டாயிரம் பேருக்குப் பதிலாக இரண்டு லட்சம் பேருக்கு வேலை கொடுக்க முடியுமானால், அந்த இரண்டு லட்சம் பேரும் தங்கள் சம்பாத்தி யத்தைப் பற்பல பொருள்கள் வாங்குவதில் செலவு செய்வார்கள். உற்பத்தியான பொருள்கள் விற் காமல் தேங்கிக் கிடக்கும் நிலைமை ஏற்படாது. மேலும் புதிய புதிய துறைகளில் பொருள் உற்பத்தி செய்ய ஊக்கம் ஏற்படும்.

தொழில் பெருக்கம், பொருள் உற்பத்திப் பெருக்கம் இவற்றோடு, அத்தொழில்களில் வேலை செய்பவர்களின் தொகையையும் பெருக்கிக் கொண்டே போக வேண்டும்.

இந்த நோக்கத்துடன் அமைக்கப்படும் ஐந்து வருஷத் திட்டமானாலும், பத்து வருஷத் திட்ட மானாலும், தேச முன்னேற்றத்துக்கு மிகவும் உதவியா யிருக்கும்.

"தானியம் நிறைய விளைந்திருக்கிறது. ஆனால் தானியம் வாங்குவதற்கு ஜனங்களிடம் பண மில்லை" "துணி உற்பத்தி அதிகமாகி விட்டது; வாங்குவாரின்றிக் கடைகளில் தேங்கிக் கிடக் கிறது" என்பவை போன்ற புகார்கள் ஏற்பட இடமிராது. "நெல் விலை அடியோடு விழுந்து விட்டது; விவசாயிகள் தலையில் கை வைத்துக் கொண்டு விழிக்கிறார்கள்" "துணி வியாபாரி களுக்குப் பெரும் நஷ்டம்; துணி ஆலைகளை மூடப் போகிறார்கள்!" என்பவை போன்ற ஓலங் களைக் கேட்க மாட்டோம்.


4. லாபப் பிரிவினைப் பிரதானமான திட்டம்

ஐந்து வருஷத் திட்டத்தின்படி பெரிய பெரிய தொழில்கள் அமைக்கப் படலாம்; பொருள் உற்பத்தியும் பெருகலாம். ஆயினும் அத் தொழில்களில் கிடைக்கும் லாபம் ஒரு சிலரிடமே சேர்ந்து கொண்டு வருமானால், அது நாட்டின் நீடித்த நலத்துக்கு உகந்த திட்டம் ஆகாது.

லாபமாகச் சேரும் பணத்தை அந்தச் சில மனிதர்கள் எப்படிப் பயன் படுத்துவார்கள் என் பதைப்பற்றி முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

அவர்களில் ஒரு சிலர் லாபப் பணத்தை நல்ல முறையில் புதிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கும்

யாருக்குக் கிட்டும்?



திருவாங்கூர் - கொச்சி ராஜ்யத்தில் பிரஜா - சோஷலிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் ஒருவரைக் கொண்டு ஒருவர் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியார் மட்டும் அதிகாரம் தானே தங்கள் வாயில் வந்து விழும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

உபயோகப் படுத்தலாம்; ஆனால் எல்லாரும் இப்படிச் செய்வார்கள் என்பது நிச்சயமில்லை.

சிலர் பணத்தைத் துர் உபயோகப் படுத்தலாம்; பணத்தின் செல்வாக்கினால் நாட்டின் அரசியலையே கெடுத்துப் பாழாக்கலாம்.

அல்லது நாட்டுக்குப் பயனற்ற வழிகளில் வீண் விரயம் செய்யலாம்; அயல் நாடுகளுக்குக் கொண்டு போய் விரயம் செய்வோரும் உண்டு.

ஒரு சிலரிடம் பணம் அதிகமாகக் குவிந்து கொண்டிருப்பதால், மற்றவர்கள் அதைப் பார்த்துப் பொறாமைப் பட்டுப் புழுங்குவது மனித இயல்பு. இதிலிருந்து துவேஷப் பிரசாரங்கள், பலாத்கார பயங்கர இயக்கங்கள் முதலியவை தோன்றுவதற்கு இடம் ஏற்படும்.

ஒரு பெரிய தொழில் மூலம் கிடைக்கும் லாபப் பணம் பத்துப் பேரிடம் சேர்வதற்குப் பதிலாகப் பதினாயிரம் பேருக்குப் பகிர்ந்து விநியோகிக்கப் படுமானால், அதனால் நாட்டுக்கு நன்மை உண்டு.

பத்துப்பேர் வாங்கும் பொருள்களை விடப் பத்தாயிரம் பேர் அதிகமாகப் பொருள் வாங்குவார்கள். இது மேலும் தொழில் வளர்ச்சிக்கும் உற்பத்திப் பெருக்கத்துக்கும் உதவியாகும்.

பதினாயிரம் பேரிடம் பிரிந்து செல்லும் பணத்தில் கணிசமான பகுதியை அரசாங்கத்தார் சிறு சேமிப்பு இயக்கங்களின் மூலம் கடனாகப் பெறலாம். அப்படிச் சேரும் தொகை புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கு மூலதனமாகும்.

தற்போது அமுல் நடந்து வரும் ஐந்து வருஷத் திட்டத்தை வகுத்தவர்கள் முதல் இரண்டு அம்சங்களைக் கொண்டுதான் அத் திட்டத்தை வகுத்தார்கள். அந்த இரு நோக்கங்களுடனே தான் திட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது.

ஆகையினாலேயே எதிர் பார்த்த அளவு அத் திட்டத்தினால் பலன் கிட்டவில்லை. பண்டித ஜவாஹர்லால் நேருவும் பூரண திருப்தியடையவில்லை. மக்களிடையிலும் அவ்வளவாக உற்சாகத்தைக் காண முடியவில்லை.

இனி ஐந்து வருஷத் திட்டங்கள் வகுக்கும் போது, மூன்றாவது நாலாவது அம்சங்களையும் முக்கியமாகக் கவனித்து வகுக்க வேண்டும்.

எந்தெந்தத் தொழிலை எந்தெந்த முறையில் ஆரம்பித்து நடத்தினால், பொருள் உற்பத்தி பெருகும்போதே அதிகமான மனிதர்களுக்கு வேலை கொடுக்கவும் முடியும் என்பதைச் சிந்தித்துத் திட்டம் வகுக்க வேண்டும்.

அம்மாதிரியே, புதிய தொழில்களில் கிடைக்கும் ஆதாயங்கள் பொது மக்களைச் சேர்வதாகவோ, அல்லது அதிகமான பேருக்குப் பகிர்ந்து கொடுக்கக் கூடியதாகவோ திட்டம் வகுக்க வேண்டும்.

இந்தப் பிந்தைய இரண்டு அம்சங்களிலும் சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்களான ஸ்ரீ அசோக மேத்தா முதலியவர்கள் கவனம் செலுத்திச் சமீப காலத்தில் தீவிரப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

பண்டித ஜவாஹர்லால் நேரு அடுத்த ஐந்து வருஷத் திட்டத்தை வகுக்கும்போது ஸ்ரீ அசோக மேத்தாவைப் போன்ற சிந்தனையாளர்களையும் கலந்து ஆலோசித்துத் திட்டம் வகுக்க முயல வேண்டும் என்று விரும்புகிறோம்.

வெறும் பிடிவாதத்தின் விபரீத விளைவு

திருவாங்கூர் – கொச்சி அரசியலில் இப்போது ஏற்பட்டிருக்கும் நிச்சயமற்ற நிலைமையைப் பற்றி நேயர்கள் அறிவார்கள். எந்தக் கட்சியும் தனியாக மந்திரி சபை அமைக்கக் கூடிய பலம் பெற்றிருக்கவில்லை. கட்சிகள் கூட்டாகச் சேர்ந்து மந்திரி சபை அமைத்தாலும் நீடித்து நடைபெறும் என்று நம்புவதற்கு இடமில்லை.

இத்தகைய விபரீத நிலைமை ஏற்பட்டதற்கு மூல காரணம் என்ன ! திருவாங்கூர் பிரதேச காங்கிரஸ் காரியாலயத்திலிருந்து அகில இந்திய காங்கிரஸ் காரியாலயம் வரையில் குடிகொண்டிருக்கும் வெறும் மௌடகப் பிடிவாதமேயாகும்.

திருவாங்கூர் இராஜ்யத்தில் பொதுத் தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் எதனால் ஏற்பட்டது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பழைய மந்திரி சபையில் மலையாள காங்கிரஸ்காரர்களுடன், திருவாங்கூர் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்தவர்களும் ஒத்துழைத்து வந்தார்கள். தமிழ்க் காங்கிரஸ் அங்கத்தினர் சார்பாக ஸ்ரீ சிதம்பரநாத நாடார் பழைய மந்திரி சபையில் மந்திரி பதவி வகித்து வந்தார். மந்திரி சபை சட்ட சபையில் பெரும்பான்மை பலத்துடன் நடந்து வந்தது. அரசாங்க நிர்வாகம் பற்றியவரையில் மந்திரி சபையிலோ, காங்கிரஸ் கட்சிக்குள்ளோ தகராறு கிடையாது. தகராறு காங்கிரஸ் ஸ்தாபன விஷயமாக ஏற்பட்டது.

திருவாங்கூரில் நாஞ்சில் நாடு முதலிய பகுதிகளில் உள்ள தமிழர்கள் வெகு காலமாகப் பல இன்னல்களை அநுபவித்து வந்தார்கள். (அவற்றைக் குறித்து ஏழு ஆண்டுகளுக்கு முன்னாலேயே இப்பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருக்கிறது.) தங்களுடைய இன்னல்களைப் போக்கிக் கொள்வதற்காக அவர்கள் தனிக் காங்கிரஸ் ஸ்தாபனம் அமைத்துக் கொண்டார்கள். நாஞ்சில் நாட்டுத் தமிழ்ப் பகுதிகளைத் தமிழ் நாட்டுடன் சேர்த்து விட வேண்டுமென்று கோரினார்கள். அதற்கு முதற் படியாக, தங்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்தைத் தமிழ் நாடு காங்கிரஸ் ஸ்தாபனத்துடன் இணைக்க அநுமதி கேட்டார்கள். இந்த நியாயமான கோரிக்கையைத் திருவாங்கூர் காங்கிரஸ் தலைவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை; இந்தக் கோரிக்கையின் நியாயா நியாயத்தைப் பற்றி விசாரியாமலே அகில இந்திய காங்கிரஸ் அதிகாரிகளும் அதை நிராகரித்து வந்தார்கள்.

ஆயினும் திருவாங்கூர் தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள் மனம் சோர்வடையாமல் மலையாள காங்கிரசுடன் ஒத்துழைத்து வந்தார்கள்.

பழைய சட்ட சபையில் தமிழ்க் காங்கிரஸின் சார்பாக ஒன்பது அங்கத்தினர்கள் இருந்தார்கள். இவர்கள் பத்தரை மாற்றில் வீசம் மாற்றுக்கூடக் குறையாத காங்கிரஸ்வாதிகள். ஆகையினாலேயே பழைய மந்திரி சபையில் சேர்ந்து ஒத்துழைத்தார்கள். இவர்களுடைய ஒத்துழைப்பினாலேயே பழைய மந்திரி சபை நடந்தது.

"தமிழ்க் காங்கிரஸ் தனியாக இயங்க விடக் கூடாது" என்ற பிடிவாதம் மலையாள பிரதேச காங்கிரஸ் தலைவர்களைப் பற்றிக் கொண்டது. "தமிழ்க் காங்கிரஸைக் கலைத்துவிடுங்கள்; இல்லாவிட்டால் மந்திரி சபையை விட்டு உங்கள் பிரதிநிதியை வெளியேற்றுவோம்" என்றார்கள்.

வேறு வழியின்றி ஸ்ரீ சிதம்பரநாத நாடார் ராஜிநாமா செய்தார். சட்ட சபையில் மந்திரி சபைக்குப் பலம் இல்லாமற் போயிற்று. இதிலிருந்து பழைய மந்திரி சபை ராஜிநாமா செய்யவும், பொதுத் தேர்தல் நடத்தவும் நேர்ந்தது.

இந்தப் பொதுத் தேர்தலுக்கு வெறும் மூடப் பிடிவாதந்தான் காரணம் என்பதைப் பற்றிச் சிறிதும் சந்தேகமில்லை.

இத்தகைய மூடப் பிடிவாதத்தினால் இப்பொழுது திருவாங்கூர் அரசியலில் விபரீதமான விளைவு ஏற்பட்டிருக்கிறது.

தேர்தல் முடிவு என்ன ஆயிற்று ! சட்டசபையில் மலையாள காங்கிரஸின் பலம் முன்னைவிடக் குறைந்து போயிருக்கிறது.

கம்யூனிஸ்டுகளின் பலம் தேர்தலுக்கு முன் இருந்தது போலவே இருந்து வருகிறது.

தமிழ்க் காங்கிரஸ்காரர்கள் முன்னைவிட மூன்று ஸ்தானங்கள் அதிகம் பெற்றிருக்கிறார்கள். திருவாங்கூரில் வசிக்கும் தமிழ் மக்கள் தமிழர் காங்கிரஸ் ஸ்தாபனத்தையும் அதன் கோரிக்கையையும் முழுக்க முழுக்க ஆதரிக்கிறார்கள் என்று ஏற்பட்டது. அவர்களுடைய அபேட்சகர்களுக்கு எதிராக மலையாளப் பிரதேச காங்கிரஸ் நிறுத்திய அபேட்சகர்கள் சில இடங்களில் 'டெபாஸிட்'டுகளையும் இழந்து விட்டார்கள்.

இதையெல்லாம் காட்டிலும் திருப்திகரமான அம்சம், பொதுத் தேர்தலின் முடிவில் பிரஜா–சோஷலிஸ்ட்டுகள் அதிகப் பலம் பெற்றிருப்பது.

பிரஜா–சோஷலிஸ்ட்டு கட்சியார் பத்தொன்பது ஸ்தானங்களை பெற்றிருந்தாலும், அவர்களுடைய முக்கியத்துவம் மிகப் பெருகி விட்டது. ஏனெனில், பிரஜா–சோஷலிஸ்டுகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றித் திருவாங்கூர்–கொச்சியில் நிலையான மந்திரி சபை அமைக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது.

பிரஜா—சோஷலிஸ்டுகள் தங்களுக்குக் கிடைத்துள்ள முக்கியத்துவத்தையும் பலத்தையும் எப்படி உபயோகப் படுத்துவார்கள் என்பது (இதை எழுதும்போது) நமக்குத் தெரிந்திருக்கவில்லை.

காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்து மந்திரி சபை அமைப்பது அவர்களுடைய தேர்தல் பிரசாரத்துக்கு விரோதமான நடத்தையாகலாம்.

கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து கூட்டு மந்திரி சபை அமைப்பது சோஷலிஸ்டு கட்சியின் இலட்சியங்கள்—திட்டங்கள் எல்லாவற்றுக்கும் முழுக்குப் போடுவதாக முடியும்.


எனவே, பிரஜா—சோஷலிஸ்டுகளின் நிலைமை மிகத் தர்ம சங்கடமானதுதான். ஆகையினாலேயே "என்ன செய்வது !" என்பது பற்றித் தீர்க்கமாக யோசிக்க அகில இந்திய பிரஜா—சோஷலிஸ்ட் தலைவர்கள் சென்னையில் மகாநாடு கூடியிருக்கிறார்கள். அவர்கள் என்ன முடிவு செய்கிறார்கள் என்பது இந்த வாரக் கடைசியில் தெரியலாம்.

இந்த நெருக்கடியான நிலைமையில் மலையாள காங்கிரஸ் தலைவர்களே, முன் வந்து, பிரஜா–சோஷலிஸ்டுகளிடம் "நீங்கள் மந்திரி சபை அமையுங்கள்; நாங்கள் ஆதரித்து நிற்கிறோம்" என்று சொல்வது மிகப் பொருத்தமாகவும் நாட்டின் நன்மைக்கு உகந்ததாகவும் இருக்கும். அவர்களே ஏற்படுத்திய விபரீத நிலைமைக்கு அவர்களே ஒருவாறு பரிகாரம் செய்ததாகவும் இருக்கும்.

மலையாள காங்கிரஸ் தலைவர்கள் அவ்வளவு பெருந் தன்மையுடனும் தாராள புத்தியுடனும் நடந்து கொள்வார்களா என்று பார்க்க வேண்டும்.


இருட்டில் உங்கள்
வழிகாட்டி
ESTRELA
BRIGHT LIGHT
LONG LIFE
BOMBAY
ESTRELA
REGD. TRADE MARK
எஸ்ட்ரெலா பாட்டரீஸ்


Diapepsin
டயபெப்ஸின்
ஆகாரங்களை
இலகுவாக
ஜீரணம் செய்ய
உதவும்
ஓர் ஒப்பற்ற
சஞ்சீவி
PEPSIN
DIA-PEPSIN
உங்கள் டாக்டரை கலந்தாலோசியுங்கள்
யூனியன் டிரக் கம்பெனி லிட்.
மதராஸ் டிப்போ:
2, ஜோன்ஸ் லேன் :: மதராஸ்-1



அத்தியாயம் 78

நண்பர்கள் பிரிவு

கொள்ளிடப் பெரு நதியின் படகுத் துறையை நெருங்கி நாலு குதிரைகள் வந்து கொண்டிருந்தன. நாலு குதிரைகள் மீதும் நாலு வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் நமக்குத் தெரிந்தவர்கள்தான். பார்த்திபேந்திரன், கந்தமாறன், வந்தியத்தேவன், பொன்னியின் செல்வர் ஆகியவர்கள்.

இவர்களில் முதல் இருவரும் படகில் ஏறிக் கொள்ளிடத்தைக் கடந்து வட திசை நோக்கிப் பிரயாணம் செய்ய ஆயத்தமாக வந்தனர். மற்ற இருவரும் அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்புவதற்கு வந்தார்கள்.

படகுத் துறையை அடைந்ததும் நண்பர்கள் நால்வரும் குதிரை மேலிருந்து கீழே இறங்கினார்கள்.

"கந்தமாறா! உன் பழைய நண்பனிடம் உன் கோபமெல்லாம் போய் விட்டதல்லவா? இன்னமும் ஏதாவது மிச்சம் வைத்துக் கொண்டிருக்கிறாயா?" என்று பொன்னியின் செல்வர் கேட்டார்.

"ஐயா! அவன் மீது கோபம் வைத்துக் கொள்ளக் காரணம் என்ன இருக்கிறது? என் அறிவீனத்தை நினைத்து நினைத்துப் பச்சாத்தாபப் படுவதற்குத்தான் நிறையக் காரணம் இருக்கிறது. நான் அவனுக்கு இழைத்த தீங்குகளையெல்லாம் மறந்து என்னிடம் பழையபடி சிநேகமாயிருக்க முன்வந்தானே, அந்தப் பெருந்தன்மைக்கு இணையே கிடையாது. என் சகோதரியை நதி வெள்ளத்தில் மூழ்கிச் சாகாமல் காப்பாற்றினானே, அதற்கு நான் இந்த ஜன்மத்திலே நன்றிக் கடன் செலுத்த முடியுமா? என் புத்தி எதனால் எப்படிக் கெட்டுப் போயிற்று என்பதை நினைத்துப் பார்த்தால், எனக்கே வியப்பாயிருக்கிறது. முதலில் உத்தேசித்தபடி மணிமேகலையை இவனுக்கு மணம் செய்து வைக்காமற் போனேனே? அப்படிச் செய்திருந்தால், இன்றைக்கு அவள் இவ்வாறு பிச்சியாகப் போயிருக்க மாட்டாள் அல்லவா?" என்றான் கந்தமாறன்.

"அது ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? நதி வெள்ளத்தில் விழுந்த அதிர்ச்சியினால் சிறிது நினைவுத் தவறு ஏற்பட்டிருக்கிறது. சில நாள் போனால் சரியாகி விடாதா?" என்றார் இளவரசர்.

"சாதாரண நினைவுத் தவறுதலாகத் தோன்றவில்லை. மற்ற எல்லாரையும் அவளுக்கு ஞாபகமிருக்கிறது; எல்லா விஷயங்களும் நினைவில் இருக்கின்றன. என்னையும் வந்தியத்தேவனையும் மட்டும் அவளுக்கு அடையாளம் தெரியவில்லை. என்னிடம் அவள் வைத்திருந்த அன்பு எத்தகையது என்பதை எண்ணும்போது என் நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது. 'ஐயோ! என் அருமை

அண்ணனை என்னுடைய கையினாலேயே கொன்று விட்டேனே?' என்று அவள் ஓலமிடும் குரல் என் காதிலேயே இருந்து கொண்டிருக்கிறது......''

''அது ஏன் அப்படி அவள் ஓலமிட வேண்டும்? நீதான் உயிரோடு இருந்து வருகிறாயே?''

''நான் உயிரோடு தானிருக்கிறேன்! இறந்து போயிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும். ஆம், ஐயா! வந்தியத் தேவனை நான் கொன்று விட்டதாகவும், அதற்காக என்னை அவள் கொன்று விட்டதாகவும் அவள் உறுதி கொண்டிருக்கிறாள். ஒரு சமயம் என்னை நினைத்துப் புலம்புகிறாள். இன்னொரு சமயம் என் சிநேகிதனை நினைத்துக் கொண்டு, 'ஆற்று வெள்ளம் திரும்பி வருமா? இறந்து போனவர்களைக் கொண்டு தருமா?' என்று புலம்புகிறாள். எவ்வளவுதான் சொன்னாலும், என்னை அவளுடைய அண்ணன் என்றும் ஒப்புக் கொள்வதில்லை; வந்தியத் தேவனையும் அடையாளம் தெரிந்து கொள்ள முடிய வில்லை. 'நீ யார்? வல்லத்து இளவரசரை நீ பார்த்தது உண்டா?' என்று இவனிடமே கேட்கிறாள்!......''

''அப்படியா?'' என்று பொன்னியின் செல்வர் திரும்பிப் பார்த்த போது, வந்தியத் தேவன் கண்களில் கண்ணீர் ததும்புவதைக் கண்டார்.

''அடாடா! இப்போது வந்தியத் தேவர் வல்லத்து இளவரசரல்ல, வல்லத்து அரசராகவே ஆகிவிட்டார் என்று தெரிந்தால் அவளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும்? அதற்குக் கொடுத்து வைக்காமல் போய் விட்டதே?'' என்றான் பார்த்திபேந்திரன்.

இதைக் கேட்ட கந்தமாறன் முகத்தில் வியப்புக் குறியுடன் பொன்னியின் செல்வரை நோக்கினான்.

''ஆம், அப்பா! உன் நண்பனுக்கு வாணகப்பாடி நாட்டைத் திரும்பக் கொடுத்து வல்லத்து அரசனாக்கி விடுவதென்று சக்கரவர்த்தி தீர்மானித்திருக்கிறார். அம்மாதிரியே உனக்கும் வாணகப்பாடிக்கு அருகில் வைதும்ப ராயர்கள் ஆண்ட பகுதியைத் தனி இராஜ்யமாக்கி அளிக்க எண்ணியிருக்கிறார். இனி, நீங்கள் இருவரும் அக்கம் பக்கத்திலேயே இருந்து வாழ வேண்டியவர்கள். எப்பொழுதும் உங்கள் சிநேகத்துக்குப் பங்கம் நேராதபடி நடந்து கொள்ள வேண்டும்'' என்றார் பொன்னியின் செல்வர்.

''சக்கரவர்த்தியின் கருணைக்கு எல்லையே இல்லைபோலிருக்கிறது. அப்படியானால், நான் மறுபடி கடம்பூருக்கே போக வேண்டியதில்லை அல்லவா?'' என்று கந்தமாறன் சிறிது உற்சாகத்துடன் கேட்டான்.

''வேண்டியதில்லை. அங்கே உங்களுடைய பழைய அரண்மனை தான் அநேகமாக எரிந்து போய் விட்டதே? மறுபடியும் அவ்விடத்துக்கு நீங்கள் போனால் பழைய ஞாபகங்கள் வந்து கொண்டேயிருக்கும். பாலாற்றின் தென் கரையில் புதிய அரண்மனை கட்டிக் கொள்ளுங்கள். உன் சகோதரிக்கு உடம்பு சௌகரியமானதும் அங்கே வந்து அவளும் இருக்கலாம்.''

''கோமகனே! இனி மணிமேகலை எங்களுடன் வந்து இருப்பாள் என்று நான் கருதவில்லை. தங்கள் பாட்டியார் செம்பியன்மாதேவியார் அவளைத் தம்முடன் ஸ்தல யாத்திரைக்கு அழைத்துப் போவதாகச் சொல்லியிருக்கிறார். மணிமேகலைக்கும் பெரிய பிராட்டியை ரொம்பவும் பிடித்துப் போயிருக்கிறது. இன்றைக்குக் கூடப் பெரிய பிராட்டி திருவையாற்றுக்கு என் சகோதரியை அழைத்துப் போயிருக்கிறார்.''

''ஆமாம்; பெரிய கோஷ்டியாகத்தான் போயிருக்கிறார்கள். புது மணம் புரிந்து கொண்ட என் சித்தப்பாவும் சிற்றன்னையும் கூடப் போயிருக்கிறார்கள். இந்த வேடிக்கையைக் கேளுங்கள். சமுத்திர குமாரியை இனி மேல் என் சிற்றன்னையாக நான் கருதி வர வேண்டும்!''

''சோழர் குலத்தில் இவ்வளவு அடக்கமாக ஒரு திருமணம் இது வரையில் நடந்ததே கிடையாது; மதுராந்தகருக்கும் பூங்குழலிக்கும் நடந்த திருமணத்தைப் போல்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

''என்னுடைய மகுடாபிஷேகங் கூட அவ்வளவு அடக்கமாகத்தான் நடக்கப் போகிறது!'' என்றார் அருள்மொழி.

''அது ஒரு நாளும் நடவாத காரியம்!...'' என்றான் வந்தியத்தேவன்.

பொன்னியின் செல்வர் திடுக்கிட்டது போல் நடிப்புடன், ''எது நடவாது என்று கூறுகிறாய்? என்னுடைய பட்டாபிஷேகமா?'' என்றார்.

வந்தியத் தேவன் சிறிது வெட்கத்துடன், ''இல்லை, ஐயா! அடக்கமாக நடப்பது இயலாத காரியம் என்றேன். இப்போதே மக்கள் தங்கள் மகுடாபி

ஷேகத்தைப் பற்றி விசாரிக்கவும் பேசவும் ஆரம்பித்து விட்டார்கள்!'' என்முன்.

''கோமகனே! தங்களுடைய முடிசூட்டு விழாவுக்கு நாங்கள் இருக்க வேண்டாமா? இந்தச் சமயம் பார்த்து எங்களை வட திசைக்கு அனுப்புகிறீர்களே! தை மாதம் பிறந்ததும் பட்டாபிஷேகத்துக்கு நாள் குறிக்கப் படும் என்று தஞ்சையில் பேசிக் கொண்டிருந்தார்களே! வந்தியத் தேவன் கொடுத்து வைத்தவன்; அதிர்ஷ்ட சாலி!......'' என்முன் கந்தமாறன்.

''அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை. வந்தியத் தேவரையும் நான் சீக்கிரத்தில் ஈழத்துக்கு அனுப்பப் போகிறேன். நண்பர்களே! ஒன்று நிச்சயமாக நம்புங்கள்! என் அருமை நண்பர்களாகிய நீங்கள் இல்லாமல் என் மகுடாபிஷேகம் நடைபெருது!'' என்று பொன்னியின் செல்வர் திடமாகக் கூறினர்.

''மிக்க நன்றி, ஐயா! மகுடாபிஷேகத்துக்கு நாள் குறிப்பிட்டவுடனே குதிரை ஆட்களிடம் ஓலை கொடுத்து அனுப்புங்கள். உடனே வந்து சேருகிருேம்'' என்முன் கந்தமாறன்.

''நண்பா! அதைப் பற்றி என்ன கவலை? நீங்கள் வராமல் நான் பட்டாபிஷேகம் செய்து கொள்ளப் போவதில்லை. இதை நிச்சயமாக நம்புங்கள். நான் பட்டாபிஷேகம் செய்து கொள்வது எதற்காக என்பதை மறந்து விடாதீர்கள். அரண்மனை நிலா மாடங்களிலும் உத்தியான வனங்களிலும் உல்லாசப் பொழுது போக்குவதற்காக நான் முடி சூட்டிக் கொள்ளப் போவதில்லை. நண்பர்களே! ஈழ நாடு சென்றதிலிருந்து நான் கண்டு வரும் கற்பனைக் கனவுகளை உங்களிடம் முன்னமே சொல்லி யிருக்கிறேன். இன்னும் ஒரு முறை சொல்லுகிறேன், கேளுங்கள்! என் பாட்டனரின் தந்தையான பராந்தகச் சக்கரவர்த்தியின் காலத்தில் சோழ சாம்ராஜ்யம் அடைந்திருந்த மகோந்நதத்தைக் காட்டிலும் நம்முடைய காலத்தில் அதிக மேன்மையை அடைய வேண்டும். நாலா புறத்திலும் இராஜ்யத்தை விஸ்தரிக்க வேண்டும். வடக்கே கங்கை நதிக்கரை வரைக்கும், கிழக்கே கடல் கடந்து ஸ்ரீவிஜய ராஜ்யம் வரைக்கும் சோழ நாட்டுப் படைகள் சென்று புலிக் கொடியை நாட்ட வேண்டும். மேற்கே மலை நாட்டையும் அப்பால் கடலில் உள்ள லட்சத் தீவுகளையும் கைப்பற்றி நமது படைகளையும் அங்கே நிலைத்து இருக்கச் செய்ய வேண்டும். மலை நாட்டில் 'சேர அரசன்' ஒருவன் எங்கிருந்தோ கிளம்பி யிருக்கிருன். பாண்டிய நாட்டிலும் யாராவது ஒரு பாண்டியன் திடீரென்று கிளம்புவான். இந்தப் புதிய சேர, பாண்டியர்களுக்குப் பலம் அளிப்பவர்கள் இலங்கை மன்னர்கள். ஆகையால் ஈழ நாட்டு மலைக் குகைகளில் ஒளிந்திருக்கும் மகிந்தனையும் அவனுடைய படைகளையும் தேடிப் பிடித்து அவர்களுடைய பலத்தை அடியோடு அழித்து விடவேண்டும். இலங்கைத் தீவு முழுவதையும் நம் ஆட்சிக்குக் கொண்டு வர வேண்டும். இராஜ்யம் விஸ்தாரமானல் மட்டும் போதுமா? ஈழ நாட்டிலுள்ள புத்தரின் ஸ்தூபங்களைத் தோற்க அடிக்கும்படியான பெரிய பெரிய சிவாலயங்களையும் விஷ்ணு ஆலயங்களையும் இந்தப் புண்ணிய பூமியில் எழுப்ப வேண்டும். இந்த வீரத் திரு நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிற்பாடு வரப் போகிறவர்கள் நாம் நம் காலத்தில் செய்த திருப் பணிகளைக் கண்டு பிரமிக்க வேண்டும். நண்பர்களே! இக் கனவுகள் எல்லாம் என் காலத்தில் நிறைவேறத்தான் போகின்றன; நிறைவேற்றியே தீர்வேன். அதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் உதவி செய்ய வேண்டும். பார்த்திபேந்திரரே! சோழ நாட்டிலேயே மிக உயர்ந்த சைன்யப் பதவியை, என் தமையனர் கரிகாலர் வகித்து வந்த வடதிசை மாதண்ட நாயகர் பதவியைத் தங்களுக்கு அளித் திருக்கிறேன். அந்தப் பொறுப்பை நீர் சரிவர நிறைவேற்ற வேண்டும். என் தமையனரின் அகால மரணம் நம் பகைவர்களிடையே பலவித ஆசைகளை மூட்டிவிட்டிருக்கும். வேங்கி அரசனும் இராட்டிரகூட மன்னனும் சோழ நாட்டில் உள் குழப்பங்கள் நேரிடும் என்றும், சிற்றரசர்களுக்குள்ளே போர் மூளும் என்றும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆகையால் வட பெண்ணைக் கரையில் நம் வீரர்கள் இரும்பு அரணைப் போல் நின்று காவல் புரிய வேண்டும். பல்லவர் குலத் தோன்றலே! வடபெண்ணைக் கரையில் வேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டு, கந்தமாறனை அங்கே தளபதியாக நிறுத்தி வைத்துவிட்டு, தாங்கள் உடனே காஞ்சிக்குத் திரும்புங்கள். அங்கே, என் வீரச் சகோதரர் எடுப்பித்த பொன் மாளிகையைச் சக்கரவர்த்தி வந்து தங்குவதற்கு உகந்ததாகச் செய்து வையுங்கள் என்னுடைய தலையில் கிரீடத்தை வைத்தவுடனே, சக்கரவர்த்தி காஞ்சிக்குப் பிரயாணமாவதற்கு விரும்புகிருர்!''

இதைக் கேட்டுக் கந்தமாறன் கண்களில் நீர் ததும்ப, "கோமகனே! போர்க்களத்தில் நான் எனது போர்த் திறமையை இன்னும் நிரூபித்துக் காட்டவில்லையே? எல்லைக் காவல் படைக்கு என்னைத் தளபதியாக நியமிக்கிறீர்களே? நான் தகுதி உள்ளவனா?" என்று நாத் தழுதழுக்கக் கேட்டான்.

"நண்பா! எல்லாம் வல்ல இறைவன் எனக்குச் சில சக்திகளை அளித்திருக்கிறார். யார் யார் எந்த எந்தப் பணிக்குத் தகுதியுள்ளவன் என்பதை எளிதில் கண்டு பிடிக்கும் சக்தியையும் அளித்திருக்கிறார். உன்னை வடக்கு எல்லைப் படைக்குத் தளபதியாக நியமித்திருப்பதுபோல், உன் நண்பர் வல்லத்தரசரை ஈழப் படைக்குத் தளபதியாக நியமித்திருக்கிறேன்! இரண்டு பேரும் உங்கள் கடமைகளை நன்கு நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!" என்றார் பொன்னியின் செல்வர்.

"இன்னும் சில காலத்துக்கு இவர்களில் ஒருவரை வடக்கு எல்லையிலும் இன்னொருவரைத் தெற்கு எல்லையிலும் வைத்திருப்பது நல்ல யோசனைதான். எங்கேயாவது சேர்ந்திருந்தால், தாங்களும் அங்கே இல்லாமலிருந்தால், பழைய ஞாபகம் வந்து இருவரும் மோதிக் கொண்டாலும் மோதிக் கொள்வார்கள்" என்றான் பார்த்திபேந்திரன்.

"ஐயா! இனி அம்மாதிரி ஒரு நாளும் நேரவே நேராது!" என்று கந்தமாறன் சொல்லிக் கொண்டே வந்தியத் தேவன் அருகில் சென்றான்.

"நண்பா! என்னுடைய தவறுகளையெல்லாம் மன்னித்து விட்டாய் அல்லவா?" என்று கேட்டான்.

வந்தியத் தேவன் அதற்கு வாயினால் மறுமொழி கூறாமல், இரு கரங்களையும் நீட்டிக் கந்தமாறனை மார்புறக் கட்டித் தழுவிக் கொண்டான்.

நண்பர்கள் இருவரும் சிறிது நேரம் மௌனமாகக் கண்ணீர் உகுத்தார்கள்.

பின்னர், பார்த்திபேந்திரனும் கந்தமாறனும் சென்று ஆயத்தமாக இருந்த படகில் ஏறிக் கொண்டார்கள்.

படகு நதியில் பாதி தூரம் போகும் வரையில் பார்த்துக்கொண்டிருந்து விட்டுப் பொன்னியின் செல்வரும் வந்தியத் தேவனும் தஞ்சையை நோக்கிக் குதிரைகளைத் திருப்பி விடுத்தார்கள்.

அத்தியாயம் 79

சாலையில் சந்திப்பு

பொன்னியின் செல்வரின் முடிசூட்டு விழா விரைவிலேயே நடைபெறப் போகிறது என்று நாடு நகரமெல்லாம் தெரிந்து போயிருந்தது. மக்கள் ஒரே ஆர்வத்துடன் அந்த வைபவத்தை எதிர்நோக்கியிருந்தார்கள்.

ஆதித்த கரிகாலரின் அகால மரணம், மந்தாகினியின் உயிர்த் தியாகம், பெரிய பழுவேட்டரையரின் சபத நிறைவேற்றம் ஆகிய நிகழ்ச்சிகள் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் உள்ளத்தைப் பெரிதும் துன்புறச் செய்திருந்தன. ஆயினும், இராஜ்ய உரிமை சம்பந்தமான சச்சரவுகள் ஒரு மாதிரி தீர்ந்து போய், அருள்மொழி வர்மருக்கு முடிசூட்டுவதைச் சிற்றரசர்கள், பொது மக்கள் அனைவரும் ஒரு முகமாக ஆதரித்தது, அவருடைய நொந்து போன உள்ளத்துக்கு ஓரளவு ஆறுதல் அளித்து வந்தது.

தை மாதம் பிறந்தவுடனே நல்ல நாள் குறிப்பிட்டுப் பொன்னியின் செல்வரின் தலையில் சாம்ராஜ்ய பாரத்தைச் சுமத்தி விட்டுக் காஞ்சிக்குப் புறப்பட்டுச் செல்லச் சக்கரவர்த்தி முடிவு செய்திருந்தார். அங்கே தமது வீரப் புதல்வன் கரிகாலன் தமக்கென்று நிர்மாணித்த பொன் மாளிகையிலே மிச்சமுள்ள தம் வாழ்வைக் கழித்து விடவும் தீர்மானித்திருந்தார்.

முடிசூட்டு வைபவத்தை அதிக ஆடம்பரமில்லாமல் நடத்தி விட வேண்டும் என்று சுந்தர சோழர் எண்ணியதிலும் வியப்பில்லை அல்லவா?

இந்த விஷயத்தில் அருள்மொழி வர்மரும் பரிபூரணமாகத் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற எண்ணியிருந்தார். ஆகையால், முடிசூட்டு விழா முடியும் வரையில் நாடு நகரங்களில் பொது மக்களிடையில் அதிகமாகப் போவதில்லையென்று தீர்மானித்திருந்தார்.

கொள்ளிடத்தின் படகுத் துறையிலிருந்து தஞ்சைக்கு நேர் வழியாகப் போவதென்றால், திருவையாறு நகரின் வழியாகப் போக வேண்டும். அந்த நகருக்குள் சென்றால், மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு ஆரவாரம் செய்வார்கள் என்பது நிச்சயம். ஆகையால்,

நண்பர்கள் இருவரும் அந்த நகர் வழியே புகாமல், சிறிது மேற்கே ஒதுங்கிச் சென்று காவேரி நதியைக் கடந்தார்கள். குடமுருட்டி நதியை அடைந்ததும், அதன் கரையோடு தஞ்சை ராஜ பாட்டையை நோக்கிச் சென்றார்கள்.

ஐந்து நதிகள் அடுத்தடுத்துப் பாயும் அந்த அற்புதமான பிரதேசத்தின் நீர்வளமும் நிலவளமும் மார்கழி மாதத்தில் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்தன. இரு கரையும் தொட்டுக்கொண்டு வெள்ளம் ஓடும் காலத்தைக் காட்டிலும், அரை ஆறு இனிய புனலும் அரை ஆறு மணல் திடலுமாகத் தோன்றிய காட்சி வனப்பு மிகுந்ததாயிருந்தது.

நதியின் இரு புறங்களிலும் தென்னையும், கமுகும், கதலியும், கரும்பும் செழித்து வளர்ந்திருந்தன. தோப்புகள் இல்லாத இடங்களிலெல்லாம் நன்செய் வயல்களில் பொன்னிற நெற் பயிர்கள் செந்நிறக் கதிர்களின் பாரந் தாங்காமல் தலை சாய்ந்து கிடந்தன.

இடையிடையே வாவிகளிலும் ஓடைகளிலும் தலை நிமிர்ந்து நின்ற தாமரைகளும் குமுதங்களும் செங்கழுநீர்களும் வர்ண சித்திரக் காட்சியாகத் திகழ்ந்தன.

இவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து வியந்து கொண்டு வந்த வந்தியத்தேவனை நோக்கிப் பொன்னியின் செல்வர், "நண்பரே! இவ்வளவு வனப்பும் வளமும் பொருந்திய இடம் இந்த உலகில் வேறு எங்கேனும் இருக்க முடியுமா? இப்படிப் பட்ட நாட்டின் சக்கரவர்த்தியாக முடி சூட்டிக் கொள்வது எவ்வளவு பெரிய பாக்கியம்? இந்தப் பாக்கியத்தைச் சில காலத்துக்கு முன்பு வரையில் நான் வேண்டாம் என்று மறுதளித்துக் கொண்டிருந்ததை நினைத்தால் எனக்கே வியப்பாயிருக்கிறது!" என்றார்.

"எனக்கு அதில் வியப்பு ஒன்றுமில்லை, ஐயா! அரச குலத்தவர்களின் சஞ்சல உள்ளத்தைப் பற்றி அடிக்கடி பெரியோர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன்!" என்றான் வந்தியத்தேவன்.



"நீர் ரொம்பவும் பொல்லாதவர்; அதோடு நன்றியும் இல்லாதவர். ஈழ நாட்டுப் போர்ப் படைக்கு உம்மைத் தளபதி ஆக்கியதற்கு இன்னும் நன்றி கூடச் செலுத்தவில்லை. என்னைச் சஞ்சல புத்தியுள்ளவன் என்று வசைகூறுகிறீர்!"

"சாதாரண மக்கள் விஷயத்தில் வசையாக இருப்பது அரச குலத்தவரிடையில் புகழுக்குக் காரணமாயிருக்கக் கூடும் அல்லவா? இன்றைக்கு ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்கிறீர்கள்; மறுநாள் அவனை மன்னித்துத் தளபதி ஆக்குகிறீர்கள். இத்தகைய சஞ்சல புத்தியினால் அரசர்களுடைய புகழ் அதிகமாகத்தானே செய்யும்? 'ஆகா! நம் மன்னர் எத்தனை கருணை உள்ளவர்?' என்று மக்கள் புகழ்வார்கள் அல்லவா?"

"ஆம், ஆம்! ஆனால் இன்றைக்குத் தளபதியாகச் செய்தவனுக்கு நாளைக்கு மரண தண்டனையும் விதிக்கலாம். அப்போது ஜனங்கள் என்னசொல்வார்கள்?"


"நடுநிலைமை தவறாமல் நீதி வழங்கும் மன்னர் பெருமான் என்றும், மனு நீதிச் சோழரின் புனர் அவதாரம் என்றும் சொல்லிப் பாராட்டுவார்கள்!"

பொன்னியின் செல்வர் கலகலவென்று சிரித்து விட்டு, "அப்படியானால், உமக்கு அளித்த வாணகப்பாடி இராஜ்யத்தையும் ஈழத்துச் சேனையின் தளபதி பதவியையும் நான் திரும்பப் பிடுங்கிக் கொண்டால், உமக்கு அதில் அதிசயம் ஒன்றுமே இராதல்லவா?" என்றார்.

"அதிசயப்படவும் மாட்டேன்; துயரப்படவும் மாட்டேன். இப்போது கூடத் தாங்கள் என்னை ஈழ நாட்டுக்கு அனுப்புவது எனக்குப் பெரிய தளபதி பதவி தரும் நோக்கத்துடனா அல்லது என்னை இந்த அழகிய சோழ நாட்டில் இருக்கக் கூடாது என்று தேசப் பிரஷ்டனுக்கும் நோக்கத்துடனா என்பது எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது!"

"உண்மையில் இவ்வளவு சாமர்த்தியசாலியான உம்மை எனக்கு முதன் மந்திரியாக்கிக் கொண்டு என் அருகிலேயே வைத்துக் கொள்ளவே எனக்குப் பிரியமாக இருக்கிறது. ஆனால்





★ யாழ்ப்பாணம் நகரில் ஐந்து லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப் போகும் புத்தகாலயக் கட்டிடத்தின் 'மாடல்' வடிவம் மேலேயுள்ள படத்தில் காட்சி தருகிறது. இந்தக் கட்டிடப் பிரதிமையின் அரங்கேற்று வைபவம் மார்ச் 8உ மாலை திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த வைபவத்துக்கென்றே விஜயம் செய்திருந்த யாழ்ப்பாண மேயர் ஸ்ரீ ஸான் சபாபதி அவர்களையும், மற்றும் விழாவில் கலந்து கொண்ட சென்னைப் பிரமுகர்கள் சிலரையும், இந்தச் சிற்பத் திறமை பொருந்திய மாடல் கட்டிடத்தைத் தயாரித்த ஆர்கிடெக்ட் ஸ்ரீ வி.எம். நரசிம்மனையும் படத்தில் காணலாம். இந்த விழாவில் பேசிய ஸ்ரீ ஸான் சபாபதி அவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் தமிழகத்துத் தமிழர்களுக்குமுள்ள கலாச்சார ஒற்றுமையை வற்புறுத்தி, "யாழ்ப்பாணம் தமிழ் நாட்டின் ஒரு பகுதியேயாகும்" என்றார்.

முதன் மந்திரி அநிருத்தர் உமக்காகத் தமது பதவியை விட்டு விலகிக் கொள்வார் என்று தோன்றவில்லை."

"அது ஒன்றுதான் காரணமாயிருந்தால், நானே முதன் மந்திரி அநிருத்தர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்."

பொன்னியின் செல்வர் நகைத்துவிட்டு, "இல்லை; வேறு காரணமும் இருக்கிறது!" என்றார்.

"அப்படித்தான் நானும் நினைத்தேன்."

"என்ன நினைத்தீர்?"

"தாங்கள் இப்போதெல்லாம் மனத்தில் ஒன்றை வைத்துக் கொண்டு, வெளியில் ஒன்று சொல்கிறீர்கள் என்று."

"வல்லத்தரசரே! தங்களுடைய குற்றச்சாட்டை மெய்ப்பிக்க ஓர் உதாரணம் சொல்ல முடியுமா?"

"நன்றாக முடியும். தங்களுடைய மகுடாபிஷேக வைபவத்துக்குத் தை மாத ஆரம்பத்திலேயே நாள் வைத்திருக்கிறது. அது தங்களுக்குத் தெரியும். அப்படியிருக்கும்போது, சற்று முன் நம்மைப் பிரிந்து சென்றவர்களிடம் 'நீங்கள் இல்லாமல் என் மகுடாபிஷேகம் நடைபெறாது' என்றீர்கள். அதைப் பற்றி நான் வேறு என்ன நினைப்பது?" என்று கேட்டான்.

பொன்னியின் செல்வர் மறுபடியும் நகைத்து விட்டு, "ஆமாம்; முன்னேயெல்லாம் நான் மனத்தில் தோன்றுவதை அப்படியே வெளிப்படையாகச் சொல்வது என்றுதான் வைத்துக் கொண்டிருந்தேன். வந்தியத்தேவரோடு சிநேகமான பிறகு மந்திர தந்திரங்களில் பயிற்சி பெற்று வருகிறேன்!" என்றார்.

"வீணாக எனக்குப் புகழ்ச்சி கூறுகிறீர்கள்! தங்களுக்குத் தெரியாத மந்திர தந்திரம் உலகில் வேறு என்ன இருக்க முடியும்? யானையின் காதில் ஓதிய மந்திரத்துக்கும் யானைப்பாகன் வேஷம் போட்டு உலகை ஏமாற்றிய தந்திரத்துக்கும் இணையானவை என்ன உண்டு?"

"அப்படியே இருக்கட்டும்! என்னிடமே நீர் இனி மந்திர தந்திரங்களைக் கற்றுக் கொள்ளலாம்."

"அவ்வாறு நான் அதிகமாகக் கற்றுக் கொண்டு விடப் போகிறேனே என்றுதான் என்னை இலங்கைக்கு விரட்டி விடப் பார்க்கிறீர்களோ?"

"நண்பரே! ஈழ நாட்டுக்குப் போவதில் தங்களுக்கு ஒரு வேளை விருப்பம் இல்லையா, என்ன?"

"யார் சொன்னார்கள்? இலங்கைக்கு அப்பால் இன்னும் தூரத்திலுள்ள இடங்களுக்குப் போகும்படி கட்டளையிட்டாலும் புறப்பட ஆயத்தமாயிருக்கிறேன். எவ்வளவு சீக்கிரம் அனுப்புகிறீர்களோ, அவ்வளவுக்கு மகிழ்ச்சி அடைவேன்!"

"என்னை விட்டுப் பிரிந்து போவதில் அவ்வளவு மகிழ்ச்சியா தங்களுக்கு?"

"ஆம், ஐயா! பேரரசர்களிடமிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறோமோ, அவ்வளவுக்கு நல்லது என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். தூரத்தில் இருந்தால்,

அரசர்களுடைய சிநேகத்தை இழந்து விடாமல் காப்பாற்றிக் கொள்ளலாம்."

"அப்படியானால், தாங்கள் ஏமாற்றத்துக்கு உள்ளாக நேரிடும்......"

"எவ்வளவு தூரம் போனாலும் தங்கள் சிநேகத்தை நீடித்துக் காப்பாற்றிக் கொள்ள முடியாது என்கிறீர்களா?"

"இல்லை; இல்லை. அதிக காலம் என்னைத் தாங்கள் பிரிந்திருக்க முடியாது என்று சொல்கிறேன். சில தினங்களுக்கெல்லாம் நானும் ஈழத்துக்கு வந்து தங்களுடன் சேர்ந்து கொள்வதாக உத்தேசித்திருக்கிறேன். தங்களை உடன் அழைத்துக் கொண்டு கடல்களைக் கடந்து அப்பாலுள்ள தீவாந்தரங்களுக்கெல்லாம் போகத் திட்டமிட்டிருக்கிறேன். நம்முடன் சமுத்திர குமாரியையும் அழைத்துப் போக முடியவில்லையே என்றுதான் வருத்தமாயிருக்கிறது!"

"ஐயா! என்னுடன் சேர்ந்து தாங்கள் தந்திர மந்திரங்கள் கற்றுக் கொண்டீர்கள். தங்களுடன் சிநேகமானதிலிருந்து நான் உண்மையைப் பேசுவது என்று விரதம் எடுத்துக் கொண்டேன். இப்போது என்னுடைய மனத்தில் உள்ளதைத் தங்களிடம் சொல்லட்டுமா?"

"தாராளமாகச் சொல்லுங்கள்!"

"என் நண்பர் சேந்தன் அமுதனிடமிருந்து,— தங்கள் சித்தப்பா மதுராந்தகத்தேவரிடமிருந்து,-சோழ சாம்ராஜ்யத்தைத் தாங்கள் எடுத்துக் கொள்கிறீர்கள். அதற்கு ஒரு மாதிரி நியாயம் உண்டு. தாங்களே முடி சூட வேண்டும் என்பது மக்களின் விருப்பம் என்று காரணம் காட்டலாம். ஆனால் அவரிடமிருந்து பூங்குழலியை அபகரித்திருந்தால், அது போன்ற பெருந் துரோகச் செயல் வேறு எதுவும் இருக்க முடியாது. அதற்கு நியாயமே சொல்ல முடியாது. சமுத்திரகுமாரி இப்போது மதுராந்தகத் தேவரின் தர்ம பத்தினி என்பதைத் தாங்கள் நினைவு வைத்துக் கொள்ளுங்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

பொன்னியின் செல்வர் கலகலவென்று சிரித்து விட்டு, "என்னைத் தசகண்ட இராவணனோடு சேர்த்து விடுவீர்கள் போலிருக்கிறதே!" என்றார்.

பின்னர், "தங்களுடைய நண்பருக்குப் பரிந்து தாங்கள் பேசுவது நியாயந்தான்! ஆனால், பூங்குழலியின் நிலைமை என்ன? அவள் என் சித்தப்பாவை மனமுவந்து கல்யாணம் செய்து கொண்டாளா?" என்று கேட்டார் அருள்மொழி வர்மர்.

"அதற்கு என்ன சந்தேகம்? கோமகனே! தாங்கள் இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகலாம். இந்தப் பூமண்டலம் முழுவதையும் வென்று ஒரு குடை நிழலில் கொண்டு வந்து ஆட்சி புரியலாம். ஆனால் பூங்குழலி அம்மையை மட்டும் அவருடைய விருப்பத்துக்கு விரோதமாக எந்தக் காரியமும் செய்யும்படி கட்டாயப்படுத்த முடியாது. செம்பியன் மாதேவியின் செல்வப் புதல்வரிடம் பூங்குழலி அம்மை கொண்டிருந்த அன்பின் ஆழத்தை நான் அறிந்து கொள்ளும் பேறு பெற்றேன். அதற்கு இணையான அன்பை இன்னும் ஓரிடத்திலேதான் கண்டிருக்கிறேன்!"

"அது எங்கே கண்டீர்கள்? என்னிடம் அதைப் பற்றிச் சொல்லலாம் என்றால், சொல்லுங்கள்!"

"கொடும்பாளூர் இளவரசி வானதியிடந்தான் கண்டேன்! அத்தகைய அன்பை வேறு எங்கே காண முடியும்?"

"பொய்! பொய்! உண்மை பேசும் விரதத்தை அதற்குள்ளே மறந்து விட்டீரோ? மனத்தில் ஒன்றை ஒளித்து வைத்துக் கொண்டு வெளியில் ஒன்றைத் திரித்துச் சொல்லுகிறீரே?"

"இல்லவே இல்லை, ஐயா! மனத்தில் எண்ணியதைத்தான் சொல்கிறேன்!"

"வேறு எங்கேயும் அத்தகைய காதலை நீர் கண்டதில்லையா?"

"இல்லை என்றுதான் சொல்கிறேனே?"

"அடே பாதகா! இரக்கமற்ற அரக்கனே! உனக்காக ஒரு பெண் தன் உயிரைத் தியாகம் செய்ய முன் வந்து மதியை இழந்து பிச்சியாகி யிருக்கிறாள்! அவளுடைய காதல் உனக்குப் பெரிதாகத் தோன்றவில்லையா?" என்று பொன்னியின் செல்வர் உண்மையான கோபத்துடன் கேட்டார்.

வந்தியத் தேவன் சிறிது நேரம் வரை மௌனமாக இருந்தான். பின்னர், "ஐயா! தாங்கள் காரண காரியங்களை மாற்றிச் சொல்கிறீர்கள். மணிமேகலையிடம் எனக்கு இரக்கம் இல்லாமற் போகவில்லை. அவளை நினைத்து நினைத்துக் கண்ணீர் வடிக்கிறேன். ஆனால் அவள் 'பிச்சி'யாகப் போனதற்குக் காரணம் நான் அல்ல; அவளுடைய சகோதரன் கந்தமாறன்தான்! மேலும் நாங்கள் இருவருமே அந்தப் பெண்ணுக்கு இறந்தவர்களாகிவிட்டோம். இனி அதைப் பற்றிப் பேசி என்ன பயன்?" என்றான்.

"நான் சற்று முன் கோபமாகப் பேசியதற்காக வருத்தப்படுகிறேன்..." என்று பொன்னியின் செல்வர் ஆரம்பித்தார்.

"எனக்கு அதில் வருத்தமும் இல்லை; வியப்பு மில்லை. இம்மாதிரி திடீர்க் கோபத்தை எதிர் நோக்கித்தான் சீக்கிரமே இலங்கைக்குப் புறப்பட விரும்புவதாகச் சொன்னேன்."

"தங்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு இன்னொரு காரணமும் உண்டு என்று சொன்னேன் அல்லவா?"

"ஆம், பிரபு!"

"சில காலம் தாங்கள் தூர தேசத்தில் இருந்து விட்டுத் திரும்பி வந்தால், ஒரு வேளை தங்களை மணிமேகலை அடையாளம் கண்டு கொள்ளலாம் என்று என் தமக்கையார் கருதுகிறார்!"

"தெரிந்து கொண்டேன், ஐயா! என்னைத் தூர தேசத்துக்கு அனுப்புவதில் தங்களை விட இளைய பிராட்டிக்கு அதிக சிரத்தை இருப்பதைத் தெரிந்து கொண்டேன்! நாம் யாரைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோமோ, அவர்களே அதோ வருகிறார்கள்!" என்று வந்தியத் தேவன் சுட்டிக் காட்டினான்.

குடமுருட்டி நதிக் கரையோடு வந்த அந்த நண்பர்கள் இருவரும் அச்சமயம் திருவையாற்றிலிருந்து தஞ்சாவூர் போகும் இராஜ பாட்டையை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த இராஜ பாட்டையில் முன்னும் பின்னும் பரிவாரங்கள் புடைசூழப் பல்லக்கு ஒன்று வந்து கொண்டிருந்தது. அதில் குந்தவை தேவியும் கொடும்பாளூர் இளவரசியும் வீற்றிருந்தார்கள். குதிரைகள் மீது வந்த நண்பர்கள் இருவரையும் பார்த்ததும் அப் பெண்மணிகளின் கண்கள் வியப்பினால் விரிந்தன; அவர்களுடைய முகங்கள் மகிழ்ச்சியால் மலர்ந்தன.

பொறுத்திருப்போம்! காலம் மாறும்!


பெண்என்று பூமிதனில் பிறந்து விட்டால்—மிகப்
பீழை இருக்குதடி தங்கமே தங்கம்!

— பாரதியார்.

அவள் அந்த அகல் விளக்கையே பார்த்துக்கொண்டிருந்தாள். அந்தத் தீபச் சுடர் நெளிந்து நெளிந்து எரியும் காட்சியையும் அதன் செந்நிற அழகையும் பார்த்துக் கொண்டே இருந்தாள். அவளைப் போலவே அந்த வீட்டில் பூச்சிகளும் அந்தத் தீபச் சுடரின் மீது மோகங் கொண்டன; காதல் கொண்டன! அந்தத் தீபச் சுடரினைச் சுற்றிச் சுற்றி வந்தன! பாவம்! அதன் வெம்மை தாங்க மாட்டாமல் அதிலே மடிந்து விழுந்தன!

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவளுக்குத் தன் நிலையும் அதுவேதான் என்று தோன்றுகிறது. காதலன் பிரிவு என்னும் துயரத்தில் வெம்பி மருகி வந்தாள். அந்தக் காதலனை மறந்துவிடலாம் என்றாலும் முடியவில்லை. மறுபடியும், இந்தப் பேதை உள்ளம் அவனையே நினைத்து வெதும்பியது! தனக்குக்கூட இந்த வீட்டில் பூச்சிகளின் கதிதானோ என்று ஏங்கினாள்!

அந்த ஏக்கத்தை அப்படியே அவள் அழகிய முகத்தில் கொண்டு வந்து விட்டார் நமது சித்திரக்காரர். ஆனால் அவளுடைய கதி வீட்டில் பூச்சியின் கதி ஆகாது என்பதை, அவளுடைய காதலனும் அவளைப் போலவே ஏங்கித் தவித்துக் கொண்டிருப்பதைக் காட்டி நமக்கு உணர்த்தியிருக்கிறார். 'பொறுத்திருப்போம்! காலம் மாறும்!' காதலர்கள் சந்திப்பார்கள்!



ஒரு சிறந்த 'கோடக்' காமரா

ரூ. 17/8/ மட்டுமே

நீங்கள் ஒருவேளை மறந்துவிடலாம்

—ஆனால், 'கோடக்' ஸ்னப்ஷாட்கள் மறந்துவிடாது!

உங்கள் குழந்தை, முதன்முதலில், தயங்கித் தயங்கி, தவழ்த் தவழ நடந்த அந்த இன்பமூறும் காட்சியும், அவன் உதட்டில் அன்று மலர்ந்த மலர்போலிருந்த புன்னகையும், இன்று கூட, மெய்போல், தற்பொழுது கண் முன் காண்பதுபோல் தோன்றுகிறது. வருடங்கள் முன்னேற, அக்காட்சியை, இன்று காண்பதுபோல், என்றும் மனக்கண் முன் தெளிவாக காண இயலாதே என்று நினைக்க எவ்வளவு வருத்தமாக இருக்கிறது!

உங்களுக்கு ஞாபகமூட்ட உங்களிடம் ஒரு சித்திரம் இருக்கிறதா? இல்லை, ஒன்றிருந்தானால் என்று ஆசைப்பட மட்டும் தான் செய்கிறீர்களா? இன்றே சிக்கனமான ஒரு 'கோடக்' காமராவை உபயோகித்து அக்காட்சியை படம் பிடித்துக்கொள்ளுங்கள்; அதனால், இந்த இன்பமான நாட்கள் என்றும் வாழட்டும்!

உங்கள் கோடக் வியாபாரியை இன்றே பாருங்கள்

கோடக் லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது)

பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்




'பிரௌனி' 127 காமரா — நீங்கள் குறி பார்த்து, பட்டனை அமர்த்திவிடுங்கள் அவ்வளவு தான். மிக எளிதில் உபயோகிக்கக்கூடியது. ஒவ்வொரு ரோல் பிலிமுக்கும் 8 அழகான படங்கள் கிடைக்கும். ரூ. 17/8/-

பலம்பொருந்திய தூக்கிக்கொண்டு போகும்படியான கேஸ் ரூ. 3/4/-



ஸிக்ஸ்—20 'பிரௌனி' காமராக்கள் — எளிது, நம்பிக்கை வாய்ந்தது, பார்வைக்கு அழகானது. இவை உலகமெங்கும் பிரியப்படுபவை என்பதில் என்ன அற்புதம்! ஒவ்வொரு பிலிமுக்கும் எட்டு பெரிய படங்கள் கிடைக்கிறது.

மாடல் C ரூ. 24/-



மாடல்கள் D யும் E யும் — இன்னும் சிறந்த அழகான படங்கள், "க்ளோஸ்-அப்" படங்களும் கூட பிடிப்பதற்கு — மிகக்குறைவான செலவில்; மாடல் E பிளாஷுடன் ஸ்னப்-ஷாட் களுக்கு சௌகரியமானது.

தூக்கிக்கொண்டு போவதற்கு கேஸ், மாடல்கள் C, D, E இவைகளுக்கு, கான்வாஸ் ரூ. 3/-

லெதர் ரூ. 6/-

மேல்கொடுத்திருக்கும் விலைகளில் விற்பனை வரி சேராது.

இன்னும் ஏராளமானவைகள்! எந்த பர்ஸுக்கும், எந்தத்தேவைகளுக்கும், பொருத்தமாக 'கோடக்' காமராக்கள் இருக்கின்றன. உங்கள் கோடக் வியாபாரியை விசாரியுங்கள் — காண்பித்துத்தருவார்!



பெண் பிடித்ததா!

கு.ப.சேது அம்மாள்

ஆபீஸிலிருந்து வந்த பாலசுந்தரம் வீட்டுக்குள் நுழையும் போதே நெய் வாசனை ‘கம்’மென்று மிதந்து வந்தது.

ஆடைகளை மாற்றி விட்டுக் கை, கால்களை அலம்பிக் கொண்டு சமையலறையில் புகுந்தபடி, “என்னம்மா விசேஷம், யாருக்கு விருந்து இன்று ராத்திரி?” என்று கேட்டான்.

அடுப்பங் கரையிலிருந்த ஜாங்கிரியில் இரண்டையெடுத்து ஒரு தட்டில் வைத்துப் பாலுவிடம் கொடுத்து, விதானமான குரலில் கர்வத்துடன் “சம்பந்திப்பேர் வருகிறார்கள்” என்றாள் ருக்மணி அம்மாள்.

“சம்பந்தியா! அது யாரது?” என்று கொட்டையாக விழித்தான் பாலு.

“ஆமாண்டா, ஜோலார்ப்பேட்டையிலே யிருந்து...” என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தாள் ருக்மணி அம்மாள்.

“ஏனம்மா, இதிலே என் இஷ்டம் என்கிறது ஒண்ணுமில்லையோ?” என்று சற்றுக் கோபமாகக் கேட்டான் பாலு.

ருக்மணியம்மாள் சிரித்துக் கொண்டே, “பக்ஷணத்தை எடுத்துக்கோ முன்னாடி. காப்பி சாப்பிடு. அப்புறம் பேசலாம்” என்று கூறினாள்.

“பக்ஷணம் இருக்கட்டும். நான் கேட்டதுக்குப் பதிலைக் காணோமே.”

“சொல்கிறேன். கேட்டுக்கொண்டே சாப்பிடு! என் இஷ்டமும், உங்கப்பா இஷ்டமும் கேட்டுக்கொண்டு எங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கல்லே — பெரியவர்களாகப் பார்த்துப் பண்ணி வைத்ததுதான். இப்போது என்ன குறைச்சல் நம்ம வீட்டுக்கு? அதுபோலே, நான் பார்த்துப் பண்ணி வைக்கிற பெண்ணைச் சந்தோஷமாகப் பண்ணிக் கொள்...” என்றாள் ருக்மணியம்மாள்.

பாலுவுக்குக் கோபம் பொங்கிற்று. பேசாமல் எழுந்து மாடிக்குப் போய் விட்டான்!

இதையெல்லாம் சாய்மான நாற்காலியில் சாய்ந்தவாறே கவனித்துக் கொண்டிருந்த துரைசாமி அய்யர், மெதுவாக எழுந்து உள்ளே வந்து “என்னடீது, பிள்ளையார் பண்ணப் போய்...?” என்று ஏதோ சொல்ல வாய் எடுத்தார்.

“எதையாவது சொல்லாதேயுங்களேன்! அப்பாவுக்கும், பிள்ளைக்கும் வாயிலே நல்ல வார்த்தையே கிடையாது...”

“அதற்கில்லை, இப்ப நாம் பிடிவாதமாகப் பண்ணி வைத்து விடுகிறோம். பின்னாடி...”

ருக்மணி அம்மாளுக்கு அளவு கடந்த கோபம் வந்தது.

“எனக்குத் தெரியாதா அது? குடும்பத்துக்கு ஏற்றதாயு மிருக்கணும், அவனுக்கும் ஒத்ததாகவும் இருக்கணும் என்றுதான் இதை நிச்சயம் பண்ணவேணும் என்கிறேன்” என்று அழுத்தமாகச் சொன்னாள்.

“அதெல்லாம் சரி! அவன் ஏன் மாட்டேங்கறான் பின்னே?” என்றார் துரைசாமி அய்யர்.

“அதெல்லாம் ரகசியம்! புருஷர்களிடம் சொல்லப்படாது. மிஞ்சிப் போனா என்ன; முகத்தை ‘உம்’முனு வைச்சிண்டிருப்பான், கல்யாணத்தில் மாலை மாற்றப் பெண் எதிரில் வருகிற வரைக்கும். அப்புறம் சூரியனைக் கண்ட தாமரை மாதிரி ஆயிடாதோ?”

“மழையைக் கண்ட தாமரை மாதிரி ஆகிவிட்டால் என்ன பண்ணுவாய்?” என்று கேட்டுக் கொண்டே பின்னால் நின்றான் பாலு.

“ஆகாது, ஆகாது! பந்தயம் வேண்டுமானால் வைப்போம். அரச மரம் சுற்றி, மீனாக்ஷி கோவிலிலே வரம் கிடந்து பெற்ற பிள்ளை நீ! தெரிஞ்சுதா! உன் மனைவியைக் கண்டு, முகம் மழையைக் கண்ட தாமரை மாதிரி போறாப்பலே பெண் தேடுவேனா என்ன? தேட மாட்டேன், அப்பா! என் இஷ்டத்துக்கு இந்தப் பெண்ணுக்குத் தாலி கட்டு. அவளை உனக்குப் பிடிக்காவிட்டால், உன் இஷ்டத்துக்கு இன்னொரு பெண்ணைப் பார்த்துப் பண்ணிக் கொள்.”

“அப்புறம் அப்பா இஷ்டத்துக்கு ஒண்ணு வேண்டாமா? கேலியாப் போச்சு உனக்கு இது, இல்லையா?” என்றான் பாலு கோபமாக.

“போடா பித்துக்குளி. வா, காப்பி சாப்பிடு. அவர்கள் வரத்துக்கு நாழியாச்சு, மூஞ்சியைத் தூக்கி வைச்சுக்காதே! ஆமாம், நாம் பார்த்துப் பண்ணுகிற காரியம் பழுதே ஆகாது. சொன்னதைக் கேளுடா கண்ணு, வா, காப்பி தரேன்” என்று செல்லமாக மகன் கையைப் பற்றிக் கொண்டு அழைத்தாள் ருக்மணி.

இஷ்டமில்லாமல் உள்ளே போய் டிபன், காப்பி சாப்பிட்டான் பாலு.

வழி வழியாக விருத்தியாகிக் கொண்டே வந்த மிட்டாதார் வீட்டு ஒரே வாரிசுதான் பாலசுந்தரம்.

ருக்மணியம்மாள் வீட்டுக்கு வந்து பதினைந்து வருஷங்கள் குழந்தைகளில்லாமல் இருந்து, ஒரு விரதம் பாக்கி யில்லாமல்

அநுஷ்டித்து, சங்கராச்சாரியாருக்குப் பிக்ஷை பண்ணிப் பிறந்த பிள்ளை பாலசுந்தரம்.

அகண்ட ஐசுவரியத்துக்கு ஒரே பிள்ளை; தாய் தந்தையின் செல்லப் பிள்ளை. பிள்ளையின் மனம் கோணாமல் பெற்றோரும், பெற்றோர் மனம் கோணாமல் பிள்ளையுமாக இந்த இருபத்து மூன்று ஆண்டுகளாக இருந்தவர்கள் அவர்கள்!

ஜோலார்ப்பேட்டை ஸ்டேஷன் மாஸ்டர் மகள் அமலாவின் ஜாதகத்திற்கும் பாலசுந்தரத்தின் ஜாதகத்திற்கும்—நல்ல பொருத்தமிருப்பதாகப் பார்த்த ஜோசியர்கள் எல்லாரும் ஏகோபித்த அபிப்பிராயம் சொன்ன பிறகு, ருக்மணியம்மாளும் துரைசாமி அய்யருமாகப் புறப்பட்டு ஜோலார்ப்பேட்டைக்குப் போய்ப் பெண்ணைப் பார்த்தார்கள்.

பெண்ணைப் பார்த்ததும் அப்படியே அள்ளி அணைத்து முத்தமிட வேண்டும் போலிருந்தது ருக்மணி அம்மாளுக்கு!

அமலாவின் தகப்பனார் சுந்தரராமய்யர் சாதாரணக் குடும்பஸ்தர். நாலு பிள்ளைகள், மூன்று பெண்கள் அவருக்கு. அமலா தான் தலைச்சன். முந்நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் குடும்பம் நடந்து கொண்டிருந்தது. பூர்வீகமாக ஏதோ கொஞ்சம் நிலமும், ஒரு வீடும்தான் அங்குள்ள ஆஸ்தி.

லக்ஷப் பிரபுவாக இருக்கும் துரைசாமி அய்யருடன் சம்பந்தம் செய்யத் தமக்கு யோக்கியதை இருக்கிறதா என்று தயங்கினார் சுந்தரராமய்யர்.

குப் போய்ப் பெண்ணைப் பார்த்தார்கள்.

பெண்ணைப் பார்த்ததும் அப்படியே அள்ளி அணைத்து முத்தமிட வேண்டும் போலிருந்தது ருக்மணி அம்மாளுக்கு!

அமலாவின் தகப்பனார் சுந்தரராமய்யர் சாதாரணக் குடும்பஸ்தர். நாலு பிள்ளைகள், மூன்று பெண்கள் அவருக்கு. அமலா தான் தலைச்சன். முந்நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் குடும்பம் நடந்து கொண்டிருந்தது. பூர்வீகமாக ஏதோ கொஞ்சம் நிலமும், ஒரு வீடும்தான் அங்குள்ள ஆஸ்தி.

லக்ஷப் பிரபுவாக இருக்கும் துரைசாமி அய்யருடன் சம்பந்தம் செய்யத் தமக்கு யோக்கியதை இருக்கிறதா என்று தயங்கினார் சுந்தரராமய்யர்.

ருக்மணியம்மாள் ஒரே போடாக, "நீங்கள் செய்தது அனந்தம். துளசி தளம் வைத்து, பெண்ணைத் தாரை வார்த்துக் கொடுங்கோ போதும். பெண் குணசாலியா யிருந்து விட



விளங்கணும். அதுதான் எனக்குப் பிரதானமே யொழிய, சீர்செனத்தி யில்லை" என்று மனத் திருப்தியோடு தீர்மானமாகச் சொன்னாள்.

அதற்குமேல் சுந்தரராமய்யரோ, அவர் மனைவி கோகிலமோ ஆட்சேபணை ஒன்றும் கூற முடியவில்லை. அரை மனத்துடன் அவர்கள் சம்மதம் கொடுப்பதைப் பார்த்து, "சம்பந்தியம்மா, பயப்படாதீர்கள்! தைரியமாகப் பெண்ணைக் கொடுங்கோ. இப்ப 'சரி, சரி' என்று விட்டு அப்புறம் அது இல்லை, இது இல்லை என்று குழந்தையைப் போட்டுப் பிச்சு எடுத்தால் என்ன பண்ணுகிறது என்று பார்க்கறேளா? இன்றைக்குச் சொன்னது தான் வார்த்தை! நாக்கு ஒன்று தான்! தயக்கமே வேண்டாம்!" என்றாள்.

"நான் பார்த்துக் கொண்டு, பிள்ளையைப் பார்க்க வாருங்கோ" என்று திருப்தியோடு சொன்னாள் ருக்மணி அம்மாள்.

"பிள்ளையைத்தான் புகைப் படத்தில் பார்த்து விட்டோமே" என்றாள் கோகிலம்.

"புகைப்படத்தைப் பார்த்தால் போதுமா, நேரே வந்து பாருங்கோ. அப்புறம் பெண்ணைப் பார்க்க அப்பாவும் பிள்ளையுமாகப் புறப்பட்டு வரச் சொல்கிறேன். தை பிறந்து முகூர்த்தம் வைக்கலாம்" என்று முடிவு செய்தாள் ருக்மணியம்மாள். "சந்தோஷம். அமலா அதிர்ஷ்டசாலி என்று ஜாதகம் பார்த்த எல்லாருமே சொன்னார்கள்......"

தான்! தயக்கமே வேண்டாம்!" என்றாள்.

"நான் பார்த்துக் கொண்டு, பிள்ளையைப் பார்க்க வாருங்கோ" என்று திருப்தியோடு சொன்னாள் ருக்மணி அம்மாள்.

"பிள்ளையைத்தான் புகைப் படத்தில் பார்த்து விட்டோமே" என்றாள் கோகிலம்.

"புகைப்படத்தைப் பார்த்தால் போதுமா, நேரே வந்து பாருங்கோ. அப்புறம் பெண்ணைப் பார்க்க அப்பாவும் பிள்ளையுமாகப் புறப்பட்டு வரச் சொல்கிறேன். தை பிறந்து முகூர்த்தம் வைக்கலாம்" என்று முடிவு செய்தாள் ருக்மணியம்மாள். "சந்தோஷம். அமலா அதிர்ஷ்டசாலி என்று ஜாதகம் பார்த்த எல்லாருமே சொன்னார்கள்......"

"பஹுஜன வாக்கு என்றைக்குமே பலிக்கும்!" என்று கோகிலம் சொன்னதை ஆமோதித்தாள் ருக்மணியம்மாள்.

* * *

"கண, கண, கண, கண!"

பத்திரிகை படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் அமலா. எழுந்து போய் டெலிபோன் ரிஸீவரைக் கையிலெடுத்துக்கொண்டு "ஹலோ, யார் பேசுவது?" என்றாள்.

"அக்னி சாக்ஷியாக உன்னைக் கைப்பிடித்த பாலசுந்தரம் பேசுகிறேன்! இரவு மெயிலுக்கு நீலகிரியிலிருந்து அம்மா அப்பா வருகிறார்களாம், தந்தி வந்திருக்கு!"

"சரி! நீங்கள் ஸ்டேஷனுக்குப் போகிறீர்களா......" என்று கேட்டாள் அமலா.


மார்ச் 12 முதல்
தமிழ் நாடெங்கும்
கெம்பராஜின்
கற்கோட்டை
தமிழ்
கெம்பராஜ் · கிருஷ்ணகுமாரி
சாரங்கபாணி · B.R. பந்துலு
டைரக்ஷன்: கெம்பராஜ்

எல்லாரும் வருகிறார்கள். வறுத்த காப்பிக் கொட்டை இருக்கா?'' என்று கேட்டாள்.

"கொஞ்சம்தான் இருக்கு......'' என்று கூறிக்கொண்டே காய்கறி தூக்குக் கூடையைக் கொண்டுவந்து வைத்தாள் ஜானகி.

"சரி, இந்தக் குமட்டியிலே பத்து பலம் காப்பிக் கொட்டையைப் போட்டு வறு. வாழைக்காய் வறுவலுக்குக் காணாது. காரக் கறியாகப் பண்ணு. சாம்பாருக்கு என்ன போடுகிறாய்?''

"வெங்காயம் இருந்ததே."

"வெங்காயம் வேண்டாம். அம்மா சாப்பிடமாட்டாள். இந்த வெண்டைக்காயைப் போடு, ரஸம் வை. டாங்கர்தான் இருக்கவே இருக்கு. அப்பளாம் அவர்கள் வந்த பிறகு பொரிச்சுக்கலாம். என்ன?''

"எத்தனை பேருக்குச் சமையல்?''

"அம்மா, அப்பா, சாந்தா, ரவி நாலு பேர் வருகிறார்கள்'' என்றாள் அமலா.

"சாந்தாவும் ரவியும் அம்மா கிட்டேயா இருக்கிறார்கள்?'' என்று கேட்டாள் ஜானகி.

"ஆமாம். என்னைவிட அம்மாவுக்குச் சாந்தாதான் இப்போ ஓசத்தி! ரவி மேலேயும் அம்மாவுக்குக் கொள்ளை ஆசை! அவர்கள் பரமனூருக்கு வந்து வருஷமாச்சே!'' என்று பெருமையோடு சொன்னாள் அமலா.

"ஆமாம். ஆனால், உங்க வீட்டுக் குழந்தைகள், எல்லாருமே சொல்லுறேன்—கட்டிச் சமத்துத்தாம்மா! அதிலேயும் சாந்தாவும், நீயும்......'' என்று சிலாகித்தாள் ஜானகி.

"சரி, காப்பிக் கொட்டையைச் சீக்கிரம் வறுத்து வைச்சுட்டு வா. கடைத் தெருவுக்குப் போய் வந்தப்புறம் அடுப்பு மூட்டினால் போதும்'' என்றாள் அமலா.

"ஆமாம், அவர்கள் ராத்திரி பத்தரை மணிக்குத்தானே வருவார்கள்? எட்டு மணிக்கு அடுப்பு மூட்டினால் போதும்'' என்று சொல்லிக் கொண்டே வாணலியை அடுப்பில் போட்டாள் ஜானகி.

மாமியார் மாமனார் வருகிறதாகச் செய்தி கிடைத்ததும், வீடு முழுதும் 'நறுவிசு' படுத்துவதில் முனைந்தாள் அமலா. கூடத்து அலமாரி, சமையலறைச் சாமான், பீரோக்கள், பாத்திரம் கவிழ்க்கும் ஷெல்புகள் எல்லாம் கலைந்து கிடந்ததை ஒழுங்கு படுத்தி அடுக்கி வைத்தாள். சுவாமி அலமாரியை நன்றாகத் துடைத்து அழுக்கைப் போக்கினாள். கயிற்றுக் கொடியில் தொங்கிக் கொண்டிருந்த துணி மணிகளை எடுத்து ஒழுங்காக மடித்துப் போட்டாள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டே இருந்த ஜானகி விஷமமாக ''பார்த்தாயா! இதுக்குத்தான், பெண்ணுக்கொரு மாமியும், பிள்ளைக்கொரு வாத்தியும் வேணும் என்று சொல்லுவது!'' என்று சொல்லிச் சிரித்தாள்.

"ஆமாம், 'வயசுப் பெண்கள் இரண்டு பேர் இருந்து கொண்டு வீடு இருக்கிற நாருக்கைப் பாரு!' என்று எங்கம்மா வந்ததும் வராததுமாகக் கேலி செய்வாரேன்னு பயம் தான்!'' என்று பதில் சொன்னாள் அமலா.

"கடைத்தெருவிலே என்ன வாங்கணும்?''

"காய்கறி, கொஞ்சம் மளிகை, ஷாப் சாமானும் வாங்கணும். காப்பிக் கொட்டை வறுத்தாச்சா, அடுப்பைத் தணி. இதோ முகம் அலம்பிக் கொண்டு வருகிறேன்'' என்று முற்றத்தில் இறங்கினாள் அமலா.

வாசலில் கார் வந்து நின்றது.

"இதோ! அவரும் வந்துட்டார்'' என்று உற்சாகமாகக் கூறினாள் அமலா.

பாலு உள்ளே வந்ததும், ''சபாஷ்!'' என்றான். அமலா அவனைப் பார்த்து "எதுக்கு 'சபாஷ்' போடறேள்?'' என்று கையில் சோப்பைக் குழப்பியபடி கேட்டாள்.

"அம்மா வரான்னதும் வீடு பார்வைக்கு 'ஜம்' என்று ஆகிவிட்டது! பாலு வந்தா—தூங்கி வழிந்து கொண்டு — எழுந்திருக்கக் கூட மாட்டே!'' என்று பரிகாசம் செய்தான் பாலு. பொய்க் கோபத்துடன் பாலுவை நெடு நோக்குடன் பார்த்தாள் அமலா.

வெட்கத்தால் முகம் சிவந்துவிட்ட அமலாவைப் பார்த்து, "கோபிச்சுக்காதே அமலா கல்யாணி! சும்மா - விளையாட்டுக்காகச் சொன்னேன்!...'' என்று கூறிப் பாலு மாடிப் படி யேறியவாறே கண்ணைச் சிமிட்டினான்.

ஜானகி அமலாவை அணுகி, ''கடைத் தெரு காலைக்குத் தானே?'' என்று ரகசியமாகக் கேட்டாள்.

"ஆமாம், கொஞ்சம் காப்பி கலந்து வை, வருகிறேன்'' என்று கூறிவிட்டு முகம் அலம்பி நெற்றிக்கு இட்டுக் கொண்டு, சமையலறைக்கு வந்து காப்பியை எடுத்துக்கொண்டு மாடிக்குச் சென்றாள் அமலா.

வாசல் பக்கத்திலிருந்த பன்னீர், மல்லிகை மலர்களின் மணத்தை இழுத்துக் கொண்டு வரும் தென்றலை நுகர்ந்து கொண்டு காற்றுட வராந்தாவில் நின்று கொண்டிருந்தான் பாலு.

"ஏன் இன்று சீக்கிரம் வந்து விட்டீர்கள்?'' என்ற அமலாவின் குரல் கேட்டுத் திரும்பினான் பாலு.

"காரியமாகத்தான்!''

"போங்கள்! வேறென்ன வேலை உங்களுக்கு? நல்லவேளையாகப் போச்சு! ஐந்து நிமிஷம் பொறுத்து வந்திருந்தால் வீட்டைப் பூட்டிக் கொண்டு பஜாருக்குப் போயிருப்பேன்!'' என்றாள் அமலா.

அவள் கையிலிருந்த காப்பியை வாங்கி உறிஞ்சிக் கொண்டே ''சாப்பிட வேறு ஒன்றுமில்லையா?'' என்றான் பாலு.

"பண்ணி வைத்துக் கொண்டு கெஞ்சினால் தொடவே மாட்டீர்கள்! பண்ணாத அன்று சோதனை! என்ன வேணும் உங்களுக்கு?'' என்று கிளிபோலக் கொஞ்சினாள் அமலா.

"'ஒண்ணும் பண்ணலே' என்று கூறி விட்டு மறுபடி, 'என்ன வேணும்' என்று

ஏன் கேட்கிறாய்?'' என்று அவள் கன்னத்தைக் கரைத்தான் பாலு.

"போகிறது! மழையைக் கண்ட தாமரை மாதிரி இல்லாமல், அம்மா தேடின பெண் உனக்குத் திருப்தியாயிருக்கிறாள் அல்லவா?'' என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார்கள் பாலுவும், அமலாவும்!

"இப்பொழுதுதான் எனக்கு ஒரு விஷயம் தெரிய வந்தது, அம்மா! தாய் தகப்பனார்களால் நல்ல பெண்ணாகவும் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்க முடியும் என்பதுதான் அது!'' என்று கூறிவிட்டு, பாலு சட்டென்று விலகி நின்று, "என்ன அம்மா, மெயிலுக்கு நீ வருவதாகத்தானே தந்தி கொடுத்து இருந்தாய்?'' என்று கூறி அவளை வரவேற்றான்.

அமலா மாமியாரை நமஸ்கரித்தாள்.

"மகராசியா, பெத்துப் பெருகி நன்றாக இருக்கணும்! என்ன கேட்டாய் பாலு, மெயிலுக்கு வருவதாகத்தானே தந்தி கொடுத்திருந்தாயே என்கிறாயா? இப்போது நீயே சொல், மெயிலுக்கு வந்தால் இந்தக் கர்ணாம்ருதத்தைக் கேட்கிறது எப்படி?'' என்று கேட்டு விட்டுக் கலகலவென்று சிரித்தாள் ருக்மணியம்மாள்.

"அழகாயிருக்கு! பிள்ளையையும், மாட்டுப் பெண்ணையும்தான் கேலி பண்ணுவாளாக்கும்'' என்றான் பாலு.

துரைசாமி அய்யர் வருவதைக் கண்டு பாலு முன் சென்று வரவேற்று, "வாருங்கள், அப்பா! மெயிலுக்கு வருவதாக அல்லவா தந்தி கொடுத்திர்கள்?'' என்று கேட்டான்.

"ஆமாண்டா! முதலிலே அப்படித்தான் உத்தேசம். அப்புறம் இந்த வண்டியிலே வந்தால் காலா காலத்தில் வீட்டுக்கு வந்து விடலாம் என்று புறப்பட்டு விட்டேன். குழந்தை சௌக்கியமா இருக்காளாடா?'' என்று அமலாவைப் பற்றி க்ஷேமம் விசாரித்தார் துரைசாமி ஐயர்.

ரவி ஓடி வந்து அமலாவைக் கட்டிக் கொண்டு "அக்கா!'' என்றான்.

சாந்தா புன்முறுவலுடன், "அக்கா, அத்திம்பேர் சௌக்கியம்தானே?'' என்று கேட்டுக் கொண்டு அங்கு தோன்றினாள்.

"டேய் பாலு! நம்ப அமலாவை விடச் சாந்தா எல்லாவற்றிலும் ஒரு படி மேலாகத்தான் இருக்கிறாள்! என்ன, உனக்கும் அவள் மேலே அபிமானம்தான். நான் சொல்வதைக் கேளு. அவள் கழுத்திலேயும் ஒரு தாலியைக் கட்டி விடு. அவளும் நம்மவளாகி விடுவாள்...!''

எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள்.

பாலுவும் விடவில்லை. "ஏன், சாந்தா மட்டும் என்ன, சுசீலாவையும் கூப்பிடு. இரண்டு தாலியாகப் பண்ணச் சொல்லு! அவர்கள் வீட்டுப் பெண்கள் எல்லாமே நம்ம வீட்டுக்கு வந்து விடட்டுமே! ஆசையைப் பாரு கிழவிக்கு!'' என்று அமலாவைப் பார்த்துச் சிரித்தான் பாலு.

கொத்தமங்கலம் சுப்புவுக்குப் பாராட்டு

காந்தி மகான் அமரராகி ஆறு ஆண்டுகளாகி விட்டன. ஆயினும் காந்தி மகானுடன் உப்பு சத்தியாக்கிரகப் போரில் கலந்து கொண்ட நாட்களையும், ஸைமன் கமிஷனை எதிர்த்துப் போராடிய நாட்களையும், தந்தை மோதிலால் தனயன் ஜவாஹருக்குக் காங்கிரஸ் அக்கிராசன பீடம் வழங்கிய நாட்களையும், மீண்டும் நம் கண் முன் கொண்டு வந்து காட்டுகிறார், ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு காந்தி மகான் கதை வாயிலாக.

மேலும் ஜெமினி ஸ்தாபனத்தைச் சேர்ந்த கொத்தமங்கலம் சுப்புவுக்கு "ஔவையார்" படத்தை "டைரக்ட்" செய்யும் சிறந்த வாய்ப்பும் கிட்டியது. அருமையான வசனங்களும் பாடல்களும் செய்து தமிழ் மக்களின் உயர்ந்த பாராட்டுக்கு உரியவராய் இருக்கிறார் ஸ்ரீ சுப்பு. எனவே கொத்தமங்கலம் சுப்பு அவர்களுக்கு, சென்ற மார்ச்சு மீ 6-ல விவசாய மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் தலைமையில் சென்னை செயின்ட் மேரிஸ் மண்டபத்தில் ஒரு பாராட்டு விழா நடந்தது. விழாவுக்கு ஏராளமான பிரமுகர்களும், பெண்மணிகளும் வந்திருந்தனர். நம் முதன் மந்திரி ராஜாஜி இவ்விழாவுக்கு விஜயம் செய்து சிறப்பித்தார்.

திரு சின்ன அண்ணாமலையின் வரவேற்புரையுடன் பாராட்டு விழா தொடங்கியது. திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி அய்யரவர்கள் கொத்தமங்கலம் சுப்புவுக்குப் பொன்னாடை போர்த்தி, அவருடைய பணிகளைப் பாராட்டிப் பேசினார்.

திரு ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்கள் ஒரு வெள்ளிப் பாராட்டுக் கேடயத்தைக் கொடுத்து, 'சுப்புவின் தமிழ்ச் சேவைக்குக் கெடுதலாக வரும் சக்திகளைத் தடுத்துத் தற்காத்துக் கொள்ள உதவுவதாக' என்று வாழ்த்தினார்.

ஜெமினி அதிபர் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அவர்கள் சுப்புவின் இனிய சுபாவத்தையும், சலியா உழைப்பையும், பதினைந்து ஆண்டுகளாக ஜெமினி ஸ்தாபனத்தில் இடை விடாது தொண்டாற்றி வரும் சிறப்பையும் பெரிதும் பாராட்டினார்.

தமிழறிஞர் திரு ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் கொத்த மங்கலம் சுப்பு தமிழ்ப் பண்பாட்டுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் காந்தி மகான் கதை மூலமாகவும், ஔவையார் படத்தின் மூலமாகவும் செய்துள்ள தொண்டைப் புகழ்ந்தார்.

ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள், ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன், ஸ்ரீ டி. செங்கல்வராயன் முதலியவர்களும் இந்த விழாவில் பங்கு பற்றிப் பேசினார்கள்.

சென்னைப் பாக்கு ஏற்றுமதி வர்த்தகர்களின் சார்பாக ஸ்ரீ எம். ஆர். கணேசன் அருமையான வாழ்த்துப் பத்திரம் ஒன்றை அளித்தார். பல தேசிய வாலிபர் சங்கங்களின் சார்பாகவும், மாதர் சங்கங்களின் சார்பாகவும், பாமாலைகளும் பூமாலைகளும் வழங்கப்பட்டன.

தம்மைப் பாராட்டிப் பேசிய அன்பர்களுக்கும், பொது மக்களுக்கும் உள்ளத்தில் பொங்கிய நன்றி கண்களில் ஆனந்த பாஷ்பமாகப் பெருக, கொத்தமங்கலம் சுப்பு சபையோருக்குத் தக்க முறையில் நன்றி ததும்பிய வார்த்தைகள் பகர்ந்தார்.

கடைசியாக, "கல்கி" ஆசிரியர் கொத்தமங்கலம் சுப்புவின் காந்தி மகான் கதையின் சிறப்பையும் அதை அவரே பாடிக் காந்தீயத்தை நாட்டில் மங்க விடாமற் செய்து வரும் பணியையும் பெரிதும் பாராட்டிப் பேசினார்.

இந்தப் பாராட்டு விழா சம்பந்தமான சில காட்சிகளை எதிர்ப் பக்கத்தில் காணலாம்.



* நாங்கள் அதிக அளவு வேலை செய்கிறோம்



கான்டீன் நிறுவப்பட்டது முதல்

எல்லாவகை தொழிலாளருக்கும் — ஆபீஸில், வேலை நிலையத்தில், கான்டீனில், தேநீர் எப்போதும் கிடைக்கவேண்டும். முற்பகல், பிற்பகலில் தேநீர் பருக ஓய்வளிப்பதன் பலனை வர்த்தக, தொழில் தலைவர்கள் உணர்வர். தெம்பூட்டும் இப் பானத்தைப் பருக செலவிடும் 5 நிமிஷ நேரம், பிறகு பெருமளவு உற்பத்தியைப் பெருக்கும் என்பதை அவர்கள் அறிவர்.

* இந்தியா முழுதிலும் மத்திய டீ போர்ட் கான்டீன்களில் தினசரி 13,06,414 கோப்பை தேநீரை தொழிலாளர் பருகுகின்றனர்

தேநீர் ஒவ்வொருவருக்கும் புத்துயிரூட்டுகிறது.

மத்திய டீ போர்டு வெளியீடு.

CTB. 21 T

சோதிட அநுபவங்கள்

சென்ற மார்கழி மாதம் எங்கள் வீட்டில் எல்லோரும் 'இராமேசுவரம்' செல்ல எண்ணி 15-ல் புறப்பட ஆயத்தமானார்கள். எனவே அன்று முதல் ஐந்து நாட்கள் வரை கல்லூரிக்கு லீவு கொடுத்து விட்டுத் திரும்புகையில் எதிரில் சோதிட சாஸ்திர நிபுணர் ஒருவரிடம் எனது வருங்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என அவரிடம் சென்றேன்.

அவர் எனது ஜாதகத்தைப் பார்த்துத் தங்களுக்குச் சமீபத்தில் தண்ணீர்க் கண்டம் ஒன்று வரவிருக்கிறது என்றும் எனது படிப்பைப் பற்றியும் கூறினார். ஆனால் நான் அவர் சொன்னதைச் சிறிதும் மதிக்காமல் 15-ல் இரவு வீட்டாருடன் இராமேசுவரம் சென்று விட்டேன். அன்று கடைசி நாள். நான் கடைசியாகக் குளிப்பதற்காகச் சமுத்திரத்தை யடைந்தேன். குளித்துக் கொண்டிருக்கும் போது ஒரு பெரிய அலை வந்து சிறிது தூரம் இழுத்துக் கொண்டு செல்லவே, அலறிக் கொண்டே சமுத்திரத்தில் மூழ்கினேன். ஆனால் கடவுள் கிருபையினால் செம்படவர்கள் சிலர் என்னைப் பிடித்துக் கரையில் இட்டார்களாம். கண்ணைத் திறந்து பார்க்கும் போது நான் ஒரு டாக்டர் வீட்டிலிருப்பதையும், டாக்டர் என் தாயாருக்கு யாதொரு கவலையும் இல்லை எனக் கூறுவதையும் அறிந்தேன். பிறகு யாவரும் மதுரையை அடைந்தோம். அன்றே நான் சோதிடர் கூறியது உண்மை என அறிந்தேன். எனவே சோதிடத்தில் எனக்கு அபார நம்பிக்கை.

மதுரை
15—2—54 கே. வி. ஜோதிலால்

●

சோதிடர்கள் இன்ன கிரகம், இன்ன நிலையில் இருப்பதால் இன்னின்ன கஷ்டங்கள் எல்லாம் சம்பவிக்கும்; அவையெல்லாம் வராமல் தடுக்க ரூபாய்கள் 200, 300, 1000 செலவில் ஹோமம், சாந்தி முதலியன செய்து கிரகங்களுக்குப் பிரீதி செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்களே, அதை நினைத்தால் சிரிப்பதா அல்லது பரிதாபப்படுவதா என்று தெரியவில்லை. கேவலம் சில ரூபாய்கள் செலவு செய்து நமக்கு வரப்போகும் கஷ்ட துக்கங்களை யெல்லாம் வராது தடுத்து விட முடியுமானால், உலகில் கஷ்டமென்பதே இல்லாமல் போய்விடுமே! மனிதன் கிரகங்களுக்குப் பிரீதி செய்வதனால் ஆரோக்கியத்தையும் பொருளையும் இவ்வளவு சுலபமாக அடைந்து விடுவது சாத்தியமாகுமானால் உலகிலே நோயாளிகள், பிச்சைக்காரர்கள் யாருமே இல்லாமல் உலகமே குபேரபட்டினம் ஆகிவிடாதா! நாளை நடக்கப் போவதைச் சோதிடம், ஆரூடம், ரேகை சாஸ்திரம் முதலியவைகளின் உதவியால் நாம் இன்றே அறிந்து கொண்டு விட்டோமானால் உலகில் சகல சக்திகளும் நம்முடையவை யாகி விடுமே.

பிரபலமான ஜோஸ்யர் ஒருவர் என் சினேகிதிக்கு அவள் பிறந்தவுடனேயே நாலு சகோதரர்கள் உண்டு என்று எழுதிக் கொடுத்தார். இன்று அவளுக்கு 29 வயதாகியும் அவளுக்கு உடன் பிறந்தவர்களே யாருமில்லை. அவள் ஜாதகம் செவ்வாய் தோஷ ஜாதகம். அவளது 11-வது வயதில் அவளுக்கு மணம் செய்வித்தார்கள். எப்படி! ஏகப்பட்ட சோதிடர்கள் பார்த்து, வெகு நன்றாகப் பொருந்தியதாகச் சொன்ன ஒரு ஜாதகனுக்குத்தான். ஆனால் விவாக மானபின் சில மாதங்கள்கூட அவனது ஆயுள் நீடிக்கவில்லை.

ஓரிரு வருடங்கள் கழிந்து, ஜாதகப் பொருத்தமே பாராமல், மனப்பொருத்தத்தையே ஆதாரமாகக் கொண்டு, செவ்வாய் தோஷமில்லாத ஒருவருக்கு அவளை மணம் செய்வித்தார்கள். அவர்கள் வீட்டில் இன்று வரையில் தாம்பத்ய கலகமோ மனஸ்தாபமோ இல்லாது வாழ்க்கை சந்தோஷமாக நடந்து வருகிறது.

சில வருடங்களுக்கு முன்பு அவளது குழந்தைகளில் ஒன்று மிகவும் நோய்வாய்ப் பட்டிருந்தது. அவர்களுக்குப் பழக்கமான சோதிடர் ஒருவர் அந்தக் குழந்தையின் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு, "இக்குழந்தைக்கு 80-வயது வரை தீர்க்கமான ஆயுளும், நோயற்ற வாழ்வும் உண்டு. அதன் மத்தியில் என்னதான் நேர்ந்தாலும் சாவு பயமே கிடையாது. அப்படி ஏதாவது இக்குழந்தைக்கு நேர்ந்தால் நான் என் தொழிலையே விட்டுவிடுகிறேன்" என்று அடித்துச் சொன்னார். நான்கே நாட்களில் அக்குழந்தை போய் விட்டது. சோதிடர் மட்டும் தம் தொழிலை விடவில்லை.

பம்பாய்
29—1—54 ஜானகி வைத்தியநாதன்

●

நான் தமிழ் நாட்டில் ஓர் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவன். பொது மராமத்து இலாக்காவில் சிறு சர்க்கார் உத்தியோகம் வகித்து வருகிறேன். நான் தஞ்சாவூர், திருச்சி, தென்னாற்காடு, மைசூர், கடப்பை, சென்னை, திருநெல்வேலி ஜில்லா முதலான இடங்களில் வேலை பார்த்துக் கொண்டு வந்திருக்கிறேன். என் உத்தியோக மாற்றல் விஷயமாகப் பல திறமை வாய்ந்த சோதிடர்களைக் கேட்டிருக்கிறேன். சோதிடர்கள் சொன்னபடி சிறிதளவும் நடைபெறவில்லை. எனக்குப் பெண்ணைக் கொடுத்திருப்பவர் சோதிடத்தில் மிக நம்பிக்கை உள்ளவர். எனக்கு விவாகமாகிப் பத்தொன்பது ஆண்டு ஆகிறது. பல சோதிடர்கள் சொன்னபடி மக்கட் பேறும் ஏற்படவில்லை. என் தாய் தந்தை மரண விஷயமாகச் சோதிடர்கள் சொன்னவை யெல்லாம் நடைபெறவில்லை.

சோதிடத்தில் நம்பிக்கை வைக்காமல் மனோ வாக்குக் காயங்களால் பிறருக்குக் கெடுதல் நினைக்காமல் வாழ்ந்து வந்தால் சந்தோஷம் ஏற்படும்.

ஸ்ரீவைகுண்டம்
31—1—54 சிதம்பரம்

●

இந்த உலகத்தில் எதை வேண்டுமானாலும் நம்புங்கள். கடும்புயலையும் கள்ள மார்க்கெட்டையும் கொலை பாதகனையும் கூட நம்பலாம்—ஆனால் ஜோதிடத்தை நம்பாதீர்கள்! எனது வாழ்க்கையில் நான் கண்ட உண்மை இது. முழுக்க முழுக்க ஏமாந்தேன், ஜோசியத்தில்!

ஜோசியத்தை நம்பி இன்பக் கோட்டைகள் கட்டினார்கள் அந்தத் தம்பதிகள். இன்ப மயமான, மேன்மையான நீண்ட வாழ்க்கை அவர்கள் வாழ்வார்கள் என்று பல மேதாவிகளின் ஜோசியமெல்லாம் இடிந்து. தகர்ந்து போயிற்று. அன்றைய தனது நக்ஷத்திர பலனில் தனக்கு யாத்திரை ஏற்படுமென்று போட்டிருப்பதாகக் கணவன்



கண் காட்சியில் பரத நாட்டியம்

கும்பகோணம் நகர சபையார் நடத்திய கண் காட்சித் திருவிழாவில் பிப்ரவரி பதின்மூன்றும் தேதி ஓர் இனிய நிகழ்ச்சி நடந்தது. அன்று மாலை கண் காட்சி கலை மண்டபத்தில் குடந்தை ஹோமியோபதி டாக்டர் திரு வி. ஆர். மூர்த்தி அவர்களின் புத்திரிகள் குமாரி சாருபாலா, செல்வி இந்துபாலா இருவர்களின் பரத நாட்டியம் நடந்தது. கலை மண்டபம் நிறைந்து ததும்பிய அந்த ரஸிக மகா சபையில் குமாரி சாருபாலாவும், செல்வி இந்துபாலாவும் "மாலைப் பொழுதினிலே" என்ற பாட்டுக்கு அபிநயம் பிடித்த போது சபையோர் "சபாஷ்" என்று சொல்லிக் கரகோஷம் செய்தனர்.

குமாரிகள் இருவரும் இந்தப் பாடலுக்குப் பொருத்தமாக உடை அலங்காரம் செய்து கொண்டு அபிநயம் பிடித்தனர். கழுத்தில் மலர் மாலை புரளக்கையில் வேல் எடுத்துக் கொண்டு முருகன் மேடைக்கு வந்தார். தன்னை நினைத்து ஏங்கும் பெண்ணுக்குப் பக்கத்தில் மலர்ந்த முகத்துடன் வந்து நின்ற காட்சியைச் சபையோர் பெரிதும் அநுபவித்தனர். இப்படி ரஸித்து மகிழும்படி குழந்தைகளுக்கு அபிநயம் சொல்லிக் கொடுத்த நடன ஆசிரியர் திரு டி. எஸ். ஷண்முக சுந்தரம் பிள்ளையைச் சபையோர் பெரிதும் பாராட்டினர். * * *

மனைவியிடம் சொன்னான். லீவு முடிந்து அருமை மனைவியைப் பிரிந்து ஊருக்குச் செல்லும் நாளும் வந்து விட்டது. ஆனால் அதே தினத்தின் இரவில் அவரது யாத்திரை சுவர்க்க லோகத்துக்காக இருந்தது. அவர்களுக்கு ஏழு குழந்தைகள் பெறும் பாக்கியம் என்ற ஜோசியர் எடுத்துச் சொன்னது ஏட்டுச் சுரைக்காயாக முடிந்தது. கார் விபத்து நேர்ந்தது; அவரது உயிர் உடலை நீத்துச் சென்றது. எந்தச் சோதிடருக்கும் அன்று அவருக்கு விபத்தோ ஆபத்தோ உண்டு என்று சொல்லும் சாமர்த்தியம் இல்லை. ஏன் இப்பேர்ப்பட்ட முடிவு அவருக்கு அற்பாயுளில் நிகழ்ந்தது என்று கேட்டால் — அவன் குழந்தைக்குக் கர்ம தசை என்பதே சிறிதுகூட இல்லையாம். மாங்கல்ய பாவம் வைரம்போல இருக்கிறதாம் அவளுக்கு. அவரது ஆயுளோ 70 வயது! இது ஏற்பட்டது அகாலமிருத்தியு! காலமிருத்தியு அல்ல! எப்படி யிருக்கிறது ஜோசியம்!

"இவள் ஜாதகம் அதிர்ஷ்டகரமானது, அப்படி இருப்பாள், இப்படி இருப்பாள்" என்று பலர் புகழ்ந்த அபாக்கியவதி நான். ஜோதிடம், ரேகை சாஸ்திரத்தில் அளவற்ற நம்பிக்கை வைத்தவர் என் கணவர். கைரேகைக் காரர்களிடமும், ஜோசியம் சொல்பவர்களிடத்திலும் வருங்காலத்தைப் பற்றி, குழந்தைகளைப் பற்றி, உத்தியோகத்தைப் பற்றிக் கேட்டதும் தெரிந்து கொண்டதும் எவ்வளவோ! எல்லாம் சொல்லவோடு எங்களுக்கு முடிந்து விட்டது!

ஜோதிடம் என்பதும் உண்மையான ஒரு சாஸ்திரமாக இருக்கலாம். அதை அறிந்து உண்மையைத் தெரிந்த மகான்களும் இருக்கலாம். ஆனால் எதிர்காலத்தைப் பற்றிப் பலர் பலவிதமாகச் சொல்வதை நம்புவதைப் போன்ற அறிவின்மை வேறு ஒன்றும் இடையாது என்பதே என் கருத்து.

எத்துமானூர்
25—1—54

கே. ரங்கமணி

●

அணுச் சக்தியை ஆராய்ச்சி செய்யும் இந்தக் காலத்தில் பல விஞ்ஞானம், சமூக தேச அபிவிருத்திக்கான எத்தனையோ விஷயங்களையாவது, அல்லது அறிவு ஆராய்ச்சிக்கான கட்டுரைகளையாவது பத்திரிகையில் வெளியிட்டுப் பொதுமக்களை விழிப்படையச் செய்யலாம். இதனால் பத்திரிகையைப் பணம் கொடுத்து வாங்கும் பொது ஜனங்களுக்கு முன்னேற்ற கருத்துகளும், அறிவு விசாலமும் ஏற்பட ஏதுவாகும். அதை விட்டு ஒரு பத்திரிகைக்கு ஒரு பத்திரிகையில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துகளையும், ராசி பலன்களையும் எழுதிப் பக்கத்தையும் காலி செய்து அறிவாராய்ச்சியில் சிறந்த நம் முன்னோர்களால் வகுக்கப்பட்ட சோதிட சாஸ்திரத்தையும் கறைப்படுத்தி, சோதிடத்தில் கொஞ்சம் நம்பிக்கை

வைத்திருப்பவர்களையும் நம்பிக்கை இழக்கும்படி செய்து வருகிறார்கள்.

எனது பெயருக்குரிய ராசி பலாபலன்படி இரண்டு வாரமாகப் போட்டி, ஸ்பெகுலேஷன், கார், சினிமா இவைகளில் வெற்றி என்றிருந்தது. அதன்படி நான் போட்டி இவைகளில் கலந்ததில் போட்டிக்குரிய கட்டணத்தை இழப்பதில் வெற்றியடைந்தேன். என்னைப் போன்றே இன்னும் இரண்டு மூன்று நண்பர்கள் இந்தப் பாழாய்ப் போன ராசி பலன்களை நம்பி வெற்றிக்கு நேர் எதிரான பலனைக் கண்டார்கள். ஆனபடியால் என்னுடையவும், என் நண்பர்களுடையவும் அநுபவத்தில் கண்ட முடிவு பத்திரிகையில் வரும் ராசி பலன்களைப் பார்ப்பதால் பயனில்லை; அதனால் லாபமோ நன்மையோ கிடையாது என்பதே.

இரங்கூன்
1—2—54

கே. துரைசாமி

●

என் கஷ்ட தசையை நினைந்து உருகிக் கொண்டிருந்த நாள் அது. முதன் முதலாக என் ஜாதகத்தைக் காண்பித்தேன். சோதிடர், "உங்களுக்கு மிகவும் கஷ்டமான தசை நடந்து கொண்டிருக்கிறது" என்றார். தங்கள் எதிர் காலத்தைப் பற்றி ஆவலுடன் சோதிடரிடத்தில் விசாரிப்பவர்கள் பெரும்பாலும் கஷ்ட தசையிலுள்ளவர்களாகத்தானே இருப்பார்கள்! ஆனால் அவர் சொன்ன ஒரு விஷயம் என்னைத் தூக்கி வாரிப் போட்டது. "இன்னும் ஒன்றரை வருஷத்துக்கு இந்தக் கஷ்டதசை நீடித்திருக்கும். முன்னேறும் நோக்கத்துடன் செய்யும் எந்த முயற்சியும் பயன் தராது" என்று ஒரு பெரிய கல்லைத் தூக்கிப் போட்டார். இதை அப்பொழுது நானிருந்த கஷ்ட நிலையிலும்கூட நம்ப இடமே இல்லை. நான் ஒரு உத்தியோகத்துக்கு மனுச் செய்திருந்த விஷயம் அப்பொழுது நினைவுக்கு வந்தது. அந்த உத்தியோகத்துக்குத் தேவை என்று அதிகாரிகள் குறிப்பிட்டிருந்த சகல அம்சங்களும் என்னிடமிருந்தன. அதிலும் அவர்கள் குறிப்பிட்ட அம்சங்களைப் பெற்று, குறிப்பிட்ட வயதுக்குள் இருந்து, அந்த உத்தியோகத்தை நாட வேண்டிய கஷ்ட நிலையில் வெகு சிலரே இருந்திருக்க முடியும் என்று எனக்கு உறுதியாய்த் தெரியும். ஆகையால் எப்படியும் ஒரு மாதத்துக்குள் அந்த உத்தியோகத்தைப் பெற்று என் பழைய நிலைமையை அடைந்துவிட முடியும் என்று நம்பினேன். அதனால் எனக்குச் சோதிடரின் வாக்கு தவறாகத் தோன்றியதில் ஆச்சரியமில்லை.

ஆனால் ஆச்சரியகரமாக அவர் வாக்குத்தான் பலித்தது. வேலைக்கு வேண்டியிருந்த அம்சங்கள் அத்தனையும் இருந்தும், என்னைவிடச் சாதாரணமான ஒருவருக்குத்தான் அந்த வேலை கிடைத்தது.

எனக்கு ஒரு சந்தேகம். சோதிடர் எனக்குக் கஷ்ட தசை நடக்கிறதென்று சொன்னதற்கு உண்மையாகவே சோதிட சாஸ்திரத்தில் ஆதாரம் இருக்குமா! அல்லது சோதிடர் என்னுடைய நிலைமையை வேறெந்த விதத்திலும் ஊகித்துச் சொல்லி விட்டாரா! அன்று முதல் இந்த சாஸ்திரத்தைக் கற்பதில் தீவிரமாக முனைந்தேன். சோதிடர் கூறியதற்குச் சாஸ்திரத்தில் ஆதாரம் இருந்ததை வெகு சீக்கிரமே கண்டு கொண்டேன். ஆகவே சோதிடம் பொய்யல்ல.

காரைக்குடி
1—3—54

ஜே. பால்

●

எங்கள் உறவினர் ஒருவர் பெண்ணின் வரன் வேட்டையில் – மூல நட்சத்திரம் என்பதற்காக— மிகவும் சிரமப்பட்டார். 'பெண் மூலம் நிர்மூலம்; மாமியார் மூலையில்' எனப் பலவித ஆட்சேபணைகள். கடைசியில் எப்படியோ நல்ல வரன் ஒன்று குதிர்ந்தது. கல்யாணமும் நடைபெற்றது. இதற்குச் சரியாக ஒரு வருடத்துக்குப் பின் விஷயம் அறிந்த நாங்கள் திகைப்புற்றோம். ஏனெனில் பிள்ளைக்கும் ஆயில்ய நட்சத்திரம். விவாகத்தின்போது இரு தரத்தாரும் பரஸ்பரம் ஏமாற்றப்பட்டனர். ஆனால் இதற்குப் பலன் என்ன தெரியுமா! நோயுற்றிருந்த பெண்ணின் மாமனார் உடல் நலம் பெற்று நடக்க ஆரம்பித்தார். தற்போது தம்பதிகள் சந்தான, சௌபாக்கியத்துடன் சந்தோஷமாக இருக்கின்றனர்.


மூணாறு
3-2-54

கே. வேதவல்லி


●

அதாவது 1944-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் தேதி எனது தந்தையார் மாணிக்க சுந்தரனார் அவர்கள் இயற்கை எய்தினார்கள். எனது தந்தையார் காலமாவதற்கு மூன்றினம் ஒரு சோதிடரிடம் எனது தந்தையாரின் கிரக பலன்களைப் பற்றிக் கேட்டேன். சோதிடர் ஒரு மணி நேர ஆராய்ச்சிக்குப் பிறகு சொன்னார். 'இவரது ஆயுள் பாவம் நன்றாகவே இருக்கிறது. எழுபத்தைந்தாவது ஆண்டு வரை ஜீவிய வந்தராயிருக்க முடியும்' என்று உறுதி கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

நானும் கவலையற்று நிம்மதியுடன் என் அலுவலகத்துக்குச் சென்று இரவு வீடு வந்தேன். என்



அன்பர்களின் இதயத்தில்





தந்தையாரிடம் அளவளாவிக் கொண்டிருந்தேன். மறுநாள் காலையில் என் தந்தையாரிடம் விடை பெற்றுக் கொண்டு என் அலுவலகத்துக்குச் சென்று இரவு வீடு வந்தேன். மறுநாள் நான் அலுவலகத்துக்குச் செல்ல எனக்குச் சுமூகமாகவே விடை கொடுத்தனுப்பினார்.

பிற்பகல் 2-30 மணி சுமாருக்கு என் அலுவலகத்துக்கு என்னைத் தேடி என் உறவினர் ஒருவர் வந்து "உன்னை உன் வீட்டார் உடனே வரச் சொன்னார்கள்" என்று கூறினார். நான் வெகு பதட்டத்துடன் வீடு சென்று உள்ளே நுழைந்தேன்.

நான் படுக்கையில் அமர்ந்து என் தந்தையின் சிரத்தை எடுத்து என் துடை மேல் வைத்துக் கொண்டு 'ஐயா!' என்றழைத்தேன். கண் விழித்தார்! என்னைப் பார்த்தார்! பாலைக் கொடுத்தேன். சிறிது பருகினார். பின்பு, "தம்பி! எல்லோரையும் பார்த்துக் கொள்!" என்று கூறிவிட்டுத் தேக வியோகமானார். என் தந்தை இறந்த சமயம் அவர்களுக்கு நாற்பத்தெட்டாவது ஆண்டு நிறைவெய்தியது. அன்று முதல் தான் சோதிடத்தில் எனக்கு நம்பிக்கையில்லை.

கோயமுத்தூர்
29—1—54

சி. எம். இராமலிங்கம்

●

நான் 14 வயதுச் சிறுவனாக இருந்தபோதே எனக்குச் சோதிட சாஸ்திரப் புத்தகங்களைப் பார்க்க அவா உண்டாயிற்று. அப்பொழுதே பலர் ஜாதகம் காண்பிப்பார்கள். ஏதோ பிதற்றி இருப்பேன். மேலும் நாலு வருஷம் சோதிடப் புத்தகங்களைப் படித்து அதில் தேர்ச்சி பெற்றேன்.

1916 ல் என் ஊர்க்காரர் என்னிடம் வந்து எட்டு பையன்கள் ஜாதகத்தையும் தன்பெண் ஜாதகத்தையும் கொடுத்து 'எந்தப் பையன் ஜாதகம் பொருந்துகிறது பார்' என்றார். அதில் என் ஜாதகமும் இருந்தது. கொஞ்சம் ஞானம் உள்ள காரணமாகப் பெண் ஜாதகத்தில் ஆயுள் காலத்தில் 9, 10 க்குடைய சனிதசையும் 2, 5 க்குடைய புதன் தசையும் வருவதால் நல்லதென அறிந்தேன். அதே காலங்களில் என் ஜாதகப்படி பாபிகளின் தசைகள் வருவதையும் எண்ணினேன். மற்றப் பொருத்தங்கள் திவ்யமாக இருந்தன. நம்பினேன். என் ஜாதகமும் தங்கள் பெண் ஜாதகமும் பொருந்தும் எனச் சொல்லிக் கொடுத்தேன். ஈசன் கருணையால் கல்யாணம் முடிந்தது. 38 வருஷமாகிறது. நாளது வரையில் குறைவில்லை.

1939 ல் ஒரு பையனைச் சீமைக்கு அனுப்ப எண்ணினார்கள். நான் பன்முறை ஜாதகம் பார்த்ததன் மூலம் அந்தப் பையனை அனுப்ப வேண்டாம், சிலாக்கியமான காலமில்லை என்றேன். பையன் லக்னம் துலாம். நக்ஷத்திரம் சுவாதி. சனிதசை ஆரம்பம். சனி சிம்மத்தில் சத்ருக்ஷேத்திரத்தில், சர லக்னத்திற்குப் பாதக ஸ்தானத்தில். மூன்றாவது தசை. குருதசை முடியும் சமயம். சண்டை ஆரம்பித்தது. என் பேச்சைக் கேளாமல் கப்பலில் புறப்பட்டான். கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. அவ்வளவுதான்.

பிரும்மாவால்கூட நிர்ணயமாக ஒருவன் ஆயுளையோ, நாளைக்கு என்ன நடக்குமென்றோ சொல்ல முடியாது. ஏதோ பெரும்பாலான விஷயங்களில் கோடிதான் காட்ட முடியும். காலத்துக்குத் தகுந்தாற்போல் மனிதன் தன் புத்தியை உபயோகித்து நடந்து கொள்ள வேண்டும்.

ரங்கூன்
2—3—54

அ. பி. ஹரன்

டி. கே. சி. நினைவுக் கூட்டங்கள்

தமிழ் கூறும் நல்லுலக மெங்கும் ரஸிகமணி அவர்களின் புகழ் பரவியிருக்கிறது. அவர் அமரரானது பற்றி நினைவுக் கூட்டங்கள் இமயத்திலிருந்து இலங்கை வரையில் நடக்கின்றன. நமக்கு அது பற்றிக் கடிதங்களும் புகைப்படங்களும் வந்தவண்ணம் இருக்கின்றன.

ரஸிகமணியின் நினைவுக் கூட்டங்கள் சென்னை மயிலாப்பூர் ராணடே மண்டபத்தில் மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் தலைமையில் நடந்தது. தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் திருப்புகழ் மணி தலைமையில் நடந்தது. பாரதியார் சங்கத்தில் நடந்தது. இன்னும் பல இடங்களிலும் நடந்தன.

சென்னை, தியாகராயநகர் ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளியில் ரஸிகமணி டி. கே. சி. யின் நினைவுக் கூட்டம் கல்கி ஆசிரியர் தலைமையில் நிகழ்ந்தது. ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் ரஸிகமணியின் தமிழ்த் தொண்டைப் பற்றிப் பேசினார். ராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப் பள்ளியின் பழைய மாணவரான ஸ்ரீ எஸ். வி. எஸ். மேற்படி பள்ளிக்கு ரஸிகமணியின் திருவுருவப் படத்தை அந்தப் பள்ளிக்கூட ஆசிரியர் ஸ்ரீ டி. எஸ். ரங்கநாத ஐயர் மூலமாக வழங்கினார்.

சென்னை ராஜாஜி ஹாலில் சென்ற மார்ச் 3உ மாபெரும் நினைவுக் கூட்டம், ரஸிகமணியின் அருமை இலக்கிய நண்பரான ராஜாஜி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்புகழ்மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், சென்னைப் பிரதம நீதிபதி ஸ்ரீ ராஜமன்னார், தமிழ் அறிஞர் ஸ்ரீ ரா. பி. சேதுப்பிள்ளை, மேல் சபை அங்கத்தினர் ஸ்ரீ கே. பாலசுப்பிரமணியய்யர், ராஜா ஸர் ஸ்ரீ எம். ஏ. முத்தய்யா செட்டியார், தமிழரசுக் கழகத் தலைவர் ஸ்ரீ மா. பொ. சிவஞான கிராமணியார், நிதிமந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம், ஸ்ரீமதி லீலாவதி ராமசுப்பிரமணியம், வடபாதி மங்கலம் ஸ்ரீ தியாகராஜ முதலியார், அகில இந்திய ரேடியோ ஸ்ரீ சோமு, ஆசிரியர் 'கல்கி' முதலிய பல அன்பர்கள் ரஸிகமணியின் அரும்பெரும் தொண்டுகளைப் போற்றிப் பேசினார்கள். ரஸிகமணியின் அன்பையும் பண்பையும் புகழ்ந்து பேசினார்கள். ரஸிகமணியின் அன்பு உள்ளத்தை வியந்து பேசினார்கள். பலர் கண்களில் கண்ணீர் ததும்ப உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்கள்.

ராஜாஜி அவர்கள் தமது முடிவுரையில், "டி. கே. சி. அவர்களைப் பார்த்துப் பழகி ரொம்பவும் சந்தோஷப் பட்டவர்களுக்கு இப்போது நல்ல தண்டனை ஏற்பட்டிருக்கிறது. ரொம்பவும் கஷ்டப்பட்டு நண்பரைச் சம்பாதிக்கிறோம். அவர் மறைந்து விடுகிறார். அதனால் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. இது இயற்கை நியதி. இதை ஸ்ரீ டி. கே. சி. அவர்களே என்னிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்" என்று கூறினார்.


---

(1) இலங்கை பருத்தித்துறை சைவ ஊழியர் இயக்க ஆதரவில் பிப்ரவரி 23உ பருத்தித்துறை நகரசபைத் தலைவர் ஸ்ரீ நடராசா தலைமையில் ரஸிகமணி நினைவுக் கூட்டம் நடந்தது. மேற்படி நினைவுக் கூட்டத்தில் பங்கு பற்றிய தமிழ் அறிஞர்களையும், சைவ ஊழியர் இயக்கத் தலைவர் திரு ஏரம்பமூர்த்தி அவர்களையும் படத்தில் காணலாம். (2) ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளியில் நடந்த நினைவுக் கூட்டத்தில் பள்ளித் தலைமை ஆசிரியர் ஸ்ரீ சுப்பிரமணியம் பேசுகிறார். (3) ராஜாஜி ஹாலில் நிகழ்ந்த நினைவுக் கூட்டத்தின் ஒரு தோற்றம்.



வாடிக்கைக் காரன்

ரா. பாலகிருஷ்ணன்



மாடியில் இருந்த வண்ணம் "ருக்மிணி!" என்று கூப்பிட்டான், ராகவன். அவன் மனைவி ருக்மிணி அப்போது சமையலறையில் வேலையாயிருந்தாள். குழந்தைகள் கமலியும் மணியும் சுவாரஸ்யமாக விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

"ஏன்!" என்று இருந்த இடத்திலிருந்தே கேட்டாள் ருக்மிணி.

"இங்கே வாயேன்! ஒரு நிமிஷம் வந்து விட்டுப் போ!" என்று கூவினான், ராகவன். அவன் எதிரிலிருந்த மேஜையின் மீது பத்துக் காகிதத் துண்டுகள் சுருள் சுருளாகக் கிடந்தன. எல்லாம் ஒன்றுக் கொன்று வித்தியாசமில்லாத ஒரே அளவுள்ள சுருள்கள்.

"நான் சாதம் வடித்துக் கொண்டிருக்கிறேன். வரப் பத்து நிமிஷத்துக்கு மேல் ஆகும்" என்றாள் ருக்மிணி பதிலுக்கு.

"அட, சே! எதற்கும் தடை சொல்லிக் கொண்டிருப்பதுதானே உன் வழக்கம்!" என்று முணுமுணுத்த ராகவன், "சரி, கமலியையாவது இங்கே வரச் சொல்லு!" என்று கத்தினான்.

"கமலி! உங்க அப்பாவுக்கு மாடியிலே ஏதோ புதையல் கிடைச்சிருக்காம். உடனே வரச் சொல்றார். போய்க் கேட்டுவிட்டு வா!" என்றாள் ருக்மிணி, கிண்டலாக.

"இதோ வரேன், அப்பா!" என்று சொல்லிக் கொண்டே மாடிக்கு ஓடினாள், கமலி. "நானுந்தான் போவேன்" என்று கும்மாளமடித்துக் கொண்டு கமலியைத் தொடர்ந்து ஓடினான் மணி.

ராகவன் மேஜையின் மீதிருந்த காகிதச் சுருள்களைக் கமலிக்குச் சுட்டிக் காட்டி, "இதிலிருந்து ஏதாவது ஒரு சீட்டு எடு, பார்க்கலாம்!" என்றான்.

"அப்பா, நானும் ஒண்ணு எடுக்கிறேனே!" என்றான் மணி.

"சரி, ஆளுக்கு ஒரு சீட்டு எடுங்கோ, பார்க்கலாம்" என்றான் ராகவன்.

கமலியும் மணியும் தலைக்கு ஒரு சீட்டு எடுத்து ராகவனிடம் கொடுத்ததும், அவன் அதைப் பிரித்துப் பார்த்து 2, 9 என்று ஒரு சிறு காகிதத்தில் குறித்துக் கொண்டான். பிறகு காகிதச் சுருள்களை வீசியெறிந்து விட்டு, "இனிமேல் நீங்கள் கீழே போய் விளையாடலாம்" என்று உத்தரவிட்டு விட்டு மணி பர்ஸை எடுத்துச் சட்டைப் பையில் திணித்துக் கொண்டு வெளியே கிளம்பினான்.

"சமையலாகி விட்டதே! ஆபீசுக்குப் போகவில்லையா என்ன, இன்னிக்கு! இன்னும் குளிக்கக் கூட இல்லை; எங்கேயோ கிளம்பி விட்டீர்களே!" என்று கேட்டாள் ருக்மிணி.

ராகவன் கோபத்துடன், "போகிறபோது சகுனத் தடையாக ஏதாவது சொல்லா விட்டால் உனக்குத் தலை வெடித்துவிடுமா! சனியன் மாதிரி அபசகுனம்!" என்று உறுமிக் கொண்டே வெளியே போய் விட்டான்.

அரை மணி நேரம் கழித்து ஏதோ ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விட்டவன் போல் திரும்பி வந்த ராகவன் அவசர அவசரமாகக் குளித்துச் சாப்பிட்டு விட்டு ஆபீசுக்குக் கிளம்பினான்.

"இன்னிக்கு வெள்ளிக்கிழமை. சீக்கிரம் வந்து விடுங்கள்" என்று ருக்மிணி ஞாபக மூட்டியதைக் கூடக் கவனிக்கவில்லை அவன்.

அன்று மாலை அவன் வீடு திரும்பியபொழுது அவன் கையில் ஒரு பந்து மல்லிகைப் புஷ்பம் இருந்ததைக் கண்ட ருக்மிணி, "ஏது! துரை வீடு திரும்புவது இன்னிக்கு ஒரே அமர்க்களமாயிருக்கே! கல்யாணமாகிப் புதுக் குடித்தனம் வைத்த புதிதில் நீங்கள் பிரதி தினமும் பூவும் கையுமாக வீடு திரும்புவேளே — அதைப்போலிருக்கே!" என்றாள், விஷமச் சிரிப்புடன்.

சமீபகாலத்தில் அவன் போக்கே ஒரு விதமாகப் பிடிபடாமலிருந்தது, ருக்மிணிக்கு. சுபாவத்தில் சாந்த ஸ்வரூபியான அவனுக்குத் திடீர், திடீரென்று கோபம் வருவதும் மறு விநாடியே சமாதானமாவதும் புது அநுபவமாயிருந்தது, அவளுக்கு. இதே போலத்தான் இருந்தாற்போலிருந்து

பர்ஸை எடுத்துக் கொண்டு காலையில் ஒன்பது மணிக்கு வெளியே போவதும், சற்றுப் பொறுத்துத் திரும்பி வருவதும் ராகவனுக்கு வழக்கமாயிருந்தது. இதெல்லாம் ஒன்றிரண்டு மாதங்களாகத்தான். அவன் திரும்பி வரும்போது அநேகமாகப் பர்ஸில் இரண்டு மூன்று ரூபாய்கள் குறைந்திருக்கும். அவன் எங்கே போகிறான், என்ன செலவு என்பதெல்லாம் ருக்மிணிக்குப் புரியாத புதிராகவே யிருந்து வந்தன. அவனைக் கேட்டுத் தெரிந்து கொள்ள மட்டும் துணிவு வரவில்லை. பிரதி வெள்ளிக் கிழமையும் குடும்பத்துடன் கபாலீசுவரன் கோவிலுக்குச் செல்லும் வழக்கத்தை மட்டும் விடவில்லை அவன்.

"புஷ்பம் மட்டுமில்லே, ருக்கு! ரொம்ப நாளாகக் கமலிக்குச் சங்கிலி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தாயே—இதோ பார்!" என்று 'மாஜிக்' செய்பவனைப் போல் கோட்டுப் பையில் கையை விட்டு ஒரு அட்டைப் பெட்டியை எடுத்து அதை லாகவமாகத் திறந்தான் ராகவன்.

இரண்டு சவரன் மதிப்புள்ள தங்கச் சங்கிலியொன்று அவன் கையில் மின்னியது. ருக்மிணி ஆச்சரியத்துடன் ஸ்தம்பித்து நின்றாள்.

"இதற்குப் பணம் ஏது, உங்களிடம்! இரண்டு சவரன் இருக்கும்போலிருக்கே!" என்றாள் அவள்.

"ஏன், பாக்கி அரைச் சவரன் எங்கே போயிற்றாம்! சரியாக இரண்டரைச் சவரன்" என்று பெருமையுடன் சொல்லிவிட்டுக் கம்பெனி 'பில்லை' அவளிடம் நீட்டினான் ராகவன்.

"ஆமாம், இதற்குப் பணமேது என்று கேட்டேனே!" என்றாள் ருக்மிணி.

"பஞ்சு கொடுத்ததடி! பஞ்சு கொடுத்த பணம்! புதையல் கிடைச்சிருக்கு உங்கப்பாவுக்குன்னு இளக்காரமாப் பேசினாயே கமலிகிட்ட! இப்போ என்ன சொல்லப் போகிறாயாம்!" என்று மார் தட்டிப் பேசினான் அவன்.

ருக்மிணிக்கு ஒன்றும் விளங்கவில்லை. "என்ன! பஞ்சு கொடுத்ததா! எந்தப் பஞ்சு! ஆபீஸிலே யாரிடமாவது கடன் வாங்கினீர்களா, என்ன!"

"எங்க ஆபீஸிலே 'பஞ்சு' என்று பெயர் கொண்டவன் டைப்பிஸ்ட் பஞ்சாமி ஒருத்தன் தான். அடித்துப் போட்டாலும் அவனிடம் இருந்து கால் காசு கிளம்பாது! அவனுடைய இரண்டு மாதச் சம்பளத்தைச் சேர்த்தால் கூட இவ்வளவு பணம் ஆகாது, தெரியுமா!"

"பின்னே எந்தப் பஞ்சு உங்களுக்கு நூற்றுக் கணக்கிலே இப்படிக் கடன் கொடுத்தார்!"

"கடனும் இல்லே, உடனும் இல்லே! இதெல்லாம் உள்ளூர்ப் பஞ்சு கொடுத்த பணமில்லே. நியூயார்க் பஞ்சு கொடுத்ததாக்கும்!"

ராகவனின் இந்தப் பதில் ருக்மிணியின் திகைப்பையே மேலும் அதிகமாக்கியது. "கொஞ்சம் புரியும்படியாகச் சொல்லுங்கள்!" என்றாள்.

"மாடிக்குப் போய் இன்றையப் பத்திரிகையை எடுத்துக் கொண்டு வா, சொல்லுகிறேன்!" என்று சொல்லிவிட்டுத் தன் கையிலிருந்த சங்கிலியைக் கமலியின் கழுத்தில் அணிந்து அழகு பார்த்தான். ருக்மிணி தினசரிப் பத்திரிகையை எடுத்து வந்து அவனிடம் கொடுத்து விட்டு அருகில் உட்கார்ந்து கொண்டாள். ராகவன் பத்திரிகையைப் பிரித்து ஒரு பத்தியின் மேலுள்ள சில இலக்கங்களைச் சுட்டிக் காட்டி, "இதைப் பார்த்தாயா! 83.45, 83.47 என்று போட்டிருக்கிறதை! இது தான் இன்றைய நியூயார்க் பஞ்சு மார்க்கெட் நிலவரம். சென்னை, பம்பாய் முதலிய பிரபல நகரங்களில் தங்கம், வெள்ளி, கடலெண்ணெய், காப்பிக் கொட்டை முதலிய பொருள்களின் அன்றாட நிலவரம் பற்றிய குறிப்புகள் பத்திரிகைகளில் வெளியாகிறதல்லவா! அதே போல, நியூயார்க் நகரத்துப் பஞ்சு மார்க்கெட் நிலவரம் இது. இந்த நான்கு நம்பர்களில் மறு நாள் வெளியாகப் போகும் ஆரம்ப இலக்கத்தையும் கடைசி இலக்கத்தையும் சரியாகச் சொல்லிப் பணம் கட்டினால், நாம் பந்தயம் கட்டும் பணத்தைப் போலப் பதினாறு மடங்கு பணம் கிடைக்கும்" என்று அவன் சொல்லிக்கொண்டு வரும்போதே, "நம்பர் தப்பாகி விட்டால்......!" என்று கேட்டாள் ருக்மிணி.


"கட்டின பணம் என்னு!" என்றான் ராகவன்.

"இப்படி ஒன்றுக்குப் பதினாறு வீதம் பணம் கொடுக்கும் புண்ணியவான் யாரோ!"

"அது யாராக இருந்தால் உனக்கென்ன! இன்று நான் பணம் கட்டிய வேளை, நல்ல வேளை! அதிர்ஷ்டம் அடித்தது! அது இருக்கட்டும். சீக்கிரம் வரச் சொல்லி ஞாபகமூட்டினாயே! கோவிலுக்குப் போக வேண்டாமா! காப்பியைக் கொண்டு வா. சாப்பிட்டு விட்டுக் கிளம்பலாம்" என்று ராகவன் துரிதப்படுத்தவே அவள் குழம்பிய மனத்துடன் உள்ளே திரும்பிச் சென்றாள்.



தன் கணவனின் விபரீதப் போக்கு அவளுக்கு எல்லையற்ற வருத்தத்தை யளித்தது. பத்து ரூபாய்க்கு நூற்றறுபது ரூபாய் இவருக்குக் கொடுத்த புண்ணியவான் எத்தனை பேரைச் சுரண்டியிருந்தால் இம்மாதிரி கொடுத்திருக்க முடியும்! எத்தனை குடும்பங்களில் அரிசி வாங்க வைத்திருந்த பணம் இப்படிப் பஞ்சாய்ப் பறந்திருக்கிறதோ பாவம்! காலை வேளைகளில் ஏதோ கொள்ளை போவது போல் ஓடுகிறாரே! எல்லாம் இந்தப் பஞ்சு விளையாட்டுக்காகத்தான் போலும்! இன்று கை நிறையப் பணம் வந்திருப்பதால், குஷாலாக உள்ளத்தைத் திறந்து எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லிவிட்டார். பத்து ரூபாயும் போயிருந்தால்......! முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்; எதற்



பிப்ரவரி மீ 12உ அன்று காரைக்குடி அழகப்பா கல்லூரியில் சண்முகம் நூல் நிலையத்துக்கு டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் அடிப்படைக் கல் நாட்டினார்கள். விழாவுக்கு ஏரான மான செட்டிநாட்டுப் பிரமுகர்கள் வந்து சிறப்பித்தனர்.

கெடுத்தாலும் எரிந்து விழுவார். வீடே நிமிஷோ கப்படும்! மறு நாளைக்குப் பந்தயம் கட்டக் கையில் பணமில்லா விட்டால், யாரிடம் கடன் கேட்கலாம் என்றுதானே அலைந்து கொண்டிருப்பார்! கடனும் கிடைக்கா விட்டால்...! அதற்கு மேல் அவளுக்கு யோசனையே ஓடவில்லை. தன் உள்ளத்தில் பீறிட்ட துக்கத்தைக் கண்ணீராக வடித்தாள், கபாலீசுவரன் சன்னதியில். 'ஏனோ இவருக்கு இந்தச் சபலம்! உள்ள சம்பாத்தியத்தைக் கொண்டு ஒழுங்காகக் குடித்தனம் செய்யும்படியாக இவருக்கு நல்ல புத்தி வராதா!' என்று உள்ளம் உருகப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

நாட்கள் ஓடின. மாதக் கடைசி. வீட்டிலே எத்தனையோ தட்டுமுட்டுச் சாமான்கள் தேவையாயிருந்தன. ராகவனிடம் பணமில்லை என்பது அவளுக்குத் தெரியும். அன்றும் வெள்ளிக்கிழமை தான். கோவிலுக்குப் போய் வர, செலவுக்கு என்னசெய்வது என்ற யோசனையில் ஆழ்ந்திருந்த ருக்மிணிக்கு அலமாரியில் அடுக்கி வைத்திருந்த பழைய தினப் பத்திரிகைகள் கண்ணில் பட்டன. ராகவன் ஆபீசுக்குக் கிளம்பியதும் அதைப் பழம் பத்திரிகை வாங்குபவனிடம் போட்டு விட்டு, கிடைக்கிற பணத்தைக் கொண்டு இன்றைய அர்ச்சனைச் செலவுகளைச் சமாளித்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்துக்கு வந்தாள் அவள்.

மாடியிலிருந்து இறங்கி வந்த ராகவன் அலமாரியின் முன்பு ஒரு கணம் தயங்கி நின்றான். அவனுக்கும் அந்தக் காகிதக் குவியல் கண்ணை உறுத்தியது. ஏதோ முடிவுக்கு வந்தவன் போல் அப்பத்திரிகைகளை ஒரு கட்டாகக் கட்டி, சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே சென்று மறைந்தான் ராகவன். ருக்மிணிக்குச் சோரேலென்றது. ராகவனின் விபரீதச் செய்கை, தூய்மையான முறையில் செலவழிக்கப்பட விருந்த பணம் தன் கணவனின் பந்தய விளையாட்டுக்குப் பலியாகி விட்டதை எண்ணிய போது அவள் இதயம் வெடித்து விடும்போலிருந்தது.

அவன் ஆபீசுக்குக் கிளம்பும்போது "இன்று வெள்ளிக்கிழமை, ஆபீசிலிருந்து நேரே வீட்டுக்கு வந்துவிடுங்கள்" என்று வழக்கம் போல் ஞாபக மூட்டி வைத்தாள். அர்ச்சனைக்கு வழியில்லாவிடினும், ஆண்டவனை யாவது தரிசித்து விட்டு வரலாமே என்ற நினைவு, பாவம்!

மணி ஆறடித்து விட்டது. ராகவன் வந்து சேரவில்லை. ருக்மிணி உள்ளுக்கும் வாசலுக்குமாக நடந்து கொண்டிருந்தாள். அப்படி ஒரு தடவை வாசலுக்கு வந்து விட்டு உள்ளே போகத் திரும்பிய ருக்மிணி, "அம்மா!" என்று ஆபீஸ் சேவகன் ரங்கராஜு அலறியதைக் கேட்டுப் பதறிப் போய் விட்டாள்.

"நம்ம ஐயாவைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைச்சுக்கிட்டுப் போயிட்டாங்க! ஐயா ஏதோ சூதாட்டம் ஆடினாரு; நூறு ரூபாய் ஜாமீன் கட்டினா விடுவாங்கன்னு சொன்னாரு!" என்றான்.


ருக்மிணி பேயறைந்தவள் போல் நின்றாள். அவள் முகம் வெளிறியது. அப்பாவைப் போலீஸ்காரன் பிடித்துக் கொண்டு போய் விட்டான் என்ற விஷயமறிந்து கமலியும் அழத் தொடங்கினாள். எல்லோரும் அழுவதைக் கண்டு சிறுவன் மணியும் விஷயம் புரியாமலே அழுதான்.

"அம்மா! நூறு ரூபாய் இருக்குமா உங்ககிட்டே!" என்றான் ரங்கராஜு. மாதக் கடைசியில் நூறு ரூபாய்க்கு அவள் எங்கே போவாள் என்று ரங்கராஜு கவலைப்பட்டான்.

"ரங்கா! நீ ஓடிப்போய் அந்த மார்வாடிக் கடை திறந்திருக்கிறதா வென்று பார்த்து விட்டு வா. திறந்திருந்தால் நீ வரும்போது ஒரு டாக்ஸி பேசி அமர்த்திக் கொண்டு வா. உம், சீக்கிரம் ஓடு!" என்று அவள் உத்தரவிட்டதும் ரங்கராஜு "இன்னிக்கி வெள்ளிக் கிழமையாச்சே!



திருப்பனந்தாள் காசிமடம் திருவார் திரு அருணந்தித் தம்பிரான் அடிகளார் ஏற்படுத்தி யிருக்கும் "ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசில்" கும்பகோணம் பாணாதுறை உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாவது படிவத்து மாணவி குமாரி என். சாந்தா முதற் பரிசும், "ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசில்" மேற்படி பள்ளியில் ஐந்தாவது படிவம் மாணவன் செல்வன் எஸ். ராமச்சந்திரன் முதற் பரிசும் பெற்றிருக்கிறார்கள். முதற் பரிசு பெற்ற இருவரையும் மேலேயுள்ள படத்தில் காணலாம்.



பிப்ரவரி 13ல் கல்லல் அருள் நெறித் திருக்கூட்டத் தொடக்க விழாவில் குன்றக்குடி அடிகளாரைப் பூர்ண கும்ப மரியாதைகளுடன் வரவேற்றனர். விழா பூரண வெற்றியுடன் இனிது நடந்தது.

மார்வாடி கடை பூட்டியா இருக்கும்! நான் போய் டாக்ஸி கொண்டு வரேன்" என்று சொல்லி விட்டுக் குடல் தெறிக்க ஓடினான்.

டாக்ஸி வந்து நின்றதும், "ரங்கராஜு, குழந்தைகளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். நான் இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டுக் கமலியின் கழுத்துச் சங்கிலியைக் கழற்றிக் கொண்டு டாக்ஸியில் ஏறி அமர்ந்தாள் ருக்மணி.

போலீஸ் ஸ்டேஷனுக்குள் கண்ணீரும் கம்பலையுமாக நுழைந்த ருக்மிணியைப் பார்த்ததும் அவள் ராகவனின் மனைவியாகத்தானிருக்க வேண்டும் என்று இன்ஸ்பெக்டருக்கு விளங்கியது.

அவருக்கு அருகில் ராகவன் சிரித்த முகத்துடன் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் ருக்மிணிக்கு ஒரே திகைப்பா யிருந்தது.

இன்ஸ்பெக்டரே ருக்மிணியிடம், "உங்கள் கணவர்மீது வழக்கு ஏதுமில்லை. தவறுதலாகச் சந்தேகத்தின் பேரில் அவரைக் கைது செய்து விட்டார் போலீஸ்காரர்" என்று சொன்னதும் தான் அவளுக்குப் போன உயிர் திரும்பி வந்தது.

"ஸார்! மன்னிக்க வேண்டும். இந்தமாதிரிச் சூதாடிப் பயல்களால் நல்லவர்களுக்குக் கூட ஆபத்து வந்து விடுகிறது! நீங்கள் போகலாம்" என்று இன்ஸ்பெக்டர் கூறியதும் ராகவன் எழுந்து ருக்மிணியைப் பின் தொடர்ந்து சென்று வெளியே நின்ற டாக்ஸியில் ஏறிக்கொண்டான்.

அப்போது அவனை என்னென்னவோ கேட்க விரும்பியது ருக்மிணியின் மனம். ஆனால், கேட்கத்தான் வாயெழவில்லை அவளுக்கு. ராகவனே சொன்னான்: "நான் புத்தி கெட்டு அலைந்ததற்கு எனக்கு இதுவும்வேண்டும், இன்னமும்வேண்டும்!"

"என்ன நடந்தது! உங்களுக்கும் அந்தச் சூதாடிக் கும்பலுக்கும் என்ன சம்பந்தம்!" என்று ருக்மிணி கேட்டாள்.

"ருக்மிணி! நானும் ஒரு சூதாடிதான்! இன்று ஆபீஸிலிருந்து வந்து கொண்டிருந்தபோது அந்த ஆசாமிகளை வழியில் சந்திக்க நேர்ந்தது. அவர்களிடம்தான் நான் பஞ்சு மார்க்கெட் விஷயமாகப் பந்தயம் கட்டுவது வழக்கம். 'நானேப் பந்தயத்துக்கு ஏதாவது கட்டி வையுங்களேன்' என்றான் அவர்களில் ஒருவன். ஜேபியில் கையை விட்டுத் தடுமாறினேன். டிபன் சாப்பிட்டது போகப் பாக்கி ஒரு ரூபாயும் சில்லறையும் தானிருந்தது. அந்த ஒரு ரூபாயைக் கட்டினால் என்ன என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது தற்செயலாக அங்கு வந்த போலீஸ்காரர் கூண்டோடு கைலாசமாக எல்லோரையும் கைது செய்து விட்டார்!" என்றான் ராகவன்.

ருக்மிணி குறுக்கிட்டு, "உங்கள் மீது ஒரு குற்றமும் இல்லையென்று இன்ஸ்பெக்டர் கூறினாரே!" என்றாள்.

அதற்கு ராகவன் சொன்னான்: "அந்தப் பேர்வழிகள் இப்போது ஜெயிலுக்குப் போக நேர்ந்தாலும் பின்னால் திரும்பி வந்ததும் அவர்களுக்கு இது தானே தொழில், ஜீவனம் எல்லாம்! ஆகவே 'அவர்கள் தங்கள் வாடிக்கைக்காரர்களைக் காட்டிக் கொடுக்கும் வழக்க மில்லை. நானும் இன்று வரையில் அவர்களுக்கு ஒரு வாடிக்கைக்காரனைத் தானே இருந்து வந்திருக்கிறேன்! 'இந்த ஆசாமி எங்களுக்கு முன்பின் பழக்க மில்லாதவர். மணி என்ன ஆகிறது! என்று விசாரித்தோம். அவ்வளவுதான்' என்று அவர்கள் கொடுத்த வாக்கு மூலம்தான் என்னைத் தப்புவித்தது" என்று ராகவன் கூறியதும் ருக்மிணி, "போகட்டும், இந்த மட்டிலுமாவது புண்ணியம் கட்டிக் கொண்டார்களே! அது சரி, வாடிக்கைக்காரன் என்று ஜம்பமாகப் பேசிக் கொள்ளுகிறீர்களே — இன்னுமா உங்களுக்கு இந்தச் சபலம்!" என்றாள்.

அதற்கு ராகவன், "ஏழேழு ஜன்மத்துக்கும் போதும்! போலீஸ்காரர் என் தோளைப் பிடித்துக் கொண்டு 'நீங்களும் கொஞ்சம் ஸ்டேஷன் வரைக்கும் வரவேண்டும், ஸார்!' என்று சொன்ன போதே, 'கபாலீசுவரா! இன்று என்னை இதிலிருந்து தப்புவித்து என் மானத்தைக் காப்பாற்றினால் இனி இந்தச் சூதில் தலையிடுவதேயில்லை' என்று சங்கற்பம் செய்து கொண்டு விட்டேன். அதிருக்கட்டும்; உன்னிடம் பணம் ஏது, டாக்ஸி செலவுக்கெல்லாம்!" என்றான்.


"ரங்கராஜு சொன்னான் — நூறு ரூபாய் ஜாமீன் கட்டினால் உங்களை விட்டு விடுவார்கள் என்று. ஆகையால் கமலியின் கழுத்துச் சங்கிலியை......" என்று கூறியவள் அதற்கு மேலே சொல்லத் தயங்கினாள்.

"விற்றுவிட்டாய் அல்லவா! அப்பாடா! சனி ஒழிந்தது! அது வீட்டில் இருக்கும் வரையில் நமக்குக் கஷ்ட காலந்தான். இந்தப் பஞ்சு விவகாரத்தில் ஒட்டிய தூசிகூட நமக்கு வேண்டாம்" என்று ஒரு நெடுமூச்சுடன் சொன்னான் ராகவன்.

"இன்னும் விற்கவில்லை. நீங்கள் என்ன சொல்லுவீர்களோ என்ற பயத்தினால் அடகுதான் வைத்திருக்கிறேன்" என்றாள் ருக்மிணி.

"நான் சொல்ல என்ன இருக்கிறது! உன்னிடமிருக்கிற பணத்தை அப்படியே திருப்பிக் கொடுத்து விட்டு அந்தச் சங்கிலியை மீட்டு அதைக் கபாலீசுவரன் உண்டியலில் போட்டுவிடப் போகிறேன். அடுத்த மாதம் போனஸ் பணம் வந்தால் கமலிக்கு வேறு சங்கிலி வாங்கி விடலாம்" என்றான் அச் சீர்திருந்திய வாடிக்கைக்காரன்.


இதோ!
மிகவும் அற்புதமான
புதிய
EVEREADY
TRADE-MARKS
MINI-MAX
எவரெடி மினி-மாக்ஸ்
ரேடியோ பாட்டரிகள்
பாட்டரி தயாரிப்பதில் முற்றிலும் புரட்சிகரமான முயற்சியின் பயனாக உற்பத்தி செய்யப்பட்டது "எவரெடி" "மினி-மாக்ஸ்" ரேடியோ பாட்டரி. இது உங்களுக்கு சக்தியைத் திரட்டி அளிக்கக்கூடியது. ஏனென்றால் இந்த பாட்டரியின் உள்ளே ஒவ்வொரு கன அங்குல இடத்திலும் மற்றெந்த ரேடியோ பாட்டரியையும் விட அதிகப்படியான வேலை செய்யக்கூடிய பொருள்கள் பொருத்தப்பட்டுள்ளன. குறைந்த இடத்தில் அமைக்கக்கூடிய தட்டையான செல்கள் நிறைந்துள்ள இந்த பாட்டரி அடக்கமாகவும் இலேசாகவும் இருக்கிறது...... "எவரெடி" "மினி-மாக்ஸ்" தான் உங்களுடைய ரேடியோவிற்கு உகந்த பாட்டரி.
EVEREADY
MINI-MAX
"எவரெடி" "மினி-மாக்ஸ்" ஏன், எவ்வாறு, இதர பாட்டரிகளை விட நன்றாக வேலை செய்யக்கூடியது என்று உங்கள் ரேடியோ வியாபாரியிடம் கேளுங்கள்
உங்கள் பணத்திற்கு நீங்கள் வாங்கக்கூடிய சிறந்த பாட்டரி "எவரெடி" "மினி-மாக்ஸ்" தான் ஏனென்றால்
ஒரு நாஷனல் கார்பன் தயாரிப்பு
NCM.3900



இதைப்போன்ற டூத் பிரஷ் வேறில்லை!
பற்களை உறுதிப்படுத்தும் புது அம்சங்கள்
குழந்தைகளுக்கு
ஸ்திரீகளுக்கு
COLGATE
Nylon TOOTH BRUSH
AN EXCELLENT QUALITY TOOTH BRUSH WITH
GENUINE NYLON BRISTLES FIRMLY FASTENED
ஆண்களுக்கு
2 சைஸ்கள்
காலகேட்,
நைலான் டூத் பிரஷ்
"துவண்டு" போவதில்லை



அவனுக்கு ஆனந்தம் அளிப்பதற்கு
கையோடு ஒரு புட்டி வைத்திருங்கள்
குழந்தைக்கு வயிற்றுக் கோளாறு இல்லாதிருப்பதால் அவன் சந்தோஷமாயிருக்கிறான். குழந்தை சந்தோஷமாயிருப்பதால் தாயாரும் சந்தோஷமாயிருக்கிறாள்.
கிரைப் ஸிரப்
தயாரிப்பாளர் :
தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேட்டரி லிமிடெட், மல்லேஸ்வரம், பெங்களூர்
விற்பனை ஏஜண்டுகள் :
பெஸ்ட் & கம்பெனி லிமிடெட், தபால் பெட்டி நெ. 63, சென்னை



வேணு கானம்

விஜயம்

1. சிரிப்பும் திகைப்பும்

அன்றைக்குப் பொழுது விடிந்து எழுந்திருக்கும் பொழுதே பூபதிக்குச் சிரிப்பு சிரிப்பாக வந்தது. பொங்கி வரும் சிரிப்பை அவனால் அடக்க முடிய வில்லை. அப்படி அவன் பூரித்துப் பொங்கியதற்குக் காரணம் அவன் நடத்தி வந்த ஆனந்த வாழ்க்கை யல்ல; அவன்தான் அன்றாட உணவுக்கே கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தானே. பின் அவன் சிரிப்புக்குக் காரணம்? பூபதி என்று அவனுக்கு அவன் பெற்றோர்கள் பெயர் வைத்ததை நினைத்துத்தான் அப்படி விழுந்து விழுந்து சிரித்தான். "ஒரு வேளை உணவுக்கே வழியில்லாமல் தவிக்கும் ஒரு அநாதைப் பையனின் பெயர் பூபதியா?" என்று அவன் நினைத்துச் சிரித்தான். "பூபதி என்றால் பூமிக்குத் தலைவன் என்று பொருள். எனக்குக் கையகலம் பூமிகூடச் சொந்தமாகக் கிடையாதே! இந்தப் பெயர் எனக்கு எப்படிப் பொருந்தும்?" என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான் பூபதி. ஆனால் அவன் அந்தக் கேள்வியைப் பலமாகக் கேட்டு விட்டான்.

மறு நிமிஷம், "நீ ஒரு நாள் உன் பெயருக்கு ஏற்ப ராஜாவாகி விடுவாய்!" என்று கம்பீரமான ஒரு குரல் மிகவும் தெளிவாக அவன் செவிகளில் விழுந்தது.

பூபதிக்கு ஆச்சரியம் தாங்க வில்லை. "அப்படியும் நடக்குமா? நான் இப்பொழுது இருக்கும் நிலையைப் பார்த்தால் என்றால் நம்ப முடிய வில்லையே!" என்று வாய் விட்டுக் கூறினான்.

"உன்னால் நம்பமுடியாமல் இருக்கலாம். நீ நம்ப வில்லை என்பதனால் உண்மை ஒரு நாளும் பொய்யாகி விடாது" என்று மீண்டும் அந்தக் குரல் கூறிவிட்டு அடங்கியது.

பூபதியின் ஆச்சரியம் மறைந்து ஒருவித மான பயம் தோன்றியது. அவன் உடம்பு கிடு கிடு என்று நடுங்கியது. தன்னுடன் பேசிய அந்தக் குரல் யாருடையது என்று அவனுக்குத் தெரிய வில்லை. ஆனால் அந்த வீட்டில் மாபெரும் உருவம் ஒன்று விண்ணும் மண்ணும் எட்ட நின்று கொண்டிருப்பது போல் தோன்றியது.

பூபதி தன் படுக்கையை விட்டெழுந்து குடிசையைச் சுற்றிச் சுற்றிப் பல முறை தேடினான். ஆம், அவனுடன் பேசிய அந்தக் குரல் எங்கிருந்து வந்தது என்று தான் தேடிப் பார்த்தான். ஒன்றையும் காணவில்லை. ஒன்றும் விளங்காமல் பூபதி, சமீபத்தில் இருக்கும் குளத்துக்குச் சென்று பல் விளக்கி, முகம், கை கால் அலம்பிக் கொண்டு தன் குடிசைக்குத் திரும்பினான்; தலையில் ஒரு துணியைத் தலைப்பாகை யாகக் கட்டிக் கொண்டு, கையில் ஒரு சிறு மூங்கில் குழியை எடுத்துக் கொண்டான். பிறகு நினைவாக சிறு மாடத்தில் இருந்த இன்னொரு பொருளையும் எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டான்.

பூபதி தன் குடிசையை விட்டு வெளியே வந்து கொஞ்ச தூரம் நடந்து ஒரு வீட்டு வாசலில் வந்து தயங்கியபடி நின்றான்.

மறு நிமிஷம், “ஐயா, எசமான்!” என்று கூப்பிட்டான்.

உடனே உள்ளேயிருந்து ஒருவர் வெளியே வந்து, “நேரமாகிறதே! இன்று ஏன் இத்தனை நேரம் பூபதி? சரி. தோட்டப் பக்கத்தில் போய் மாடுகளை ஓட்டிக் கொண்டு போ!” என்று சொன்னார்.

பூபதி தோட்டத்துக்குச் சென்றான். அந்தப் பெரிய மனிதரின் வீட்டு வேலைக்காரன் ஒரு சிறு உணவு மூட்டையைப் பூபதியின் கையில் கொடுத்தான். பூபதி அந்த மூட்டையை வாங்கிக் கொண்டு மேய்ச்சல் நிலங்களை நோக்கி மாடுகளை ஓட்டிக் கொண்டு சென்றான்.

பூபதி வெகு தூரம் போய் விட்டான். காட்டுப் பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்துக்குச் சென்றதும் ஒரு சிறு வட்டைப் பாறையின் மீது உட்கார்ந்தான். தினமும் இருப்பது போல் அவன் மனம் அமைதியாயில்லை. இன்று அதிகாலையில் அவன் கேட்ட அதிசயக் குரலைப் பற்றியே அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

பூபதி சின்னஞ் சிறு வயதிலேயே தாயையும் தந்தையையும் இழந்து விட்டான். யாருமற்ற அநாதைக் குழந்தையான அவனைப் பண்ணையார் முத்தையா தான் கண்டெடுத்துத் தமது பண்ணை மாட்டுக்காரனிடம் ஒப்படைத்தார். குழந்தையில்லாமல் தவித்துக் கொண்டிருந்த அவன் அன்போடு எடுத்து வளர்த்துப் பூபதி என்று பெயரிட்டான். பூபதியின் துரதிர்ஷ்டம், அவன் ஏழு வயதை அடைந்த போது, பண்ணையார் முத்தையா திடீரெனக் காலமாகி விட்டார். சில வருஷங்களில் பண்ணையைச் சேர்ந்த மாட்டுக்காரனும் இறந்து விட்டான்.

பூபதி இந்தப் பூவுலகத்தில் மறுபடியும் யாருமற்ற அநாதையானான். பண்ணையாரின் தம்பியிடம் பண்ணை நிர்வாகம் வந்தது. அவன் இரக்கம் என்பதே அறியாதவன். பழைய வேலையாட்கள் பலரை விலக்கி விட்டுப் புதிய ஆட்களை நியமிக்க ஆரம்பித்தான். சிறுவன் பூபதியும் அந்தத் துர்க்கதிக்கு ஆளானான். அவன் பண்ணையை விட்டு விலகி ஊருக்கு வெளியே ஒரு சிறு குடிசை போட்டுக் கொண்டான். புதிதாக வந்த மாட்டுக்காரன் பூபதியின் நிலைக்கு இரங்கி மாடு மேய்க்கும் வேலையைக் கொடுத்தான்.



பூபதி தினந்தோறும் காட்டுப் பக்கம் மாட்டு மந்தையை ஓட்டிச் சென்று மேய்த்து வருவான்; மாட்டுத் தொழுவங்களைச் சுத்தம் செய்வான். இந்த வேலைக்கு ஊதியமாக அவனுக்குக் கொஞ்சம் சோறு போட்டு வந்தான் அந்த மாட்டுக்காரன்.

பூபதிக்கு எழுதப் படிக்க நன்றாய்த் தெரியும். அவனை எடுத்து வளர்த்தவன் அவனைச் சிலகாலம் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிக் கல்வி போதித்தான். அவன் இறந்து போனதும் பூபதியின் படிப்பும் அத்துடன் நின்று விட்டது.

இந்த அநாதையான வாழ்வில், அவனுக்கு இன்பத்தையும் இதத்தையும் கொடுத்தது ஒரே ஒரு பொருள் தான். அது தான் புல்லாங்குழல். அது அவனுடன் சதா சர்வகாலமும் இருக்கும். பாறையில் அமர்ந்து கொண்டு இடுப்பில் செருகியிருந்த புல்லாங்குழலை எடுத்துப் பூபதி தன்னை மறந்து வாசிக்கலானான்.

பூபதி புல்லாங்குழலை எடுத்து வாசிக்க ஆரம்பித்து விட்டால், அந்த வேணுகானம் கேட்பவர்களையெல்லாம் கவர்ந்து விடும்.

ஒரு சமயம் அவனுடைய புல்லாங்குழலிலிருந்து இருதயத்தைப் பிழியும் சோக கீதம் வெளிவரும்; இன்னொரு சமயம் கேட்பவர்களை இன்ப வெள்ளத்தில் அழுத்தும் இனிமை ததும்பும் கீதமாக வெளிவரும். பசும் புல், பூண்டுகளும், பச்சை மரங்களும், காட்டு மலர்க் கொடிகளும் அந்த வேணுகான இன்பத்தில் லயித்து ஆடாமல் அசையாமல் நின்று கேட்கும். புல்லை மேய்ந்து கொண்டிருக்கும் மாடுகள் மேய்வதை நிறுத்தி வேணுகானத்தில் சொக்கிப் போய் நின்று விடும். பால் குடிக்கும் கன்றுகள் பால் குடிப்பதை நிறுத்தி வேணுகானம் கேட்கும்; பறக்கும் பறவைகள் கூடப் பரவசத்துடன் குழலோசையைக் கேட்கும்.

புல்லாங் குழல் வாசித்துக் கொண்டிருந்த பூபதி சட்டென்று நிறுத்தினான். அவனுக்கு எதிரே, ஒரு குதிரையின் மேல் அழகிய ராஜகுமாரன் இருந்தான்.

“எழுந்திரு, என்னுடன் வா!” என்று அவன் கம்பீரமான குரலில் கட்டளையிட்டான். மறு நிமிஷம் நாலைந்து வீரர்கள் பூபதியின் மீது பாய்ந்தனர்.

(தொடரும்)

40. புயலுக்கு அறிகுறி!



ரமண்லால் வஸந்தலால் தேசாய்
மொழி பெயர்ப்பு :: ரா. வீ.

கோடை காலம். மாலை நேரம். நதியின் நீர்ப் பரப்பிலே மிக நேர்த்தியாக அமைக்கப் பட்டிருந்த ஒரு படகு மெதுவாக அசைந்தாடியவாறு ஊர்ந்து கொண்டிருந்தது.

கோடை முடிந்தால் மழை தானே? கோடை காலத்தின் கடைசி நாட்கள் மழை வரப் போகிறது என்பதை முன் கூட்டியே அறிவிக்கும் திறன் பெற்ற தினங்கள் தாம். இருந்தாலும் எப்பொழுது மழை வரும் என்று ஒரு நிச்சயம் கிடையாது. நினைத்தால் மழை வரும்; நினைத்தால் மழை நின்று விடும். ஒருவனுடைய அதிர்ஷ்டத்தையோ துரதிர்ஷ்டத்தையோ இன்னொருவன் கண்டறிந்து கூறிவிட முடியுமா? அதே போலத் தான் கோடை மழையும். இப்பொழுது மழை வரும், இப்பொழுது வராது என்று கணக்காகச் சொல்ல யாராலும் முடியாது.

மாலைக் கதிரவன் மலைவாயில் விழுந்து கொண்டிருந்தான். வான வீதி மண் அடித்துப் பழுப்பு ஏறிக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. அதைக் கண்ட படகோட்டி ஒருவன், "வானத்தைப் பார்த்தியா, தம்பி! புயல் அடிக்கும் போலத் தோணுதே!" என்றான்.

நீரின் போக்கையும் காற்றின் போக்கையும் கணக்கிட்டுக் கண்டு கொள்வதில் படகோட்டிகளுக்கு ஈடு படகோட்டிகள்தான்!

"ஆமாம், அண்ணே!" என்று இன்னொருவன் ஆமோதித்தான்.

படகு பார்ப்பதற்கு வெகு அழகாயிருந்தது. அதன் கீழ்த்தளம் ஒரு எழில் மிகுந்த வீடாகவே தோன்றியது. அந்தப் படகில் மேல்தளம் வேறு ஒன்று அமைத்துக் காற்றோட்டமுள்ள வசதியான அறையொன்றும் கட்டியிருந்தார்கள். அம்மாதிரியான படகுகள் காணக் கிடைப்பது வெகு அரிது. பெரிய பணக்காரர்களாயுள்ளவர்கள் தங்கள் தேவைக்கென்று பிரத்தியேகமாகத் தங்கள் மேற்பார்வையிலேயே கட்டச் செய்திருக்க வேண்டும் என்பது அந்தப் படகைப் பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தது.

ஏறக் குறைய பதினைந்து தினங்களாக அந்த ஆற்றங்கரையிலுள்ள பங்களா ஒன்றில் பசையுள்ள பணக்காரக்குடும்பம்ஒன்று தங்கியிருந்தது. தினம் காலையும் மாலையும் காற்று வாங்குவதற்காக அந்தக் குடும்பத்தினர் படகில் ஏறி உல்லாசப் பிரயாணம் போய் வந்தனர். சிற்சில சமயம் அந்தப் படகில் கிராமபோன் இசைத் தட்டு வாசிக்கும் ஒலி கேட்கும். சில சமயம் ஹார்மோனியத்தின் ஒலி காற்றில் மிதந்து வரும். ஆற்றங்கரையின் அகன்ற நீண்ட பிரதேசம் முழுவதும் சங்கீதத்தின் இனிய சுநாதத்தினால் நிறைந்து நிற்கும். சங்கீதத்துக்குள்ள சக்தியே அபாரமானது. தனிமையிலும் அதை ஆனந்தமாக அநுபவிக்கலாம். பலர் கூடியிருக்கும் பொழுதும் பிரமாதமாக அநுபவிக்கலாம். உள்ளத்துக் கவலைகளை ஒரு புறம் ஒதுக்கித் தள்ளி உணர்வையும் தென்பையும் உண்டாக்கும் வன்மை சங்கீதத்துக்கு இருப்பதுபோல் வேறு எதற்கும் கிடையாது.

படகோட்டிகள் புயலைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த பொழுது, இரண்டு மூன்று பெண்மணிகளும் இரண்டு மூன்று குழந்தைகளும் இரண்டு மூன்று ஆடவர்களும் படகின் மேல் தளத்தில் அமைந்திருந்த அறையில் அமர்ந்திருந்தனர்.

அவர்களில் யாரும் சும்மா உட்கார்ந்திருக்க வில்லை. அதற்காக அவர்கள் அரும் பெருங் காரியங்களைச் சாதிப்பதில் ஈடுபட்டிருந்தனர் என்றும் சொல்லி விடுவதற்கில்லை. மனிதனால் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது. சும்மா பேசாமல் உட்கார்ந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதித்து விட்டால் போதும்; அது அவனுக்குச் சிறை வாசத்தைக் காட்டிலும் மேலான சிறை வாசமாக, நரக வாசத்தைக் காட்டிலும் மேலான நரக வாசமாக ஆகிவிடும். அந்நிலையிலும்கூட அவனால் பேசாமல் உட்கார்ந்திருக்க முடியாது. ஏனெனில் அவன் மனம் அவனைச் சும்மா உட்கார்ந்திருக்க விடாது. ஏதாவது யோசனையில் ஆழ்த்தியவண்ணமே இருக்கும். ஒரு நாளும் மனம் ஓய்ந்திராது. மனம் ஓய்ந்து விட்டால் மனிதனே ஓய்ந்து விடுவான். எனவேதான் அங்கிருந்தவர்களும் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. பேசப் பிடிக்காதவர்கள் பேசாமல் பற்பல சிந்தனைகளில்

ஈடுபட்டு யோசனையே உருவாக உட்கார்ந்திருந்தனர். பேசப் பிடித்தவர்கள் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர். இரண்டொருவர் ஏதோ படித்துக் கொண்டிருந்தனர். குழந்தைகள் குதித்துக் கொம்மாள மடித்துக் கொண்டிருந்தன. 'அதைக் கொண்டு வா, இதைக் கொண்டு வா!' என்று அடம் பிடித்து அழுது கொண்டிருந்தன. 'இவன் என்னை அடித்து விட்டான். அவன் என்னைக் கிள்ளி விட்டான்!' என்று கோள் சொல்லிக் கொண்டிருந்தன. இவ்வளவு கூச்சலுக்கும், கூக்குரலுக்கும் மத்தியில் கிராமபோன் இசைத் தட்டு வேறு தன் போக்கில் ஏதோ ஒரு பாட்டைப் பாடிக் கொண்டிருந்தது. எல்லாமாகச் சேர்ந்து கூச்சலும் கொம்மாளமுமாகப் படகு முழுவதும் ஏக அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தது.

இந்தச் சமயத்தில்தான் படகோட்டிகள் புயலைப் பற்றிப் பேசலாயினர். படகோ பெரியது. அதன் ஒரு கோடியில் நின்று கொண்டு இன்னொரு கோடிக்குச் செய்தி சொல்வதென்றால், மெதுவான குரலில் சொன்னால் காதில் விழுமா? உரக்கத்தானே சொல்ல வேண்டும்? எனவே, படகோட்டிகளின் பேச்சுக் குரல் மற்ற குரல்களையெல்லாம் மேவி மேல் தளத்திலிருந்தவர்கள் காதிலும் போய் ஒலித்தது. அடுத்த நிமிஷமே மேல் தளத்தின் அவ்வளவு கூக்குரலும் அடங்கி அமைதி நிலவியது. 'என்னவோ, ஏதோ?' என்ற கவலை ஆட்கொண்டு விட்டால் அப்புறம் பேச்சுக்கு இடம் ஏது?

மேல்தளத்தில் இருந்தவர்களில் ஒருவர் கனவிலிருந்து தான் கண் விழித்துக் கொண்டாரோ அல்லது கனவு கண்டு கொண்டேதான் கூச்சலிட்டாரோ, தெரியாது! "என்ன அப்பா, என்ன சமாசாரம்?" என்று குரலில் பரபரப்பு தொனிக்கக் கேட்டார்.

அவர் கேட்ட கேள்விக்குப் படகோட்டிகள் பதில் சொல்லவில்லை. பேரிரைச்சலுடன் வீசிய பெருங் காற்றுத்தான் பதில் சொல்



வியது. அது அடித்த வேகத்தில் ஆற்றங் கரையில் அகந்தையுடன் தலைநிமிர்ந்து நின்ற மரங்கள் அசைந்தாடின; பேய் பிடித்தவை போல் தலை விரித்தாடின. உயர்ந்து உயர்ந்து எழும்பிச் சீறும் அலைகளுக்குப் பயந்து படகும் ஆட்டங் கொடுத்து நடுக்கத்துடன் நின்றது. காற்றின் வேகம் குறையாமல் அதிகரிக்கவே, படகு வாழையிலை போல் ஆடத் தொடங்கி விட்டது. அதைக் கண்ட படகோட்டிகள் பயந்து தங்களுக்குள் மறுபடியும் கசமுச வென்று ஏதோ பேசிக் கொள்ளலாயினர். அதுவரை தன் போக்கில் பாடிக் கொண்டிருந்த கிராமபோன் இசைத் தட்டும் பாடுவதை நிறுத்தி விட்டது.

"ஜாக்கிரதை! ஜாக்கிரதை! இழுத்துப் பிடி! கயிற்றைத் தளர்த்தி விடு! பாயை அவிழ்த்து விடு! அட கடவுளே!"— இது போன்ற பல அபயக் குரல்கள் படகில் எழுந்து படகிலேயே எதிரொலித்தன.

பயங்கரப் புயல் ஒன்று உருவாகி, மதம் பிடித்த யானையைப் போல் முன்னேறி வந்து கொண்டிருந்தது. மதம் பிடித்த யானைக்கு, 'வழியில் இன்ன பொருள் இருக்கிறது. இதை நாம் அழிக்கக் கூடாது' என்றெல்லாம் எண்ணத் தோன்றுமா? கண்களில் பட்டவைகளைப் பூவோ, பிஞ்சோ, காயோ, கனியோ, மரமோ, செடியோ எதுவாயிருந்தாலும் பிடுங்கியெறிந்து அழித்துக் கொண்டுதானே வரும்? குழந்தை குட்டிகளை ஒன்றும் செய்யக் கூடாது என்று எண்ணுமா? அதேபோலத் தான் பயங்கரப் பேய்க் காற்று அகப்பட்டதையெல்லாம் அழித்தவாறு கனவேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது.

கரையில் நின்ற வண்ணம் ஒரு ஆடவன் தினம் போலப் படகையே பார்த்துக் கொண்டிருந்தான். பயங்கரப் பேய்க்காற்றில் படகு ஆடி ஆடி முக்குளித்து எழுந்திருப்பதைக் கண்ட அவன் விரைவாக இறங்கிப் படித்துறையை அணுகினான். அருகிலேயே பரிசல் போன்ற சிறு தோணி ஒன்று கட்டப் பட்டிருந்தது. அதை அவிழ்த்து அதில் ஏறி உட்கார்ந்து கொண்டான். தண்ணீரில் தவித்தவாறு நின்று கொண்டிருந்த பெரிய படகை நோக்கித் தன் சிறு தோணியைப் பலம் கொண்ட மட்டும் வேகமாகச் செலுத்தினான்.

"இத்தனை பெரிய படகே இப்படி ஆடுகிறதே! இந்தச் சிறு தோணி இந்தப் பெருங் காற்றை எதிர்த்து எப்படி நிற்கும்? இந்த ஆசாமி இவ்வளவு துணிச்சலுடன் இதை ஓட்டி வருகிறானே!' என்று எண்ணிய படகோட்டிகளில் ஒருவன், தோணி அருகில் வந்ததும், "இந்தப் புயலில் இந்தச் சிறு தோணியை எடுத்துக் கொண்டு எங்கே அப்பா புறப்பட்டுப் போகிறாய்?" என்று கேட்டான்.

"நான் எங்கும் போகவில்லை. உங்களை முன்னேற வேண்டாம் என்று தடுப்பதற்காகத்தான் வந்திருக்கிறேன்!" என்றான் அந்தச் சிறு தோணியை ஓட்டி வந்தவன்.

"அது எப்படி முடியும்? இதில் உள்ளவர்களை இவர்கள் தங்கியிருக்கும் மாளிகை வரை நாங்கள் கொண்டுபோய்ச் சேர்த்தாக வேண்டுமே?" என்றான் படகோட்டி.

"ஏன், அப்பா! நீ பெரிய முட்டாளாக அல்லவா இருப்பாய் போலிருக்கிறது! இந்தப் புயலில் படகு எப்படிப் போகும்? எல்லோரையும் கவிழ்த்துக் கொன்று போட விரும்புகிறாயா, என்ன?" என்று கேட்டான் தோணியை ஓட்டி வந்த வாலிபன்.

"வேறு என்ன செய்வதுங்க?"

"இதோ எதிர்த்தாற் போல் இருக்கும் துறையில் இவர்களைக் கொண்டு போய் இறக்கு. காற்று நின்றபின் போகலாம்!" என்று ஆலோசனை சொன்னான் வாலிபன்.

படகோட்டிகள் மிகவும் பிரயாசைப் பட்டு அரை மணி நேரத்துக்கு மேலாக அல்லாடிய பின் படகைத் துறையில் கொண்டு வந்து சேர்த்தார்கள். வந்த புயல் வெறும் புயலாக மட்டும் வரவில்லை; கூடவே தடி மழையும் கொண்டு வந்திருந்தது. 'கொட்டு, கொட்டு' என்று மழை கொட்ட மேகங்கள் தயாராகக் காத்துக் கொண்டு நின்றன.

"இத்தனை வருஷங்களாக நீங்கள் படகு ஓட்டிக் கொண்டிருக்கிறீர்களே! இந்தப் புயலிலும் மழையிலும் படகை ஒரு அடிகூட மேலே ஓட்டிச் செல்ல முடியாது என்பது உங்களுக்குத் தெரியவில்லையா?" என்று கேட்டான் வாலிபன். அவ



ளுக்குப் படகு ஓட்டி அவ்வளவு அநுபவம் இருந்தால்தானே ?


"முடியாது என்பது நம் அகராதியிலேயே கிடையாது, தம்பி! என்ன மழையாகத்தான் இருக்கட்டும், என்ன புயலாகத்தான் இருக்கட்டும்; நாங்கள் படகைக் கொண்டு போய்க் கரை சேர்த்து விடுவோம். ஆனால் இந்தப் படகு புது மாதிரியாக இருக்கிறது. இம்மாதிரிப் படகை ஓட்டி எங்களுக்குப் பழக்கமில்லை. அதனால்தான் இவ்வளவு கஷ்டம்!" என்றான் படகோட்டி. ஒரு தொழில் தெரிந்தவர்கள் தங்களுக்குத் தெரியாது, முடியாது என்று எங்கேயாவது ஒப்புக் கொள்வார்களா?

"சரி, அதெல்லாம் இருக்கட்டும். முதலில் பிரயாணிகளை ஜாக்கிரதையாக இறக்கி எதிரேயுள்ள சத்திரத்துக்குக் கொண்டு போய்ச் சேருங்கள். நேரம் ஆக்காதீர்கள். மழை வந்து விடப் போகிறது!" என்று எச்சரித்தான் அந்த வாலிபன்.

"அது தான் சரி! இந்த நேரத்தில் வேறு எங்கே இடம் கிடைக்கப் போகிறது?" என்று ஆமோதித்தான் படகோட்டிகளில் ஒருவன். பிறகு மற்ற படகோட்டிகளின் உதவியோடு குழந்தைகளையும் பெண்டிர்களையும் ஆடவர்களையும் மெதுவாகப் படகிலிருந்து இறக்கினான். கடைசியில் ஒரு நோயாளிப் பெண்ணை 'ஸ்டிரெக்ச'ரில் படுக்க வைத்து ஜாக்கிரதையாக இறக்கினார்கள்.

எல்லோரும் படகிலிருந்து இறங்கியதும் ஸ்டிரெக்சரைத் தூக்கிக் கொண்டு போய்த் தாங்கள் கையோடு கொண்டு வந்திருந்த தள்ளு வண்டிக்கருகில் வைத்தார்கள். பிறகு மெதுவாக நோயாளியைத் தூக்கி அந்த வண்டியில் படுக்க வைத்தார்கள். ஒருவன் அந்தத் தள்ளு வண்டியைத் தள்ளிக்கொண்டு சத்திரம் இருந்த திசையை நோக்கிப் போகலானான். அந்தத் தள்ளு வண்டியின் வேகத்துக்குச் சரியாக அந்தக் கோஷ்டியுடன் வந்திருந்த பெண்மணிகளில் ஒருத்தியும் எட்டி நடை போட்டு நடக்கலானாள்.

அப்பொழுது கையெழுத்து மறைந்து இருள் கவ்வி விட்டது. வண்டியுடன் போய்க் கொண்டிருந்த பெண் ஒரு முறை திரும்பி ஆற்றை நோக்கினாள். ஆற்று நீரில் முகம் கழுவிக் கொண்டிருந்த வாலிபன்மீது அவள் பார்வை தற்செயலாக விழுந்தது. மையிருட்டாக இருட்டிவிட்ட அந்த நேரத்திலும் கூட அவள் அவனை எப்படியோ அடையாளம் கண்டு புரிந்து கொண்டு விட்டாள். அவனை அங்கே காண அவளுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது. அந்த ஆச்சரிய மிகுதியில் "யார்? சுதாகரா?" என்று சற்று உரக்கவே வாய் விட்டுக் கேட்டு விட்டாள்.




இந்திய தேசிய நாடகக் கழகத்தாரின் "நாம் இந்தியர்" என்னும் உணர்ச்சி ததும்பும் ஹிந்தி நாடகம் புது டில்லியில் பிப்ரவரி முதல் வாரம் ஏழு நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றது. பிறகு ரஸிகர்களின் விருப்பத்துக்கு இணங்க மேலும் மூன்று தினங்கள் அதே நாடகம் நடந்தது. நாடகத்தில் பாதி நடிகர்கள் தமிழர்கள். அவர்களுடைய நடிப்பைச் சபையோர் வெகுவாகப் பாராட்டினர். மேற்படி நாடகத்தின் இரண்டு காட்சிகளை மேலே காணலாம்.

தள்ளு வண்டியில் படுத்திருந்த பெண் 'சுதாகர்' என்ற சொல்லைக் கேட்டதும் ஒரு முறை தலைதூக்கிப் பார்த்தாள்.

அவள் எழுந்திருக்க முயற்சிப்பதாக எண்ணி, "பேசாமல் படுத்துக் கொள்ளுங்கள். எழுந்திருக்காதீர்கள்!" என்று கூட வந்தவர்களில் யாரோ அவளிடம் சொன்னார்கள்.

சுதாகரும் தன் பெயரைச் சொன்ன பெண்மணியைப் பார்த்த வுடனேயே அடையாளம் புரிந்து கொண்டு விட்டான். பல நாட்கள் பழகிய பின் முகம் மறக்குமா? அவள் வேறு யாரும் இல்லை. ராதாதான்! சுதாகரின் சிஷ்யையும் ஜ்வாலாப் பிரஸாதின் மனைவியுமான ராதாதான்!

நோயுற்றுப் படுத்த படுக்கையாகியிருந்த பெண்ணும் ஏற்கனவே அவனுக்கு நன்றாக அறிமுகமானவளேதான்! அவளை இன்னார் என்று சுதாகருக்கு இனம் பிரித்துச் சொல்ல வேண்டுமா? அவன் உள்ளத்தைக் கவர்ந்து இருதயத்தில் அசையாத இடம் பெற்று விட்ட மனோரமாவேதான் அவள்!



திருவண்ணாமலை விக்டோரியா ஹிந்து பாடசாலை மண்டபத்தில் முல்லைக்குடி ஸ்ரீ ஆர். சுந்தரேச சாஸ்திரிகள் சென்ற இரண்டு மாதங்களுக்கு மேலாக வால்மீகி ராமாயண கதா காலக்ஷேபம் செய்து வருகிறார். நாற்பது வருஷங்களாக வால்மீகி ராமாயணத்தை ஆராய்ச்சி செய்தும் விமர்சனங்கள் எழுதியும் காலக்ஷேபம் செய்து வரும் சாஸ்திரிகளுக்குத் திருவண்ணாமலை வாசிகளின் அமோக ஆதரவு ஏற்பட்டிருக்கிறது. ஏராளமான ஜனங்கள் அவர் சொல்லும் வால்மீகி ராமாயணத்தைக் கேட்டு மகிழ்ந்து வருகிறார்கள்.

ராதாவின் குரலுக்குச் சுதாகர் பதில் குரல் கொடுக்கவில்லை. முகத்தில் முத்திட்டு நின்ற நீர்த் திவலைகளைத் துண்டை எடுத்துத் துடைத்து விட்டுக் கொண்டான்.

ராதா மறுபடியும் கூப்பிட்டாள். ஆனால் அவன் அதற்கும் மறு மொழியளிக்கவில்லை. அவனை நெருங்கினாற்போல் நின்று கொண்டிருந்த படகோட்டி ஒருவன். "தம்பி! உன்னைத்தான் அந்த அம்மா கூப்பிடுறாங்க போலிருக்கிறது!" என்றான்.

"தெரிகிறது. நீங்கள் எல்லோரும் முன்னால் போங்கள். நான் தோணியைக் கட்டி விட்டு வருகிறேன்!" என்றான் சுதாகர்.

மழையும் புயலும் பயமுறுத்தவே, எல்லோரும் தர்ம சத்திரத்தை நோக்கி விரைந்தனர். மழையில் நனைந்து சாரல் காற்றும் பட்டால் நோயாளியின் தேக நிலை இன்னும் கெட்டு விடாதா? எனவே, அவர்களுக்குப் பத்திரமாகச் சத்திரத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டால் போதும் என்று தோன்றியது.

ஆனால் சுதாகர் மட்டும் தனியாக நின்ற இடத்திலேயே அசையாமல் நின்று கொண்டிருந்தான். நிமிஷத்துக்கு நிமிஷம் இரவின் இருள் கருகிச் சூழ்ந்து கொண்டிருந்தது. அவன் மட்டும்தான் அசையாமல் நின்று கொண்டிருந்தானே யொழிய, வேகமாக வீசும் பெருங் காற்றில் அவன் ஆடைகள் படபடத்து ஆடிக் கொண்டிருந்தன. படபடத்துக் கொண்டிருந்த அவனுடைய ஆடைகளைப் போலவே, அவனுடைய இருதயமும் அப்பொழுது படபடத்துக் கொண்டிருந்தது.

விதியின் வலிமைதான் எத்தகையது? அவன் யாரை விட்டு விட்டு ஓடி வந்தானோ, அவள் அல்லவா அவனைத் தேடி வந்து விட்டாள்! அவள் கண்களிலேயே படக் கூடாது என்று அன்று சுதாகர் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வந்தானே! அவள் கண்களில் படாமல் இருக்க முடிந்ததா? திடுதிப்பென்று அவள் இங்கே எங்கே வந்தாள்? அவளை இப்படி காணப் போகிறோம் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லையே! அவளாக அவனைத் தேடி வரவில்லை. பின்னே எப்படி வந்தாள்? விதியின் வலிய கரம்தான் அவனிடம் அவளை அப்படி வலியக் கொண்டு வந்து விட்டிருக்க வேண்டும்.

அவன் அன்றைக்கு மனோரமாவை விட்டு விட்டு இரவுக்கிரவே யாருக்கும் தெரியாமல் ஓடிவந்தானே, எதற்காக? யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு வர வேண்டிய அவசியம் அப்படி என்ன நேர்ந்து விட்டது? என்ன நேர்ந்து விட்டது என்று ஒரு கேள்வியா? அடிபட்டு ஆபத்தான நிலைமையில் ரத்தம் வழியக் கட்டிலில் கிடத்தப்பட்டிருந்த மாதவப் பிரஸாதின் நிலைமைதான் அவனை அப்படி ஓடி வரும்படி செய்தது! அவருடைய நிலைமையாவது, அவனை ஓடி வரச் செய்ததாவது! அதிசயமாயிருக்கிறதே!

கொஞ்சம் ஆற அமர இருந்து யோசித்துப் பார்த்தால்தான் அவன் ஓடி வந்ததன் காரணம் விளங்கும். மாதவப் பிரஸாத் அடிபட்டு ரத்தக் காயத்துடன் வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் அவனும் மனோரமாவும் அலறிப் புடைத்துக் கொண்டு அவருடைய அறைக்கு ஓடிப் போனார்கள். மாதவப்பிரஸாதின் நிலையைக் கண்டதும் மனோரமா ஆதங்கத்துடன் அவர் அருகில் சென்று கட்டிலில் உட்கார்ந்தாள். அப்பொழுது கட்டிலில் கிடந்த மாதவப் பிரஸாத் மனோரமாவின் கையை மிகப் பரிவுடன் பற்றிக் கொண்டார். அந்தக் காட்சியை அவன் தன் கண்களாலேயே கண்டான். மாதவப்பிரஸாதினுடைய ஆதரவற்ற பரிதாப நிலைமை அவனுடைய மனத்தையே சுமையாக அழுத்தியது. அவன் நிலையே அப்படியாகிவிட்ட பொழுது அவர் படும் வேதனையையும் துயரையும் கண்ட மனோரமாவின் மனத்திலே மிகப் பெரிய போர் நிகழக் கேட்பானேன்? எனவே, அடுத்த கணமே அவன் உள்ளத்தில் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்த காதல் உணர்ச்சிக்குக் கல்லணை கட்டி விட்டு ஊழியம் செய்ய வேண்டும் என்ற உணர்ச்சிக்கு ஆக்கம் அளித்து விட்டான். காதலை விடக் கடமை மேல் என்பதை முடிவு கட்ட அவனுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. மாதவப் பிரஸாத் படும் துயரையும் வேதனையையும் தன்னுடையதாகப் பாவித்தான். அவனுடைய உள்ளத்தில் உண்மையான மனிதத் தன்மை இடம் பெற்றது. தன்னலம் தலை தூக்காத உபகார சிந்தனை உதயமாகியது. (தொடரும்)


இந்தியாவின் தலைசிறந்த
சைக்கிள் டயர்கள்
சூப்பர் இந்தியா
IT.6692

மனப்போர்

பண்டரி

அன்புள்ள அண்ணாவுக்கு,

நமஸ்காரம். வீட்டிலிருந்து கொண்டு, தங்களுக்கு அதிக இன்னல்கள் விளைவித்ததற்கு முதலில் மன்னிப்புக் கோருகிறேன். தங்கள் சொற்படி கேளாமல் நான் என் இச்சையாகச் சினிமா, விளையாட்டு ஆகியவைகளைப் பார்ப்பதில் பொழுதைச் செலவிட்டு விட்டேன். அதன் விளைவையும் இன்று கண்ணால் கண்டு விட்டேன். எனது அகக் கண்கள் திறந்து கொண்டன. எனவே, தங்களுக்குத் தொந்தரவு கொடுக்க விரும்பாமல் வீட்டை விட்டே வெளியேறுகிறேன். என்னைத் தேடி அலைய வேண்டாம். அன்னையாகிய அண்ணியாருக்கு என் நமஸ்காரத்தைச் சொல்லவும்.

ரங்கன்.

கடிதத்தைப் படித்த கிருஷ்ணமூர்த்தி கல்லாகச் சமைந்து விட்டார். இரவு அவருக்கு உணவு செல்லவில்லை. ரங்கனைத் தேடி எங்கு அலைவது! அவனோடு படிக்கும் பையன்கள் வீடுகூட அவருக்குத் தெரியாது. தெரிந்தாலும் போய் விசாரித்து வரலாம். இரவு முழுவதும் அவருக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. புரண்டு புரண்டு படுத்தார்.

மறுநாள் காரியாலயத்திலும் அவருக்கு வேலை ஓடவில்லை. தம்பி ரங்கனின் நினைவுதான் அவரைச் சுற்றி சுற்றி வந்து வேதனை அளித்தது.

* * *

அன்று காலைப் பத்திரிகையில் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையின் முடிவு வருவதாக இருந்தது. ரங்கனும் அவ்வருஷம் பரீக்ஷை எழுதி இருந்தான். அதனால் பத்திரிகை வாங்கி வர ரயிலடிக்கே சென்று விட்டான். காலை ஐந்து மணிக்கு வரும் வண்டிக்காக மூன்று மணியிலிருந்து தூங்காமல் விழித்திருந்தான். அண்ணன் விழித்து எழுவதற்கு முன்பாக, தான் பரீக்ஷையில் தேர்ச்சி பெற்று விட்டதைச் சொல்லிவிட வேண்டும் என்ற ஆசை அவனுக்கு.

விடிந்து எழுந்த கிருஷ்ணமூர்த்தி, படுக்கையில் ரங்கனைக் காணமற் போகவே, வெளியில் வந்து எட்டிப் பார்த்தார். கையில் பத்திரிகையுடன், கண்களில் நீர் பெருகத் திண்ணையில் தலைகுனிந்தபடி விம்மிக்கொண்டு உட்கார்ந்திருந்தான் ரங்கன். அவ்வருஷம் அவனுக்கு அதிர்ஷ்டமில்லாமல் போய் விட்டது. அவனது முகவாட்டத்தைக் கண்ட கிருஷ்ணமூர்த்தி, "என்னடா, இந்த வருஷம் குண்டு அடித்து விட்டாய் அல்லவா! மூதேவி மாதிரி திண்ணையில் உட்கார்ந்து கொண்டு என்னடா துக்கம் கொண்டாட வேண்டியிருக்கிறது! எவ்வளவு கஷ்டப்பட்டு உன்னைப் படிக்க வைத்தேன்! இப்படி என் தலையில் நெருப்பைக் கொட்டி விட்டாயே!" என்று வசை புராணம் படிக்க ஆரம்பித்து விட்டார்.

முன் பக்கம் தன் கணவனது கூச்சலைக் கேட்டு உள்ளிருந்து ஓடி வந்தாள் சுசீலா. "என்ன நடந்தது! ஏன் ஒரேயடியாகக் காலை வேளையில் இப்படி எரிந்து விழுகிறீர்கள்!" என்று கேட்ட வண்ணம் அருகிலிருந்த ரங்கனை அணுகினாள்.

"இனி என்ன நடக்க வேண்டும்! தம்பியார் பரீக்ஷை பாஸ் செய்து விட்டு வந்திருக்கிறார்! முதலில் சூடாகக் காப்பி போட்டுக் கொடு!" என்று பல்லைக் கடித்துக் கொண்டு சுசீலாவைச் சுட்டுவிடுவதுபோலப் பார்த்தார் கிருஷ்ணமூர்த்தி.

"இதற்காகவா குழந்தையின் பேரில் உங்களுக்கு இவ்வளவு கோபம்! இந்தத் தடவை தப்பிப் போனால் என்ன! அடுத்த பரீக்ஷையில் கட்டாயம் பாஸ் செய்து விடுவான். மனம் நொந்து வந்திருக்கும் அவனுக்குத் தைரியம் சொல்லாமல் நீங்களே இப்படிச் சபிக்கலாமா!" என்று கேட்ட சுசீலாவின் குரலில் குழைவு தோன்றியது.

"உன்னால்தான் இவன் இப்படி கெட்டுக் குட்டிச் சுவராகிறான். நீ செல்லம் கொடுத்து வளர்த்தாய் அல்லவா! அதன் பலனை அநுபவி. இனி, இவனைப் படிக்க வைக்க வேண்டும் என்றால் என் தலையைத்தான் அடகு வைக்க வேண்டும்" என்று சொன்ன கிருஷ்ணமூர்த்தி அப்புறம் அங்கு நிற்கவில்லை.

தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான் ரங்கன். அவன் கண்கள் இரத்தமாகச் சிவந்தன.

"அழாதே, ரங்கா! அண்ணா கோபித்துக் கொண்டாரென்று கவலைப்படாதே. உன்னை எப்படியும் மேலே படிக்க வைக்க நான் ஏற்பாடு பண்ணுகிறேன். முகத்தை அலம்பிக் கொண்டு காப்பி சாப்பிட வா!" என்று பரிவுடன் உள்ளே அழைத்துச் சென்றாள் சுசீலா.

ஒன்பது மணிக்கெல்லாம், கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டு தமது காரியாலயத்துக்குச் சென்று விட்டார் கிருஷ்ணமூர்த்தி. நீண்ட நேரம் பிரமை பிடித்தவன்போல் உட்கார்ந்திருந்த ரங்கன் எழுந்து தனது படிக்கும் அறைக்குச் சென்று ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். வரும் பரீக்ஷைக்கு அப்போதிருந்தே மிக அக்கறையுடன் படிக்க ஆரம்பித்து விட்டான் என்று மனதில் எண்ணியவளாய்ச் சுசீலாவும் தன் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.



சாப்பிட்டு எழுந்த ரங்கன், வெளியில் போய் விட்டுச் சீக்கிரமே வந்து விடுவதாக அண்ணி யிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினான்.

ஆனால் வெளியில் சென்றபின் அவன் மீண்டும் வீடு திரும்பவில்லை. சூரியன் அஸ்தமித்தும் அவன் வீடு வந்து சேராதது கண்டு சுசீலாவுக்கு இருப்பே கொள்ளவில்லை. அங்குமிங்கும் தவியாய்த் தவித் துக் கொண்டு இருந்தாள். இரவு கிருஷ்ண மூர்த்தி காரியாலயத்திலிருந்து வந்ததும் விவரத் தைச் சொன்னாள். "கழுதை கெட்டால் குட்டிச் சுவர்! கவலைப்படாதே!" என்று அலட் சியமாகச் சொல்லி விட்டுத் தம் உடுப்புகளை மாற்றிக் கொள்ள அறைக்குள் சென்று விட்டார்.

ஆனால் சுசீலாவின் மனம் மட்டும் கேட்கவில்லை. ஏதோ யோசனையில் ரங்கனது படிக்கும் அறைக்குச் சென்றாள். அங்கே ரங்கனது கடிதம் அவளை வரவேற்றது. அதைப் படித்த அவள் திடுக்கிட்டுப் போனாள்.

விஷயம் அறிந்த கிருஷ்ணமூர்த்தியும் விஷம் குடித்தவனின் நிலையை அடைந்தார். தமது கோபத்தினால் ஏற்பட்ட அபவாதத்தை நினைக்க நினைக்க அவர் மனத்தை என்னவோ செய்தது.

*   *   *

பதினாறு ஆண்டுகள் கணவனோடு வாழ்ந்த கனகாம்பாள் கைம்பெண்ணாகத் தனது மூத்த பையன் கிருஷ்ணமூர்த்தியோடும், இரண்டு வய துக் குழந்தை ரங்கனோடும் தனது பிறந்தகம் வந்து சரணடைந்தாள். உடன் பிறந்த ஒரே அண்ணா வான சங்கரன் அவளையும் அவள் குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

பதினைந்து வயதுகூட நிரம்பாத கிருஷ்ண மூர்த்தி, படிப்பில் நன்கு அக்கறை செலுத்தி எஸ். எஸ். எல். ஸி.யில் தேர்ச்சி பெறவே, ஆசை மேலிட்டால் திருச்சிக் கல்லூரியில் சேர்த்தார்கள்.

பி. ஏ. பரீக்ஷைக்கு ஒரு மாதம் இருந்தபொழுது கிருஷ்ணமூர்த்தியின் தாயார் காலமாகிவிட்டாள். அதன் பலனாக அவன் படிப்பில் அதிகமாகக் கவனம் செலுத்த முடியவில்லை. இருந்தாலும் ஏதோ ஒரு வகையாகப் பரீக்ஷை எழுதி முடித்து விட்டு ஊர் வந்து சேர்ந்தான். வீடு வந்து சேர்ந்த கிருஷ்ணமூர்த்திக்கு மாமாவின் ஏற்பாட் டின்படி வேலை கிடைத்ததோடு மட்டும் அல்ல; ஏழை வீட்டுச் சுசீலா மனைவியும் ஆனாள். சிறுவன் ரங்கனை வளர்க்கும் பொறுப்பு தனக்கு ஏற்பட்டு விட்டதற்கு அவள் சிறிதும் கலங்கவில்லை. தாயில்லாக் குழந்தையான அவனை வெகு செல்ல மாகவே வளர்த்து வந்தாள். அவன் மனம் கோணாக் காணச் சகியாள். குறும்பில் குறை வில்லாதவனா யிருந்தது போலவே, படிப்பிலும் சூடிகையாகத்தான் இருந்தான் ரங்கன். அப்படி யிருக்கும் பொழுது அவன் பரீட்சையில் தேர்ச்சி பெறுவதில் என்ன சந்தேகம்! ஆனால் விதி சதி செய்து சமயம் பார்த்து அவன் காலை யல்லவா வாரி விட்டு விட்டது! என்ன செய்வான்!

*   *   *

பொழுது புலர்ந்தது. கிருஷ்ணமூர்த்தி படுக்கையிலிருந்து எழுந்து முகத்தைத் துடைத் துக்கொண்டார். ரங்கன் இல்லாமல் ஓர் இரவைக் கழித்து விட்டார். தாயற்ற தம்பி எங்கு உண வின்றி அவதிப்படுகிறானோ என்று அவரது இரத்த பாசம் ஏங்கியது. காரியாலயத்துக்கு இரண்டு நாள் லீவு எழுதிப் போட்டு விட்டு, அவனைத் தேடிப் பார்ப்பது என்று எண்ணினார்.



அதைத் தொடர்ந்தாற்போல் ஒரு சமயம் நல்ல புத்தி வந்து அவன் வீடு திரும்பவும் கூடும் என்ற சபல எண்ணமும் அவ ருக்கு எழுந்தது. எனவே, அன்று ஒருநாள் பார்த்துக் கொண்டு மறுநாள் தேடப் புறப்படலாம் என்று எண்ணிக் காரியாலயத் துக்குச் சென்று விட்டார்.

ஆனால் அவர் நினைத்தபடி அவன் வரவில்லை. எனவே என்ன செய்யலாம் என்று யோசனை செய்தவாறே பத்திரிகை படித் துக் கொண்டிருந்தார் கிருஷ்ண மூர்த்தி. அவர் கண்கள் எழுத் தைப் பார்த்தனவே யொழிய அவரது முழு நினைவும் ரங்கன் எங்கிருப்பானோ என்றே சிந்தித் துக் கொண்டிருந்தது.

இருந்தாற் போலிருந்து நீழ்க் கண்ட செய்தி அவரது கவனத் தைக் கவர்ந்தது.

"விழுப்புரம் அருகே வாலிபன் தற்கொலை. ரயில் தண்டவாளங் களின் இடையில் உடலைக் கொடுத்து விட்டதனால் அடையா ளம் காண முடியாதபடி அவ யவங்கள் சிதறிப் போயின. போலீஸார் பிரேத விசாரணை நடத்தினர். தற்கொலை என்று பஞ்சாயத்தாரால் முடிவு செய்யப்

அன்றாடம் 2 நிமிஷங்கள் செலவழித்தால் போதும் .... நீங்கள் பூரண எழிலுடன் திகழலாம்



பிரதி இரவிலும் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமை உங்கள் சருமத்தில் தடவி நன்கு தேயுங்கள்—ஒரே ஒரு நிமிஷம் தான் ஆகும். அதிலுள்ள எண்ணெய்கள் சருமத்தில் ஊடுருவிச்சென்று, மயிர்க் கால்களில் படிந்திருக்கும் சிறு சிறு தூசியையும் அழுக்கையும் வெளியேற்றி விடுகிறது. சருமத்தை மெதுவாகத் துடைத்து, அது எவ்வளவு பரிசுத்தமாக விளங்குகிறதென்பதைப் பாருங்கள்.


இவ்வற்புத க்ரீமை இன்னும் கொஞ்சம் எடுத்து முகத்திலும் கழுத்திலும் பூசிக்கொள்ளுங்கள். இரவு முழுவதும் அது அப்படியே இருக்கட்டும். காலையில் எழுந்தவுடன் உங்கள் மேனி மிக துல்லியமாயும் பூரண பொலிவுடனும் விளங்குவதைக் கண்டு அதிசயிப்பீர்கள்.

பிரதிதினம் காலையிலும் ஒரு நிமிஷம் உங்கள் முகத்தில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை மெதுவாகத் தடவுங்கள். அது பூரணமாக மறைந்துவிடும். சருமம் பட்டுப்போன்று மழமழப்பாகவும் அற்புதச் சோபையுடனும் விளங்கும்.



கண்ணுக்குப் புலப்படாத வகையில் முகத்தில் மறைந்துள்ள இந்த பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் திரைப்படலம் பகல் முழுவதிலும் உங்கள் எழிலைப் பாதுகாக்கும். உங்கள் மிருதுவான சருமத்திற்கு இந்த பாதுகாப்பு அவசியம்—முக்கியமாக வரட்சைக் காற்றிலும் சூரிய கிரணங்களின் வெப்பத்தாலும் சருமம் துவண்டு போகாமல் காப்பாற்றி வர அத்யாவசியம்.


உங்கள் சருமத்திற்கு இவ்விரட்டைப் பராமரிப்பு ஒவ்வொரு நாளும் தேவை. பாண்ட்ஸ் க்ரீம்கள் இரண்டையும் அன்றாடம் தவறாமல் உபயோகித்து உங்கள் அழகிற்கு அழகு கூட்டுங்கள்!



உலகில் எங்குமே பெண்மணிகள் தங்கள் எழிலை புதுமை குன்றாமல் பாதுகாக்க பாண்ட்ஸ் க்ரீம்கள் இரண்டையுமே உபயோகிக்கின்றனர். அவர்கள் இயற்கை அழகின் இரகசியம் அதுதான்.

முக சிங்காரிப்புக்குந்தான், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவிக்கொண்டால் அதன்மேல் பௌடர் பூசுவது மிக எளிது அழகாயுமிருக்கும், ஞாபகமிருக்கட்டும்.

பாண்ட்ஸ்



ஆசியாவிலேயே மிகப் பெரிய எஃகுத் தொழிற்சாலையான, டாடா கம்பெனி யிருக்கும் ஜாம் ஷெட்பூரில் தமிழர்களால் உருவாக்கப்பட்ட மதராஸ் சம்மேளனக் கட்டிடம். இது சுமார் ரூ 65,000 செலவில் கட்டப்பட்டு 5-2-54 அன்று கிருகப் பிரவேசம் வெகு விமரிசையாக நடந்தது.

பட்டது. பிரேதப் பரிசோதனையின் போது வாலிபனால் எழுதப்பட்டது என்று கருதப்படும் ஓர் கடிதம் சட்டைப் பையி லிருந்து கிடைத்தது. அதில் வாழ்வில் தோல்வி ஏற்பட்டதாலும், தனது சகோ தரனுக்கு, தான் சுமையாக இருக்க விரும் பாததாலும் அவ்வாலிபன் அம்முடிவுக்கு வந்ததாகவும், தான் யார் என்று சொல் லிக்கொள்ள விரும்பாததால் தன் பெயர், விலாசம் எதுவும் எழுதவில்லையென்றும் அதில் கண்டிருந்தது.''

செய்தியைப் படித்த கிருஷ்ணமூர்த்தி பதை பதைத்துப் போனார். உடல் முழு தும் ஓர் பயங்கர உணர்ச்சி பரவியது. கை கால்கள் நடுக்கம் கண்டன. தொண் டையில் ஏதோ அடைப்பதாகத் தோன்றி யது. கண்களில் நீர் பெருக, "ரங்கா! நீ தற்கொலையா புரிந்து கொள்ள வேண் டும், இப்பாவியின் கொடுமையால்! இதற் காகவா உன்னை இவ்வளவு காலம் பாடு பட்டு வளர்த்தேன்!" என்று அவரை அறியாமல் அவரது வாய் அலறியது. செய்தி யைப் புரிந்துகொண்ட சுசீலா வயிற்றிலடித்துக் கொண்டு தரையில் விழுந்து அழுதாள், கன்றை யிழந்த பசுப்போல!

தம்பியின் சடலத்தைப் பெற்றுவர விழுப்புரம் போய் வருவது என்று முடிவுகட்டிய கிருஷ்ண மூர்த்திக்கு உடனே புறப்படக் கையில் பணம் இருந்தால் தானே! பணம் சேகரிப்பதற்காக நண்பர்களைப் பார்க்கப் புறப்பட்டார். மாதக் கடைசியில் யாரிடம்தான் பணம் இருக்கும்! கடைசியில் உன்பாடு பட்டு என்பாடு பட்டுப் பணம் சேர்த்துக்கொண்டு வீட்டுக்கு வரும் பொழுது மணி பத்தாகி விட்டது.

'பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்!' என்பதுபோல் வீட்டினுள் நுழைந்த கிருஷ்ண மூர்த்திக்குத் திடுக்கிடச் செய்யும் ஒரு காட்சி காத்திருந்தது. சுசீலா பேச்சு மூச்சில்லாமல் கட்டிலில் கிடந்தாள். கிருஷ்ணமூர்த்தியின் மாமா அவள் அருகில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

கிருஷ்ணமூர்த்திக்குத் தம் மாமாவைப் பார்த்து, "வாருங்கள், மாமா!" என்றுகூட அழைக்கத் தோன்றவில்லை. சுசீலாவையே பார்த்துக் கொண் டிருந்தார். அவளுக்குத் திடீரென்று ஏற்பட் டுள்ள அசௌக்கியம் என்னவென்று தெரியாமல் விழித்தார். "சுசீலா! சுசீலா!!" என்று கவலை தோய்ந்த குரலுடன் அவளைக் கூப்பிட்டுப் பார்த் தார். கிருஷ்ணமூர்த்தியின் முகம் போய்க் கொண் டிருந்த போக்கைக் காண அவர் மாமாவுக்குப் பயமாகப் போய் விட்டது. அவர் கரங்களைப் பற்றி மெதுவாக வெளியே கூட்டி வந்தார்.

"கிருஷ்ணமூர்த்தி! பயப்படாதே. சுசீலாவுக்கு ஒன்றும் ஆகிவிடாது. டாக்டரைக் கூட்டி வர ஆள் அனுப்பி யிருக்கிறேன், வந்து விடுவார். தைரியமாக இரு!" என்றார்.

"மாமா! தம்பி ரங்கன் எங்களை விட்டு ஒரே யடியாகப் போய் விட்டானே! வாழ முடியாத வன் போலத் தற்கொலையே செய்து கொண் டானே! இனி நான் எப்படி நிம்மதியாக வாழ் வேன்!" என்று கூற வந்த கிருஷ்ணமூர்த்தி கைத்துணியால் வாயைப் பொத்திக் கொண்டு மனம் குமுறினார். அதைக் கேட்ட அவர் மாமா, அடக்க முடியாத சிரிப்பொலியோடு, "அடே, பைத்தியக்காரா! உயிரோடு இருக்கிற வனை இறந்து விட்டான் என்று எதற்கப்பா நினைத்து அழுகிறாய்! ரங்கன்தான் டாக்டரைக் கூட்டி வரப் போயிருக்கிறான். நானும் அவனும் சேர்ந்துதான் ஊரிலிருந்து சிறிது நேரத்துக்கு முன் இங்கு வந்தோம். சுசீலா ஏதோ வாந்தி யெடுத்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்த ரங்கன் 'டாக்டரை அழைத்து வருகிறேன்' என்று ஓடிப் போயிருக்கிறான்" என்றார்.

கிருஷ்ணமூர்த்திக்குத் தம் கண்களையும், காது களையும் நம்ப முடியாத அளவு அதிசயமாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. யாரோ வாலிபன் தற்கொலை செய்து கொண்டதைப் படித்து விட்டு நம் தம்பிதான் தற்கொலை செய்து கொண்டு விட்டானென்று அவசர, ஆத்திரப் புத்தியால் முடிவு செய்து விட்டோமே என்று எண்ணிய கிருஷ்ணமூர்த்தி வெட்கித் தலை குனிந்தார்.

"ரங்கன் பாஸ் பண்ணவில்லையென்று நீ அவனைக் கோபித்திருக்கக் கூடாது. சிறிய பையனுக்குப் புத்தி சொல்லி, தைரியம் சொல்லி அவனைப் படிக்கும்படி செய்திருக்க வேண்டும். அவனை நீ திட்டி விட்டது பொறுக்க மாட்டாமல், ஊருக்கு என்னிடம் ஓடி வந்தான். நான் அவனுக்கு நல்ல புத்திமதி சொல்லி, வீட்டை விட்டு வந்து விட் டால் உன்னுடைய மனமும் சுசீலாவினுடைய மனமும் என்ன பாடு படும் என்று விளக்கி இங்கே கூட்டி வந்தேன். வரும் வழியில் அவ னுடைய சிநேகிதப் பையன்கள் மூலமாக ஓர் சந் தோஷச் செய்தியும் கிடைத்தது" என்றார் மாமா.

"என்ன சந்தோஷச் செய்தி!" என்று கேட்ட கிருஷ்ணமூர்த்தியின் கண்கள் ஆவலில் அகன்றன.

"ரங்கன் பரீட்சையில் பாஸ் செய்து விட்டானும். இதோ அவனது வீட்டுப் போன நம்பரைப் பார்!" என்று செய்தித் தாளை எடுத்துக் காட்டினார்.

ரங்கனின் பரீட்சை நம்பரைப் பத்திரிகையில் பார்த்தவுடன் கிருஷ்ணமூர்த்தியின் உள்ளும் புறமும் மகிழ்ச்சியால் துள்ளின. அச் செய்தியைப் பார்த்துக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியின் பார்வை பக்கத்துப் பத்தியிலிருந்த மற்றுமொரு செய்தியில் தற்செயலாக விழுந்தது.

விழுப்புரத்தில் தற்கொலை செய்து கொண்ட வாலிபனைப்பற்றி மேலும் விவரங்கள் அதில் அடங்கி யிருந்தன.

"தான் காதலித்த பெண்ணைத் தனக்கு மணம் முடிக்காமல் வேறொருவனுக்குத் தன் சகோதரன் தந்திரமாகத் திருமணம் செய்து வைத்து விட்ட தால் வாழ்க்கையை வெறுத்து அந்தப் பையன்

தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிகிறது. பையன் பெயர் ராமசாமி. சிதம்பரம் அவனது இருப்பிடமென்றும் தெரிய வருகிறது."

மேற்படி செய்தியைப் படித்த கிருஷ்ணமூர்த்திக்கு 'அதற்குள் இந்தச் செய்தி எப்படி வந்தது! இன்று காலைதானே நாம் பத்திரிகையில் பார்த்தோம்!" என்ற சந்தேகம் வந்தது. தாம் காலையில் படித்த பத்திரிகையை எடுத்துப் பார்த்தார். இரண்டும் முன்தின மறுதின பத்திரிகையாக இருப்பது அப்புறம்தான் அவருக்குத் தெரிய வந்தது. தம்பி ஓடிவிட்ட கவலையில் நாம் பத்திரிகையைத் தேதி பார்த்துக்கூடப் படிக்கவில்லை என்பதை நினைத்த பொழுது கிருஷ்ணமூர்த்திக்கு அடக்கமாட்டாத சிரிப்பு வந்தது.

அதே சமயம் லேடி டாக்டருடன் வீட்டுக்குள் நுழைந்தான் ரங்கன். எதிரில் தனது அண்ணன் நிற்பதைப் பார்த்தவுடன் ஓடோடி வந்து அவரது காலில் விழுந்து, "அண்ணா! நான் தெரியாமல் தங்களுக்கு துன்பத்தைக் கொடுத்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்!" என்றான் கண்களில் நீர் பெருக. கிருஷ்ணமூர்த்தி பாசத்தோடு ரங்கனை அணைத்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

கமலாவைப் பரிசோதித்து விட்டு வெளியே வந்த லேடி டாக்டர் சிரித்துக் கொண்டே, "இதற்காகவா இப்படிப் பயந்து ஓடி வந்தீர்கள்! இன்னும் எட்டு மாதங்களில் இவள் குழந்தைக்குத் தாயாகப் போகிறாள்! இந்த டானிக்கை மட்டும் கொடுத்து வாருங்கள். வாந்தி யெடுப்பது குறைந்து விடும்!" என்று கூறிக் கையிலிருந்த காகிதத்தைக் கொடுத்தாள். மாமாவும் மருமான்களும் அந்தச் சந்தோஷச் செய்தியைக் கேட்டு ஆனந்தத்தினால் அகல விரித்த கண்களுடன் நின்றனர்.

படித்துப் பாருங்கள்!

நோயில்லா நெறி

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழி நீண்ட நெடுங்காலமாக உள்ளது. உடம்பெடுத்த அன்றே மனிதனை நோய் தொடர ஆரம்பித்து அவன் உடம்பு விழு மட்டும் அவனைப் பல விதத்திலும் வாட்டி வதைக்கிறது. மனித குலம் முழுவதும் நோயற்ற வாழ்வையே நாடி நிற்கிறது. நோயற்ற வாழ்வின் அடிப்படை நோய் நம்மை அணுகாமல் பாது காத்துக் கொள்ளுவதுதான்.

> "எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
> அதிர வருவதோர் நோய்"

என்று வள்ளுவர் பெருமான் இதை அழகாக எடுத்துக் கூறுகிறார். அதுதான் நோயில்லா நெறி, சுகாதார வாழ்வு.

நிலமும் நீரும், கிராமம், நகர் அமைப்பு, தொழிற்சாலைகள், நீர்த்தூய்மை, வீடு, சுடுதலும் இடுதலும், உடற்பயிற்சி, உணவு, உறக்கமும் ஓய்வும், தாய்களையும் குழந்தைகளையும் பேணுதல் முதலிய பல்வேறு பிரிவுகளில், நோய் இல்லா நெறிக்கு இன்றியமையாத வாழ்க்கை முறையை விரிவாக விளக்குகிறது இந்நூல். மேற்படி விளக்கங்களுக்கு ஆதாரமாகத் திருக்குறள், நாலடியார், ஆசாரக் கோவை, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரிய புராணம், கந்த புராணம், புறநானூறு முதலிய பழம் பெரும் தமிழ் நூல்களின் செய்யுட்கள் பெரிதும் பயன்பட்டிருக்கின்றன. சித்த வைத்திய நூல்களின் பாடல்களும் நிறையப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆக்கியோன்; டாக்டர் கோ. துரைராசன், பேராசிரியர், இந்திய மருத்துவக் கல்லூரி, நீழ்ப்பாக்கம், சென்னை – 10; விலை: ரூ. 6—10—0.

சுதந்தரமா?

சர்வ சாதாரண விஷயங்களிலும் யாருக்கும் புலப்படாததோர் உண்மையை ரஸமாக எடுத்துச் சொல்லுவதுதானே கட்டுரையாகும். இப்படிப்பட்ட கட்டுரையாளர் ஆங்கிலத்தில் பலர் உண்டு. ஏ. ஜி. கார்டினர், ஒய். ஒய். ஜி. கே. வி. லாம்ப்—இப்படிப்பல பெயர்களைக் குறிப்பிடலாம். மேற்கண்ட கட்டுரையாளர்கள் பாணியில் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் செய்துள்ள முயற்சியே இந்நூல். "உணவுக் கலை" "நான் விரும்பும் நோய்" "கர்ணன் கலைஞன் ஆனது" "வீட்டுக் கணக்கு" "எங்கள் ரேடியோ" — என்ற பல தலைப்புகளில் பல ரஸமான கட்டுரைகள் இந்நூலில் உள்ளன.

பிரசுரம்: அமுத நிலையம் லிமிடெட், தேனாம்பேட்டை, சென்னை-18 விலை: ரூ. 1-2-0.

மணல் வீடு

விநோதா இளமையிலேயே மணம் இழந்த மலர்; பிருந்தா மணம் வீசத் துவங்கியிருக்கும் புது மலர்; ராமச்சந்திரன் அந்தப் புது மலரைச் சுற்றி வரும் வண்டு; கோமளி விநோதாவின் சகோதரி; உடன் பிறந்தவளைச் சந்தேகித்து மனம் உடைந்தவள். விநோதாவின் தூய்மையும் களங்கமற்ற தன்மையும் எல்லோரையும் அவளிடம் அன்பு கொள்ளத் தூண்டுகிறது; கதையையும் நல்லபடியாக முடித்து வைக்கிறது. கதையின் சரளமான நடை கதையைத் தங்கு தடையின்றித் தள்ளிக் கொண்டு போகிறது.

எழுதியவர்: அநுத்தமா; பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4: விலை: ரூ. 3.

சார் கே சார் (ஹிந்தி)

இலக்கியத்தில் எப்பொழுதுமே சிறு கதைகளுக்குத் தனி இடம் உண்டு. அந்தச் சிறு கதைகள் தாம் எத்தனை விதம் – சம்பவத்தைப் பிரதானமாகக் கொண்டவை, சிறு நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டவை, மனோதத்துவத்தை நிலைக்களனாகக் கொண்டவை என்று!

பத்துக் கதைகள் அடங்கிய இந்தக் கதைத் தொகுதியில் இத்தகைய பலதரப்பட்ட கதைகளும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் ருசிகரமானவை. அடக்கமான நடையில் அழகான முறையில் 'கல்கி' நேயர்களுக்கு அறிமுகமான ஆசிரியர் ஸ்ரீ கமல் ஜோஷி சம்பவங்களைச் சித்திரித்திருக்கிறார்.

ஆசிரியர்: ஸ்ரீ கமல்ஜோஷி, கிடைக்கும் இடம்: சுப்ரா பிரகாசன்; 26, காண்டிராக்டர்ஸ் ஏரியா, வெஸ்ட் ஜம்ஷெத்பூர், விலை ரூ. 2—8—0.



சிறு துளி பெரு வெள்ளம்

நீர்வளமும் நிலவளமும் சேர்ந்தவிடத்தில் நல்ல விதைகள் தெளித்தால் செழிப்பான விளைச்சல் கிடைக்கிறது.

உங்கள் சொந்த நலனையும், சந்ததியின் நலனையும் உத்தேசித்து இந்த உத்தரவாதமுள்ள செக்யூரிட்டிகளில்

சேமித்து முதலீடு செய்யுங்கள்.

நேஷனல் ஸேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள்	ரூ. 100 முதலீடு செய்தால் 12 வருடங்களில் ரூ. 150 ஆகக் கிடைக்கும்.
பத்துவருட டிரெஷரி ஸேவிங்ஸ் டிபாசிட்டுகள்	3½ சதவிகித வட்டி வருடம் ஒருமுறை வழங்கப்படும். அசல் தொகை 10 வருடங்கள் முதலீட்டிலிருக்கும்.
போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்க் டிபாசிட்டுகள்	ரூ. 15,000 வரை டிபாசிட்டுகளின் மேலே 3 சத விகிதம் வட்டி சேரும். (கூட்டுக் கணக்குகளானால் ரூ. 30,000 வரை வட்டியுண்டு.)

சிறு சேமிப்புகளிலிருந்தும் பெரிய பயன்கள் :

இந்தக் குழாய்க் கிணறுகள் அதிக நிலங்களுக்கு நீர்ப்பாசனம் ஏற்படுத்தி உணவுப் பெருக்கத்திற்கு உதவுகின்றன.

கோடியில் ஒருவர்

பி. எஸ். மணி

திருநெல்வேலி - வண்ணார்பேட்டையில், ரஸிகமணியின் இல்லத்தில், அழகான வட்டத் தொட்டி இருக்கிறது. அந்த வட்டத் தொட்டியில் ஞாயிற்றுக்கிழமை தோறும் கம்ப ராமாயணச் சொற்பொழிவை ரஸிகமணி டி. கே. ஸி. அவர்கள் நிகழ்த்துவார்கள். திருநெல்வேலியிலுள்ள ரஸிகர்களும், பிரமுகர்களும் வருவது வழக்கம். மாலையில் ஐந்து மணிக்குக் கம்ப ராமாயண வகுப்பு ஆரம்பமானால் பத்துப் பதினொரு மணி வரை கூட நடக்கும். டி. கே. ஸி. அவர்களின் கம்ப ராமாயண ஆராய்ச்சியில் மூழ்கியவர்களுக்கு நேரம் போவதே தெரியாது. கம்பன் கவி யமுதத்தைப் பருகும் ஆனந்தத்தில் இவ்வுலகையே மறந்து ஈடுபட்டிருப்பார்கள். டி. கே. ஸி. அவர்கள் "இன்று இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம்" என்று சொன்ன பிறகுதான் அவர்களுக்கு இந்த உலகச் சிந்தனைகள் நினைவுக்கு வரும்.

ரஸிகமணியின் பேச்சுத் திறனும் தமிழ்க் கவிதையை ஆணி அடித்தாற்போல் மனத்தில் பதிய வைக்கும் விதமும் ஆங்கில மோகம் கொண்டவர்களைக் கூடத் தமிழில் ஆசை கொள்ளும்படி செய்து விட்டதில் ஆச்சரியமில்லை தானே!

* * *

ஒரு நாள் காலை. ரஸிகமணி டி. கே. ஸி. அவர்கள் தம் இல்லத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் கம்ப ராமாயண ஆராய்ச்சியில் மூழ்கி யிருந்தார். அச் சமயம் ஒரு பிரமுகர் அவரிடம் வந்தார். அவர் ரிடயர்டு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முத்தையா பிள்ளை அவர்கள்.

"தமிழ் பாஷையை எல்லாரும் பிரமாதமாகப் புகழ்ந்து கொண்டாடுகிறார்களே, அதில் என்ன இருக்கிறது? ஆங்கில பாஷையில் ஷேக்ஸ்பியர், வேட்ஸ்வொர்த், மில்டன் போன்றவர்களின் இலக்கியங்களுக்கு ஈடாக எதையாவது தமிழில் சொல்ல முடியுமா?" என்று கேட்டார் முத்தையா பிள்ளை.

ரஸிகமணி, ஸ்ரீ முத்தையா பிள்ளை அவர்களை நாற்காலியில் அமரச் செய்தார். பிறகு, "இதற்கு முதலில் பதில் சொல்லுங்க! தாமிரவருணி ஆறு எந்தெந்தப் புண்ணிய ஸ்தலங்கள் வழியாகப் போகிறது என்று உங்களுக்குத் தெரியுமா?" என்றார்.

"தெரியாது!" என்றார் சர்க்கிள் பிள்ளை.

"நான் தங்களிடம் தாமிரவர்ணி நதியைக் கேளாமல், தேம்ஸ் நதியைப் பற்றிக் கேட்டிருந்தால் உடனே நீங்கள் சரியான பதில் சொல்லி யிருப்பீர்கள்! தமிழிலும் தமிழ் நாட்டிலும் அக்கறை யில்லாமல் ஆங்கில நாட்டையே நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தமிழ் இலக்கியங்களின் மகிமை தெரியாததில் வியப்பில்லைதானே?" என்று கூறினார் டி. கே. ஸி.

முத்தையா பிள்ளை இடைமறித்து, "நான் பள்ளிக்கூடத்தில் தமிழ் படித்திருக்கிறேன். கரடுமுரடான, புரியாத பாட்டுக்களையெல்லாம் படித்ததினால் தமிழைக் கண்டாலே பிடிக்காமல் போய் விட்டது!" என்றார்.



மாயூரம் நகராண்மைக் கழக உயர் நிலைப் பள்ளியின் ஆண்டு விழா பிப்ரவரி பதின்மூன்றும் தேதி அற நிலையப் பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ வெங்கடசாமி நாயுடு தலைமையில் நடந்தது. வருடாந்தர விழாவை ஒட்டிக் கல்விப் பொருட்காட்சியும், 'பாரி வள்ளல்' என்ற நாடகத்தையும் நடத்தினார்கள்.

சாரணர் படையில் ஆர்வம் உள்ள ஸ்ரீ டி. எம். வெங்கட்ரமணய்யா அவர்கள் தலைமையில் மாயூரம் பாரத சாரணச் சிறுவர் மந்திரி ஸ்ரீ வெங்கடசாமி நாயுடு முன்னிலையில் பல சாரணப் பயிற்சிகளைச் செய்து காட்டினர். சாரணச் சிறுவர்களுக்கு ஸ்ரீவெங்கடசாமி நாயுடு பேசுவதையும், பாரி வள்ளல் நாடகத்தில் ஒரு காட்சியையும் மேலே படத்தில் காணலாம். போட்டோ: என். ராமகிருஷ்ண



சைதாப்பேட்டை ஸ்ரீ வெங்கட்ரமண சங்கீத வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியர் சங்கீத வித்வான் ஸ்ரீ வி. ஆர். சேதுராமன் அவர்களும் மாணவ மாணவிகளும்.

மேற்படி வித்தியாலயத்தின் ஆதரவில் சைதாப்பேட்டை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி உற்சவம் பிப்ரவரி 3-ல் "கல்கி" ஆசிரியரால் துவக்கி வைக்கப்பட்டது. வித்தியாலயத்து மாணவிகளும், ஸ்ரீமதி சாவித்திரி கணேசனும் இன்னிசைக் கச்சேரி நடத்தினார்கள். நாலு தினங்கள் சிறப்பாக உற்சவம் நடந்தது. பல பிரமுகர்களும் வித்வான்களும் கலந்துகொண்டார்கள்.

உடனே டி. கே. சி. அவர்கள் கம்ப ராமாயணத்திலிருந்து ஒரு அழகிய பாடலை, பூர்வ பீடிகையுடன் இரண்டு மூன்று தரம் பாவத்துடன் பாடிக் காட்டினார். ஆங்கிலத்தில் ஆர்வம் மிகுந்த சர்க்கிள் பிள்ளைக்குத் தமிழ்ப் பாடல் தெளிவாகப் புரிவதைக் கண்டு வியப்பு ஏற்பட்டது. அன்றிலிருந்து சர்க்கிள் முத்தையா பிள்ளை அவர்கள் ரஸிகமணியிடம் தமிழ் இலக்கியங்களையும், கம்பன் கவிதையையும் கேட்கத் தவறாமல் வரத் தொடங்கினார்.

* * *

ரஸிகமணி அவர்கள் பெரும்பாலும் பணத்தைத் தம் பையில் வைத்துக் கொள்வதில்லை. தம்முடைய காரியதரிசியிடம்தான் கொடுத்து வைத்திருப்பது வழக்கம்.

அதைக் குறித்து அவருடன் நெருங்கிப் பழகிய நண்பர் அவரிடம் கேட்ட பொழுது, "பணத்தை நம் பையில் வைத்துக் கொண்டால் வரவு செலவுக் கணக்கு பார்க்கத் தோன்றும். யாருக்கு என்ன கொடுத்தோம் என்று எண்ணத் தோன்றும். பிறகு கவலையும் நம்மை வந்து ஆட்கொள்ளும். அதனால் தமிழ்க் கவிதையையும், இலக்கியங்களையும் படிக்கும் நேரம் தடைப்பட்டு அல்லவா போய் விடும்?" என்றார்.

தம் வாழ்நாளில் சிறிது நேரத்தைக்கூட வீணாக்காமல் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்ட பெரியாரை வாழ்த்துவது எங்ஙனம்?

* * *

முதல் படிவத்தில் படித்துக் கொண்டிருந்த போது என்னிடம் பௌண்டன் பேனா இல்லை. எனக்குப் பௌண்டன் பேனாவினால் பரீட்சை எழுதவேண்டுமென்ற ஆசை. ரஸிகமணி அவர்களிடம் கேட்டேன். அவர் தம்முடைய பௌண்டன் பேனாவை எடுத்துக் கொடுத்தார். பௌண்டன் பேனாவினால் பரீட்சை எழுதப் போகிறோம் என்ற ஆனந்தம் நிலைகொள்ளவில்லை.

பரீட்சை எழுதி விட்டுத் திரும்பியபொழுது என் ஆனந்தமெல்லாம் துக்கமாக மாறிவிட்டது. என் பையிலிருந்த பௌண்டன் பேனா எங்கேயோ கீழே விழுந்து விட்டது.

ரஸிகமணி அவர்களிடம் போகவே எனக்குப் பயமாயிருந்தது. அவரிடம் நடுங்கிக் கொண்டே சென்று, "நீங்கள் கொடுத்த பேனா தொலைந்து விட்டது!" என்றேன்.

ரஸிகமணி அவர்கள் சிரித்துக் கொண்டே, "பேனா எதற்காக இருக்கிறது, தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியாது!" என்றேன் பயந்தபடியே.

"பேனா இருப்பது தொலைப்பதற்காகத்தான்! பேனா சாசுவதமாக இருந்துவிட்டால் பேனா கடைக்காரர்களெல்லாம் பிழைப்பது எப்படி?" என்றார். இன்றும், எந்தப் பேனாவைப் பார்த்தாலும் ரஸிகமணி அவர்களின் பதில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

சாதாரண மனிதராயிருந்தால், கோபித்துக்கொண்டு எரிந்து விழுந்திருப்பார்கள். பெருந் தன்மையுள்ளவராயிருந்தால், "போனால் போகட்டும்; வருத்தப்படாதே!" என்று ஆறுதல் சொல்லியிருப்பார்கள். "வருத்தப்படாதே!" என்று ரஸிகமணி அவர்கள் சொல்லியிருந்தாலும் எனக்கு வருத்தமாகத்தான் இருந்திருக்கும்.

சிறு பையனாகிய என் மனசு புண் படக்கூடாது என்பதற்காக டி. கே. சி. அவர்கள் அதை ஒரு சிரிப்புக்குரிய விஷயமாகச் செய்து விட்டார்! அவரைப் போன்றவர் கோடியில் ஒருவர்தான் இருக்க முடியும்.

நடுக்கும் குளிர் ஜுரம் மேலும் உடலில் வலி இவற்றுடன் ஆரம்பமாகும்

மலேரியாவை

'பாலுட்ரின்'

நீக்குகிறது

மலேரியாவின் சின்னங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்

முதலில் குளிரால் நடுக்கம் உண்டாகும், ஜுரம் ஆரம்பமாகும். பிறகு உடம்பு முழுவதும் வியர்த்து வலி உண்டாகும். இந்த அறிகுறிகள் ஏற்பட்டால் உடனேயே டாக்டரைப் பாருங்கள்.

எப்பொழுதும் 'பாலுட்ரின்' சாப்பாட்டிற்குப் பிறகு ஒரு டம்ளர் தண்ணீருடன் உட்கொள்ளுங்கள்.

வயதுவந்தவர்களுக்கும், 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும்: ஒரு மாத்திரை

6 லிருந்து 12 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு: அரை மாத்திரை

6 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு: கால் மாத்திரை

தினந்தோறும் ஜுரம் குணம் அடையும் வரை கொடுக்கவும்.



ICI



6

தென்னந் தோட்டத்தில் ஈர மண்ணைக் காலால் உதைத்தவாறே அங்கு தனியே நடந்து கொண்டிருந்தான் இனியன். தான் நினைத்தபடி எல்லாம் நடந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று அவன் ஏக்கம் நிறைந்த மனம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

மாலை நெருங்கிக் கொண்டிருந்தது. லேசாக விட்டு விட்டு மழையும் தூறிக் கொண்டிருந்தது. காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. நெருக்கமாக இருந்த தென்னை மரங்களிலும், இதர மரங்களிலும் காற்று அடித்ததால் 'சோ'வென்று ஒரு பீதி தரும் சத்தம் எழுந்தது. தாமரைக் குளத்துப் பக்கமாகக் 'கல கல' வென்ற நடுக்கம் தரும் ஓசை காற்றில் மிதந்து வந்தது.

தலைசாய்ந்து உருக்குலைந்து கிடந்த இரு செடிகளும், பயங்கரமாக வீசிய காற்றும் இனியன் இதயத்தில் ஏதோ உணர்ச்சியைத் தூண்டி விட்டன. அவன் மெதுவாக நடந்து சென்றான். அங்கு தாழ்வாக சாய்ந்து வளர்ந்திருந்த மாமரத்தில் சாய்ந்த வண்ணம் உட்கார்ந்தான். அவன் சிந்தனை எதிர்காலத்தை எண்ணிச் சுழன்று கொண்டிருந்தது. காற்று சுற்றிச் சுற்றிச் சுழன்று வீசியது. விட்டு விட்டுப் பெய்த மழைத் தூறலும் இப்பொழுது அடியோடு நின்று விட்டது.



மனத்தில் பலப் பல எண்ணங்கள் வாட்டப் பல்லைக் கடித்துக்கொண்டே யாரையோ தேடிக் கொண்டே ஈர மண்ணில் நடந்து வந்தாள் தேன்மொழியாள். அப்பொழுது தான் இனியன் மெதுவாக நடந்து மாமரத்தின் மீது சாய்ந்த வண்ணம் உட்கார்ந்ததைப் பார்த்தாள். அவள் அணிந்திருந்த உடையில் ஒரு பகுதி நனைந்து இருந்தது. அது அவள் உடலோடு உடலாக ஒட்டிக் கொண்டிருந்தது. இனியன் உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சற்று அருகே சென்று அவன் என்ன செய்கிறான் என்பதைக் கூர்ந்து பார்த்தாள். கைகளை மூடுவதும், ஒரு கையால் இன்னொரு கையைப் பிசைவதும், பெருமூச்சு விடுவதுமாக இனியன் உட்கார்ந்திருந்தான்.

தேன்மொழி அவன் அறியாமல் மெதுவாக நகர்ந்து அவனுக்குப் பின்னால் சென்றாள். 'சட்'டென்று தன் மலர்க் கரங்களால் அவன் கரிய பெரிய கண்களை மூடினாள். இதை எதிர்பார்த்து அமர்ந்திருந்தவன் போல நிதானமாக அந்தக் கரங்களைப் பற்றி ஆவலோடு திரும்பினான் இனியன். அன்பும் ஆதரவும் நிரம்பிய அகன்ற கண்களால் அவளைப் பார்த்தான்.

அவளது உருண்டையான முகம். அவள் முகத்துக்கு ஏற்ற எடுப்பான பெரிய மூக்கு. அதற்கு மேலே கருவண்டு போலப் படபட வென்று ஆடித் துடிக்கும் பெரிய விழிகள். அதை ஒட்டினாற்போலிருந்த சிறிய – ஆனால் அழகு நிறைந்த சிவந்த காதுகள், அவள் சுருண்ட கூந்தலை விலக்கிக் கொண்டு எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. அதில் 'பளிர்' என்று ஒளி வீசிக் கண்ணைச் சிமிட்டி மின்னின இரண்டு வெள்ளைத் தோடுகள். ஒரு பெண்ணின் முகத்துக்கு அழகை ஊட்டும் தேர்ச்சிபெற்ற கலைஞனின் திறமையை அந்த வெள்ளைத் தோடுகளில் காண முடிந்தது. அவள் கரிய கண்களில் நிரம்பியிருந்த திகைப்பு கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிந்து கொண்டிருந்தது. இனியனின் கையிலிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டு தோளில் கிடந்த புடவைத் தலைப்பைச் சரிப்படுத்திக் கொண்டாள்.

"இவ்வளவு அழகாகக் குற்றமே இல்லாத ஒன்று உலகத்தில் இருக்க முடியுமா!" என்று எண்ணி, எண்ணி ஆச்சரியப்பட்டான் இனியன்.



தேன்மொழி அவன் முன்பு தலையைக் குனிந்த வண்ணம் கட்டை விரலால் நிலத்தைக் கீறிக் கோடு போட்டுக் கொண்டிருந்தாள்.

இனியன் அவளை உட்காரும்படி சைகை செய்தான். அவளும் அவன் எதிரில் அமர்ந்தாள். இருவரும் எதிர் எதிரே அமர்ந்த வண்ணம் நெடு நேரம் வரை பேசாமல் இருந்தனர்.

கடைசியாக இனியன் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு, "தேன்மொழி, உன்னிடம் இன்று ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்கலாம் என்று ஆசைப்படுகிறேன்" என்றான்.

அவள் கண்களில் சிறிது நாணம் தோன்றியது போலிருந்தது. "எதைப் பற்றிக் கேட்கப் போகிறீர்கள்!" என்று ஆவலோடு கேட்டாள்.

இனியன் சிறிது வெட்கப் பட்டான். தேன்மொழியைப் பார்க்காமல் தலையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டான்.

"உனக்குக் கல்யாண ஏற்பாடுகள் நடக்கிறதாமே! உண்மையா!" என்று கேட்டான்.

தேன்மொழி மெதுவாகத் தலையை உயர்த்தி, "ஆமாம்! என்னைக் கேட்காமலே என் பெற்றோர்கள் என் திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்" என்றாள்.

இனியன் மெதுவாகத் தலையை அசைத்தான்.

"தேன்மொழி! உன்னைப் பார்த்த பிறகு, உன் அன்பின் ஆழத்தைத் தெரிந்து கொண்ட பிறகு என் உள்ளத்தில் இன்னொருத்திக்கு என்னால் இடம் கொடுக்க முடியவில்லை. அதனால்தான் உன் மனதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். உண்மையைச் சொல்!" என்றான்.

"இந்த ஜன்மத்தில் நான் உங்களையே என் கணவராக ஏற்றுக் கொண்டு விட்டேன். இது நிச்சயம். ஆனால் இந்த என் ஆசையை நான் எப்படி என் பெற்றோர்களிடம் சொல்லுவது என்று தவித்துக் கொண்டிருந்தேன். இன்று உங்கள் மனதையும் தெரிந்து கொண்டேன். இனி தைரியமாக என் எண்ணத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி விடுவேன்" என்றாள்.

"தேன்மொழி! அடாடா! உன் குரலில் தான் என்ன இனிமை. உனக்கு ஏற்ற பெயர் தான் வைத்திருக்கிறார்கள்."

தேன்மொழி புன் சிரிப்புடன் சொன்னாள்: "என் தந்தை எனக்கு அந்தப் பெயரை எல்லாரையும் போலச் சும்மா வைத்து விடவில்லை. தகுந்த காரணத்துடன்தான் வைத்திருக்கிறார்."

"அதென்ன காரணம்!"

தேன்மொழி ஒரு புது உற்சாகத்துடன் ஒரு முறை இனியனைப் பார்த்தாள். தான் இதுவரையில் உட்கார்ந்திருந்த நிலையில் இருந்து சற்று மாறி உட்கார்ந்து கொண்டாள். ஆனந்தமாகத் தனக்குப் பெயர் வைத்த வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தாள். அடாடா! அப்பொழுது அவள் முகத்தில்தான் என்ன ஆனந்தம்!

"என் தகப்பனார் உங்கள் பண்ணையில் பாடுபட்டு உழைத்தார். அவருடைய உழைப்பும் இனிய சுபாவமும் அவரை எல்லாருக்கும் பிடித்து விட்டது. ஊரெல்லாம் அவரைப் புகழ்ந்தார்கள். ஆனால் அவருக்கு மட்டும் ஒரு குறை இருந்தது. தன் பெயரை எடுக்க ஒரு குழந்தை இல்லையே என்று வருந்தினார். காலையிலும் மாலையிலும் அதையே நினைத்துக் கொண்டிருப்பார். அவரைத் தேற்ற ஒருவராலும் முடியாது. ஒரு பெரியவர் தேனினும் இனிய குரலில் தமிழோடு இசை பாடிக்கொண்டு அவரைத் தேடி வந்தார். அவர் அருகில் வரவர அவர் குரல் இன்னும் இனிமையாக இருந்தது. அதை அநுபவித்துக்கொண்டே இருந்தார், என் தந்தை. அந்த மனிதர் என் தந்தையிடம் வந்ததும், 'ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறீர்!' என்று கேட்டார். தந்தை என்ன பதில் சொல்லுவது என்று தெரியாமல் தவித்தார். 'உம் குழந்தை எங்கே!' என்றார் அந்தப் பெரியார். 'அந்தப் பாக்கியம்தான் கிடைக்கவில்லை' என்று வருத்தப்பட்டார் என் தகப்பனார். உடனே என் தாயை அழைத்து அவள் கையை நீட்டச் சொல்லி நாடியைப் பிடித்துப் பார்த்தார். மெதுவாகச் சிரித்துக் கொண்டார். 'உங்களுக்கு நிச்சயம் புத்திர பாக்கியம் உண்டு. அதற்காக நீங்கள் காசி ராமேஸ்வரம் செல்ல வேண்டாம். நான் சொல்லுகிறபடி நடந்து வந்தால் போதும்' என்று சொல்லி ஏதோ சில ஆசனங்களைச் சொல்லிக் கொடுத்து அதைத் தினமும் பழகி வரும்படி.



சொன்னார். என் தந்தைக்கும் சில ஆசனங்களைச் சொல்லிக் கொடுத்தார். தினம் தவறாமல் அவரையும் ஆசனங்களைப் பழகி வரச் சொன்னார். இப்படியே தினம் தினம் செய்து கொண்டு வாருங்கள். நல்ல புஷ்டியான ஆகாரங்களைச் சாப்பிடுங்கள். உங்களுக்குக் கட்டாயம் குழந்தை பிறக்கும்' என்று சொல்லி விட்டு அவர் போய் விட்டார்.

"அது முதல் என் தாயாரும் தகப்பனாரும் காலையிலும் மாலையிலும் அந்தப் பெரியவர் சொல்லிக் கொடுத்த ஆசனங்களைப் போட்டு வந்தனர். அதனால் நல்ல பசியும் உடம்பில் ஒரு மினுமினுப்பும் ஏற்பட்டு என் தாய் அடையாளம் தெரியாமல் மாறி விட்டார்கள். முன்பெல்லாம் சதா நோய் நோய் என்று இருப்பார்கள். இப்பொழுது நோயின்றிச் சுகமாக இருந்தார்கள். அடுத்த ஆண்டு நான் பிறந்தேன்" என்று சொல்லித் தேன்மொழி சற்று நிறுத்தினாள்.

"ஆகா! நான் எவ்வளவு பாக்கியசாலி. அந்தப் பெரியார் பல்லாண்டு வாழ்க!" என்றான் இனியன். சற்று நேரம் அவள் முகத்தைப் பார்த்தான். அவள் கண் விழிகளில் துள்ளி விளையாடிய அழகைப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்!" என்று கேட்டாள் தேன்மொழி.

"ஒன்றுமில்லை. மேலே உன்னுடைய கதையைச் சொல்லு" என்றான் இனியன்.


"பெற்றோர்கள் எனக்கு என்ன என்னவோ பெயர் வைத்து அழைத்து வந்தார்கள். ஒரு நாள் நான் என் தாய் தந்தையருடன் முருகன் கோயிலுக்குப் போயிருந்தேன். என் தாயார் சொல்லிக் கொடுத்திருந்த திருப்புகழைச் சுவாமி சன்னிதியில் பாடிக் கொண்டிருந்தேன். 'அப்பொழுது முன் எங்கள் பெற்றோருக்கு ஆசனங்கள் சொல்லிக் கொடுத்த பெரியார் என் பாட்டைக் கேட்டுக் கொண்டே அங்கு வந்தார். என் தந்தை அவரைப் பார்த்து வணங்கி 'இதுதான் என் குழந்தை. தங்கள் உதவியால் குழந்தையுடனும் நோய் நொடி இன்றியும் இருக்கிறேன்' என்றார். அவர் என் குரலினிமையைப் பார்த்துப் பாராட்டி விட்டுக் குழந்தைக்கு, 'என்ன பெயர் வைத்திருக்கிறீர்!' என்று கேட்டார். 'இன்னும் ஒன்றும் வைக்கவில்லை. நீங்களே ஏதாவது பெயர் வையுங்கள்' என்றார் தந்தை. அவர் எனக்குத் 'தேன்மொழி' என்று பெயரிட்டார்" என்றாள்.


இனியன் தேன்மொழி சொன்ன கதையைக் கேட்டுக் கொண்டே யோசனையில் ஆழ்ந்து விட்டான். மெதுவாக எழுந்து அவள் அருகில் சென்றான். "தேன்மொழி" என்று அழைத்து ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

அதற்குள் தேன்மொழி "அப்படியாக என்னைப் பெற்றெடுத்துப் பெயர் வைத்த பெற்றோர்கள் இது வரையில் என் விருப்பப்படி நடந்து வந்தார்கள். இப்பொழுது என் கல்யாணத்தைப் பற்றி என் அபிப்பிராயத்தை மதித்து ஏற்றுக் கொள்கிறார்களோ, என்னவோ!' என்றாள். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"தேன்மொழி! அதே போல்தான் நானும் நினைத்துக் கொண்டிருக்கிறேன். என் பெற்றோர்களும் இதைப் பற்றி என்ன சொல்லுவார்கள் என்று தெரியவில்லை" என்றான்.

"உங்கள் பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை என்றால் உங்களுக்குக் குறை ஒன்றும் ஏற்படாது. உங்களை மணந்து கொள்ள எத்தனையோ பெண்கள் வருவார்கள். ஆனால் நான் என் மனத்





ஜனவரி மாதம் 31ந் தேதியன்று 'வால் கார்ட் பிரதர்ஸ்' லிருக்கும் ஸ்ரீ கோபால் அவர்களுக்கும் கொச்சியைச் சேர்ந்த சித்தூர் ஸ்ரீ கிருஷ்ண ஐயர் குமாரி செல்வி விசாலாட்சிக்கும் பம்பாய் மாதுங்கா ஆஸ்திக சமாஜத்தில் திருமணம் இனிது நடைபெற்றது. வரதட்சணை வாங்கப் பெறாத இத் திருமணத்துக்கு ஏராளமான நண்பர்களும், உறவினர்களும், விஜயம் செய்து மணமக்களுக்கு நல் ஆசி கூறினர். வாழ்க, தம்பதிகள்!

தினால் கூட இன்னொருவரை நினைக்க முடியாதே!" என்றாள் தேன்மொழி.

அவள் குரலில் இருந்த ஏளன பாவம் இனியனுக்குத் தன் ஆண்மையை மட்டுமல்லாமல் மனிதத் தன்மையையே இழிவு படுத்துவதாகத் தோன்றியது. அவனுடைய உடலில் ஒரு புது உணர்ச்சி துள்ளி ஓட ஆரம்பித்தது. அவன் கண்கள் 'பளீர்' என்று பிரகாசித்தன.

"ஓகோ! நான் மட்டும் இன்னொருத்தியை ஏற்றுக் கொள்வேனா! அப்படியா சொல்கிறாய்!" என்று கேட்டுக் கொண்டே அவள் பக்கம் நெருங்கி உட்கார்ந்தான்.

"இல்லை. நீங்கள் சொன்னதற்காகக் கேட்டேன்; அவ்வளவுதான்!"

"அப்படி என்னைச் சாதாரணமாக, அன்பில்லாதவனாக நினைத்து விடாதே தேன்மொழி!"

"நான் உங்களைத்தானே நம்பி யிருக்கிறேன்."

"என்னை நம்பு, தாராளமாக நம்பு! என் உடலில் கடைசி உயிர் இருக்கும் வரை உன்னை விட மாட்டேன்" என்று அவள் கைமேல் கை வைத்துச் சத்தியம் செய்தான் இனியன்.

தேன்மொழி மலர்ந்த முகத்துடன் சிரித்தாள். இனியனின் பிடியிலிருந்து தன் கையை எடுத்துக் கொண்டாள். தன் உடம்பை ஒரு தரம் சிலிர்த்துக் கொண்டாள். "என் இன்பக் கனவு இன்று தான் ஈடேறியது" என்றாள்.

இனியன் உதடுகளை இறுக மூடிக் கொண்டு வாய் பேசாமல் இருந்தான். இருவரும் சற்று நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இலேசாகச் சிரித்துக் கொண்டனர்.

இனியனுடைய சிந்தனை சுழன்றது. தேன்மொழியுடன் வான வீதியில் பறக்க ஆரம்பித்தான். சந்திர மண்டலத்துக்குப் போனான். போய்க் கொண்டே இருந்தான். வெள்ளை மலர்க் கூட்டங்கள் போல அவர்களைத் தேடி மேகக் கூட்டங்கள் நகர்ந்து வந்தன. கண்களை மூடிக்கொண்டு இந்தக் காட்சியில் லயித்திருந்தான் இனியன்.

"ஏன் கண்களை மூடிக் கொண்டீர்கள்!" என்ற தேன்மொழியின் குரல் அவன் கனவைக் கலைத்து விட்டது. கண் விழித்தான். தேன்மொழியின் சந்திர முகத்தைப் பார்த்து மகிழ்ந்தான்.

"சரி, நாழிகை யாகிவிட்டது, உன் தாத்தா உன்னைத் தேடி வந்து விடுவார். கிளம்பு, போகலாம்." என்றான் இனியன்.

இருவரும் எழுந்து தென்னந் தோப்புக்குள் புகுந்து வைக்கோல் போர் ஓரமாகச் சென்றனர். தேன்மொழி தன் சிவப்புப் பசுமாட்டின் கழுத்தை ஆசையோடு அணைத்து அதன் முகத்தில் முத்தமிட்டாள். அங்கிருந்த செப்புக் குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு ஒய்யாரமாக நடந்து வந்தாள். தோட்டத்துப் படலை இனியன் திறந்தான். இருவரும் வெளியில் வந்தனர். ஆடாமல் அசையாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு மௌனமாகப் பிரிந்து வெவ்வேறு திசைகளில் சென்றனர்.

•• •• ••

தேன்மொழியின் வீடு அமைதியாக இருந்தது. வீட்டுக் கதவுகள் எல்லாம் அகலத் திறந்து கிடந்தன. வீட்டுக் கொல்லைப் புறத்தில் கட்டியிருந்த பசு கத்திக் கொண்டிருந்தது. இரண்டு நாட்களாகவே அந்தப் பசு அப்படித்தான் கத்திக் கொண்டிருக்கிறது. அந்தப் பசுவை மாட்டுக் கிடையில் கொண்டு போய்விட வேண்டும். அப்படி விட்டால்தான், பசு கத்துவதை நிறுத்தும். இதை இரண்டு நாட்களாகவே தேன்மொழியின் தாய் தன் கணவரிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அவரும் "ஆகட்டும்" "ஆகட்டும்" என்று சொல்லிக் கொண்டு சும்மாவே இருக்கிறார்.

முற்றத்தின் ஓரத்தில் ஒரு தூணில் சாய்ந்து கொண்டு தேன்மொழியின் தந்தை உட்கார்ந்திருந்தார். அவருக்கு வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி வெற்றிலையைச் சுருளாக மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள் தேன்மொழியின் தாய். அப்படி அவள் வெற்றிலை மடித்துக் கொண்டிருக்கும் போதே வீட்டுக் கொல்லையில் பசு கத்தும் பரிதாபமான சத்தம் காதில் விழுந்து கொண்டிருந்தது. அவளுக்கு உடனே பருவமடைந்த தன் பெண் தேன்மொழியின் நினைவு வந்து விட்டது. தானும் அவளைப் போல் மங்கையாக இருந்த காலத்தில் கல்யாணமான பெண்களைப் பார்த்துப் பார்த்து ஏங்கியதை எல்லாம் நினைத்துப் பார்த்தாள். கல்யாணம் ஆனதும் அவள் தந்தை சொன்ன சில வார்த்தைகளும் அவள் மனத்தில் பசுமையாகவே இருந்தன.

"ஏனம்மா சந்தோஷத்தை மனத்தில் அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறாய்! உனக்கு ஏற்ற கணவனைத் தான் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாய். கன்னிப் பெண்கள் எல்லாருமே கல்யாணம் செய்து கொண்டு கணவனுடன் சந்தோஷமாக வாழ வேண்டியது தானே. பெண்கள் எல்லாரும் கணவன் வீடு செல்ல வேண்டும்; குழந்தைகளைப் பெற வேண்டும்; குழந்தைகளை நல்ல புத்தியுள்ள பிள்ளைகளாக வளர்க்க வேண்டும்."

இந்த வார்த்தைகள் எப்பொழுதோ சொன்னவை. அதற்குப் பின் எத்தனையோ ஆண்டுகளை அவள் கடந்து விட்டாள். அழகும் அறிவும் நிறைந்த ஒரு பெண்ணுக்குத் தாயாகி விட்டாள். பெண்ணுக்கு இப்பொழுது திருமணம் செய்து விட வேண்டும்; காலத்தில் செய்ய வேண்டும். அதுவும் இந்த வருஷமே செய்துவிட வேண்டும்.

இதைச் செய்து முடித்தால் மிகப் பெரிய காரியத்தைச் சாதித்து முடித்தது போன்ற ஒரு திருப்தி ஏற்பட்டு விடும்; பத்து மாதம் சுமந்த அவள் தாய் உள்ளம் குளிர்ந்து விடும்.

அதைப் பற்றித்தான் தன் கணவரிடம் மெது வாகப் பேச்சுக் கொடுத்தாள்.

"மாணிக்கம் தங்கமான பையன். பத்தாவது வரையில் படித்து இருக்கிறான். இரண்டு வேலி நிலமும் இருக்கிறது. எப்படியாவது தேன் மொழிக்கும் அவனுக்கும் இந்த வருஷமே கல்யாணத்தை முடித்து விட்டால் தான் என் மனம் அமைதி யடையும்."

தேன்மொழியின் தந்தை இதைக் கேட்டதும் மகிழ்ச்சியால் கண்களை மூடி மூடித் திறந்தார். "ஆமாம்; கட்டாயம் செய்துவிட வேண்டியது தான்" என்று சொல்லிக் கொண்டே வெற்றிலே, பாக்கை மெல்ல ஆரம்பித்தார்.

இதைக் கேட்டவுடன் தாய் சற்றுத் தைரிய மாக முன் வந்து குதூகலத்தோடு பேசினாள்.

"அப்படியானால், உடனே மாணிக்கத்தின் தகப்பனாரை வரவழைத்து முகூர்த்தத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனியுங்கள்."

தந்தை 'சடக்' கென்று அவளை ஒருமாதிரியாகப் பார்த்துவிட்டு, வீட்டுக் கூரையை அண்ணார்ந்து பார்த்தார். தாய் தன் கண்களை இமைக்காமல் அவரையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந் தாள். தந்தை காலை நீட்டிக் கொண்டு, சற்றுக் கேலியாக அவளிடம் பேசினார்.

"அடே! உன் அருமைப் புத்திரிக்குக் கல் யாணம் செய்துவிட வேண்டு மென்பதில் அவ் வளவு ஆவல் உனக்கு. தவம் கிடந்து பெற்ற பெண் அவள். அவள் திருமணத்தை நல்லபடி யாகச் செய்துவிட வேண்டும் என்பதில் எனக் கும் தான் ஆவலாக இருக்கிறது. இருந்தாலும் மாணிக்கம் இதற்குச் சம்மதிக்க வேண்டாமா!"

தாய் மெதுவாகச் சிரித்தாள்.

அப்போது "அம்மா உங்களை எங்கெல்லாம் தேடுவது! இங்கேயா இருக்கிறீர்கள்!" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் தேன்மொழி.

தாய் அவளை ஒரு முறை பார்த்துவிட்டு, அவள் சுருண்ட கூந்தலை அன்போடு தடவிக் கொண்டே, "உன்னைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம்" என்றாள்.

தன் தாயின் குரல் வழக்கத்துக்கு விரோத மாகச் சாந்தம் அடைந்திருப்பதையும், முகத்தில் இளமைக் களை தட்டி யிருப்பதையும் தேன் மொழி கவனித்துப் பார்த்தாள்.

"என்னைப் பற்றி என்ன அம்மா பேசிக் கொண்டிருந்தீர்கள்!"

"உன் கல்யாணத்தைப் பற்றித்தான்."


"என் கல்யாணத்தைப் பற்றியா!" என்று திடுக்கிட்டுக் கேட்டாள் தேன்மொழி.

"ஏன் தேன்மொழி அப்படித் திகைக்கிறாய்!"

"அம்மா! எனக்குக் கல்யாணமே வேண்டாம்."

"தேன்மொழி! நான் சொல்லுவதைக் கேளு. பிறகு நீ உன் அபிப்பிராயத்தைச் சொல்லு. நீ இன்னும் சின்னக் குழந்தை இல்லை. ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள். நாள் ஆக ஆக உனக்கு வயது ஏறிக்கொண்டுதான் இருக்குமே ஒழிய இறங்காது. பெண்ணாய்ப் பிறந்தவர்கள் என்றைக் கிருந்தாலும் ஒரு நாளைக்குக் கணவன் வீட்டுக்குப் போக வேண்டியதுதான். அதைக் காலத்திலே செய்தால் எல்லாருக்குமே நல்லது இல்லையா!" என்றார் தந்தை.

தேன்மொழிக்குப் பதில் சொல்லுவதே கஷ்டமா யிருந்திருக்க வேண்டும். வார்த்தைகள் பல்லிலே சிக்கிக் கொண்டவை போல வெளியில் வரத் தடுமாறின. கைகளைப் பிசைந்து கொண்டு இருந் தாள். அவள் உடல் இலேசாக நடுங்கியது.



ஸ்ரீரங்கம் ஸ்ரீ பி. எஸ். கிருஷ்ண ஐயங்கா ருடையவும் சிறுகதை எழுத்தாளர் ஸ்ரீமதி பத்மாஸனி அம்மாளுடையவும் குமாரத்தி செல்வி மைதிலிக்கும் கும்பகோணம் வக்கீல் ஸ்ரீ கே. சீனிவாச அய்யங்கார் அவர்க ளுடைய குமாரன் செல்வன் எஸ். ராகவ னுக்கும் சமீபத்தில் சென்னை தியாகராய நகரில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. நண்பர்களும், உறவினர்களும், எழுத்தாளர் களும் கல்யாணத்துக்கு விஜயம் செய்து தம்பதிகளை வாழ்த்திப் பரிசுகள் அளித்தனர்.

தாய் அவளை வெறித்துப் பார்த்தாள். தந்தை அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தார். தேன் மொழியின் உள்ளத்தில் சிந்தனை குமுறியிட்டது. தன் உள்ளத்தைத் திறந்து காட்டி விடலாமா என்று எண்ணினாள். இருந்தாலும் அதை வெளிக் காட்ட பயந்து தலையைக் குனிந்து கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

"கல்யாணம் என்பதனால் உன் மீது எங்களுக்கு உள்ள அன்பு குறைந்து விடாது" என்றாள் தாய்.

"கணவன் வீடு போன பின் கணவன்தான் தெய்வம். என்றாலும் தந்தையை மறந்து விடாதே" என்றார் தகப்பனார்.

தேன்மொழி நீண்ட பெருமூச்சு விட்டாள். சிறிது நேரம் அவர்கள் மூவருமே மௌனமா யிருந்தனர். பிறகு தாய்தான் பேசினாள்.

"மாணிக்கம் தங்கமான பிள்ளை. மூக்கு முழியு மாக நன்றாக இருக்கிறான்."

"அம்மா!" என்றாள் தேன்மொழி.

"என்ன, தேன்மொழி!" என்றாள் தாய். தன் னுடைய வளையல் அணிந்த கையால் தேன்மொழி யின் முகத்தைத் தடவினாள். தேன்மொழியின் துக்கம் தோய்ந்த முகத்தைப் பார்த்து இலேசாகப் புன்னகை செய்தாள்.

"நான் வருகிறேன் அம்மா!" என்று சொல்லி எழுந்தாள் தேன்மொழி.


தாயும் அவளுடன் எழுந்து சென்றாள்.

தேன்மொழி படுக்கை அறைக்குள் சென்றாள். படுக்கையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்து விட்டாள்.

"ஏன் இப்படி அழுகிறாய் தேன்மொழி!" என்று கேட்டுக்கொண்டே வந்து விட்டார் தந்தை.

தேன்மொழி மீண்டும் அழ ஆரம்பித்து விட் டாள். தாய் எவ்வளவோ சமாதானம் சொல்லி யும் அவள் அழுகை நிற்கவில்லை. "ஏன் உனக்கு மாணிக்கத்தைப் பிடிக்கவில்லையா!" என்று சற்றுக் கோபமாகவே கேட்டாள்.

மென்று விழுங்கிக்கொண்டு "ஆமாம்; மாணிக் கத்தைப் பிடிக்கவில்லை" என்றாள் தேன்மொழி.



திருநெல்வேலி ஜில்லா இந்திரகுல வேளாள ஹரிஜன சங்கக் காரியதரிசியாகிய திரு செல்லையா அவர்களின் புதல்வி செல்வி லட்சுமிக்கும், திரு சின்னசாமிக்கும் பருத்திக்குளம் மணமகள் இல்லத்தில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருநெல்வேலி ஜில்லா பிரமுகர்களும், நண்பர்களும், உறவினர்களும் திருமணத்துக்கு விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறிப் பரிசுகள் வழங்கினர்.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

இதைக் கேட்ட தந்தைக்கும் தூக்கி வாரிப் போட்டது. அவர் தம் மனைவியின் முகத்தைப் பார்த்தார். அவர் முகத்திலும் கோபக் கனல் பறந்தது. அவர்கள் இருவரும் என்ன செய்வதென்று தெரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தனர். "ஆமாம். மாணிக்கத்தைப் பிடிக்கவில்லை" என்ற துக்கம் தோய்ந்த தேன்மொழியின் சொல் அந்தச் சிறு பொழுதுக்குள் மாறி மாறி ஒலித்து விட்டது. அதனால் தந்தையின் உள்ளத்தில் தேன்மொழிமீது ஒரு பரிவு உணர்ச்சி ஏற்பட்டது. அவர் தேன்மொழியின் தலையை வருடி விட்டுக் கொண்டே, "தேன்மொழி! நீ விரும்பாத பையனைப் பார்த்து உனக்குக் கல்யாணம் செய்து வைக்க மாட்டேன்" என்றார்.

தன் கணவரின் குரலிலும், அவருடைய பரிவிலும் இருந்த அன்பையும், ஆதரவையும், ஆசையையும் பார்த்தாள் தாய். அவளுக்கு என்னமோ திகீர் என்று கோபம்தான் ஏற்பட்டது.

"மாணிக்கம் வேண்டாம் என்றால் உனக்கு வேறு எந்த மாப்பிள்ளை காத்துக் கொண்டிருக்கிறான்!" என்று தேன்மொழியைப் பார்த்துக் கோபமாகக் கேட்டாள் தாய்.

தேன்மொழி பதில் ஒன்றும் சொல்லவில்லை. தன் தந்தையின் அருகில் தலையைக் குனிந்து கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

"என்ன கேட்கிறேன், மௌனம் சாதிக்கிறாய்! மாணிக்கம் இல்லை என்றால் உனக்குச் சித்தமல்லி பண்ணையார் மகன் காத்துக் கொண்டிருக்கிறானோ!" என்று ஏளனமாகக் கேட்டாள் தாய்.

தேன்மொழி சட்டென்று எழுந்து தன் தாய்க்கு அருகில் சென்றாள். அவள் தோளைப் பிடித்துக் கொண்டே "ஆமாம், அம்மா!" என்றாள்.

"என்ன!" என்று தாயும் தந்தையும் ஒரே சமயத்தில் வியப்புடன் கேட்டனர்.

"பண்ணையாரின் மகன் இனியன் என்னை மணந்து கொள்வதாக எனக்கு வாக்களித்திருக்கிறார், அம்மா. நானும் அவருக்கு வாக்களித்து விட்டேன்" என்றாள் தேன்மொழி.

"அப்படி அவள் சொல்லி முடித்ததும் தாயும் தந்தையும் எதிர்பாராமல் ஏதோ தங்களைத் தாக்கி விட்டதைப் போல் திடுக்குற்றனர். ஒருவரை ஒருவர் பார்த்து மிரள மிரள விழித்தனர். உணர்ச்சியில்லாமல் ஒருவர் மாற்றி ஒருவர் பேசினர். "என்ன காரியம் செய்துவிட்டாய்! பண்ணையார் வீடு எங்கே! அவர்களிடம் வேலை செய்யும் நாம் எங்கே! இதெல்லாம் ஒரு நாளும் நடக்காது."

"பண்ணையார், குடியானவன் என்ற பாகுபாடு கிடக்கட்டும். அவர்கள் நம்மைவிட உயர்ந்த சாதி; நாமோ தாழ்ந்த சாதி. சாதிவிட்டுச் சாதிதான் கல்யாணம் செய்ய முடியுமா! அதை நம் உறவினர்களும் ஊராரும் ஏற்றுக் கொள்வார்களா!"

"சாதி கிடக்கட்டும், பணம் கிடக்கட்டும். பண்ணையார் வீட்டுப் பையன் ஏற்றுக் கொண்டாலும் பண்ணையார் ஏற்றுக் கொள்வாரா! அவர் குடும்பத்தின் கௌரவம் அந்தஸ்து எல்லாவற்றையும் அலசி அலசிப் பார்ப்பவராச்சே. அவருக்கு எதிரில் நேருக்கு நேர் நின்று பேசக்கூடத் தகுதியில்லாத நாம் அவருடன் எப்படிச் சம்பந்தம் செய்து கொள்ள முடியுமா!"

இதையெல்லாம் கேட்கக் கேட்கத் தேன்மொழியின் தலை சுழன்றது. அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. தாய் தந்தையர்கள் சொல்வதெல்லாம் 'சரி' என்றுதான் பட்டது. அவள் 'என்ன செய்வது! என்ன சொல்வது!' என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

தந்தையின் உள்ளத்தில் ஏதோ ஓர் உணர்ச்சி தட்டியது. அவர் தம் மார்பை நிமிர்த்திச் சுற்றும் முற்றும் பார்த்தார்; நீண்ட பெருமூச்சு விட்டார். அவர் தலை சுழலுவதுபோல இருந்தது. கனமான பளுவை மார்பிலே சுமப்பதுபோல் இதயம் வலித்தது. அவர் குரல்வளை திணறுவதுபோல் மேலும் கீழும் ஏறி இறங்கியது. தொண்டையின் அடைப்பைப் போக்கிக் கொள்வதற்காகக் கனைத்து இருமினார். மங்கிய சிந்தனைகள் அவர் மனத்தில் உதயமாயின.

தம் அருமைப் பெண்ணின் நல்வாழ்வுக்கு, அவளுடைய எதிர்கால இன்ப வாழ்வுக்கு வழி செய்வது தம்முடைய கடமை என்பதை அவர் உணர்ந்தார். அதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் செய்யவேண்டியதுதான் என்று தீர்மானித்தார். 'கடவுளே! என் மகளின் எதிர்காலத்துக்கு, அவளுடைய இல்லற வாழ்க்கைக்கு நீ தான் துணை!' என்று முணு முணுத்தார்.

"சரி! நான் நாளைக்கு இனியனைப் பார்த்து இது சம்பந்தமாகப் பேசி முடிவு செய்கிறேன். சிறு பிள்ளைகள் சமூகம், சாதி, கட்டுப்பாடு, பணம், பதவி ஒன்றையும் கவனிக்காமல் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்" என்றார் தந்தை.

தேன்மொழி படுக்கையின் ஒரு ஓரமாக நின்று கொண்டு தன் தந்தையின் செயலைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள். அவரது அடர்ந்த மீசை துடித்துக் கொண்டிருந்தது. தோளில் கிடந்த துண்டு நழுவிக் கீழே விழுந்து கிடந்தது. வியர்த்துக் கிடக்கும் அவர் அகன்ற மார்பு பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தது. பெரிய மூச்சால் அவர் மார்பு விம்மி விம்மித் தணிந்தது. இப்போது அவளுக்குத் தன் தந்தையின் இதய வேதனைகளை உணர்ந்து கொள்ள முடிந்தது. அவர் நிலை குலைந்து பரிதாபமாக நிற்கும் காட்சியை அவளால் பார்க்க முடியவில்லை. அவளையும் அறியாமல் அவள் கண்களில் முத்து முத்தாக நீர் கொட்டியது. அந்தக் கண்ணீர் தந்தையின் நிலை கண்டு இரங்கும் தணியா ஏக்கக் கண்ணீர்!

கானம்ருத போதினி (சங்கீத பால பாடம்)

சங்கீதம் பயிலும் துவக்க நிலை மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் வண்ணம் பெரிய எழுத்துக்களில், ஏழு ஸ்வரங்களிலிருந்து முறையாகத் துவங்கி, ஸ்வராவளி வரிசைகளும், கீதங்களும், அவற்றின் ஸ்வரங்களும், தாளங்களும் தெளிவாகப் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. சுப்ரீம் கோர்ட் நீதிபதியான சங்கீத கலாநிதி ஸ்ரீ டி. எல். வெங்கட்ராமய்யர் அவர்களும், சங்கீதப் பேராசிரியர் ஸ்ரீ பி. சாம்பமூர்த்தி அவர்களும் இந்நூலைப் பாராட்டி யிருக்கிறார்கள் என்பதே இந்நூலின் சிறப்பை எடுத்துக் காட்டப் போதுமானதாகும்.

தொகுத்து வெளியிட்டவர்: சங்கீத வித்வான் ஏ. எஸ். பஞ்சாபகேச ஐயர், பிரின்ஸ்பால், ரசிக ரஞ்சனி சபா சங்கீத பாடசாலை, மயிலாப்பூர், சென்னை-4; விலை: ரூ. 1—4—0.

இனியன் இன்று எப்படியாவது தன் அபிப்பிராயத்தைத் தன் தாயிடமாவது தந்தையிடமாவது தெரிவித்து விடவேண்டும் என்று தீர்மானித்து விட்டான். அதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை ஒவ்வொரு கணமும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தான். தன்னுடைய அறைக்கும் தந்தையின் அறைக்குமாக அவசரம் அவசரமாக அலைந்து திரிந்து கொண்டிருந்தான்.

வெகுநேரம் வரையில் இப்படி ஏதோ பைத்தியம் பிடித்தவன்போல நடை போட்டுக் கொண்டிருந்தான். காலும், இடையும் வலிக்கும் வரையில் நடந்து கொண்டிருந்தான். பிறகு அவன் நிமிர்ந்து நின்றான். தன்னுடைய ஒவ்வொரு அவயவத்திலும் வலி எடுப்பதை உணர்ந்து தள்ளாடினான். அதன் பின் அவன் தன் அறைக்குள் போய்ச் சோர்ந்து படுத்தான். அவன் காதில் ஏதோ இரைந்து கொண்டிருந்தது; இருதயம் வெகு வேகமாகப் 'பட் பட்' என்று துடித்தது.

'சட்'டென்று எழுந்து தன் தாயார் இருக்கும் அறைக்கு விரைந்து சென்றான். "அம்மா" என்று ஆவலுடன் கூப்பிட்டான்.

"இனியா!" என்று அடைபடும் குரலில் அழைத்தாள் அன்னை. மகிழ்ச்சியை விட அவள் குரலில் வியப்புத்தான் அதிகமா யிருந்தது. காரணம் இனியன் இப்படித் 'திடீர்' என்று ஒரு நாளும் அவள் அறைக்கு வந்ததில்லை.

இனியன் தன் அன்னைக்கு அருகில் போய் நிதானமாக அமர்ந்தான்.

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சற்று நேரம் மௌனமாகப் பார்த்துக் கொண்டனர். இருவர் முக பாவத்திலும் ஆனந்தமும், சஞ்சலமும் கலந்து பிரதிபலித்தன.

"நானும் இப்பொழுது உன்னைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். நீ இரண்டு நாட்களாய் ஒரு மாதிரியாக இருக்கிறாயே ஏன் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். கடைசியில் நீயே என்னைத் தேடி வந்து விட்டாயா!"

பேசும்போதே அன்னை ஒரு கையால் இனியனை அணைத்துக் கொண்டாள். மறு கையால் அவன் தலையை வருடினாள். தன் முகத்தைப் பார்த்துக் கொண் டிருக்கும் தன் மகனின் சஞ்சலம் நிறைந்த கண்களைக் கண்டு அன்னை மனம் குழம்பினாள். அதேபோல, கவர்ச்சிகரமான வாலிப மகனைக் காண்பதால் ஏற்பட்ட திருப்தி, மகிழ்ச்சி அவன் சஞ்சலம் நிறைந்த கண்களைப் பார்த்ததும் குறைந்து போயிற்று. அவள் மூளையே ஏதோ குழம்பிப் போய் விட்டது. அத்துடன் அங்கு வந்த கணவர் எதையோ சொல்வதைக் கேட்டவுடன் அதிர்ந்தே போய் விட்டாள்.

"இனியா! நீ இங்கேயா இருக்கிறாய்! உன்னை எங்கெல்லாம் தேடுவது! உன்னைப் பார்ப்பதற்கு யார் யாரோ வந்திருந்தார்கள். உன் அறையில் நீ இல்லை. நாளைக்கு நம் ஐயனார் கோயிலுக்கு முன்னாலே ஒரு சமூக நாடகம் நடத்தப்போகிறார்களாம். அது சம்பந்தமாகத்தான் என்னைப் பார்க்க வந்தார்கள். நீ சென்னையிலிருந்து வந்திருக்கிறாய் என்று அறிந்ததும் உன்னையும் பார்க்க வேண்டும் என்றார்கள். அந்த நாடகத்துக்கு நான்தான் தலைமை வகிக்கப் போகிறேன். நாடகம் என்றால் உனக்கு ரொம்பப் பிடிக்குமே! நாளைக்கு நீயும் வா" என்றார் தந்தை.

"கட்டாயம் வருகிறேன், அப்பா!" என்றான் இனியன். அவருடன் நாடகத்தைப் பற்றியும், இன்னும் என்ன என்னவோ பல விஷயங்களைப் பற்றியும் பேசிக்கொண்டே வெளியில் வந்தான்.

அவன் உள்ளத்திலே உணர்ச்சியோடு கூடிய ஒரு சிந்தனை ஒளிவிட்டுக் கொண்டிருந்தது. உன்னதமான சோகம் நிறைந்த ஓர் ஆனந்தம் அவனை வதைத்துக் கொண்டிருந்தது. அவன் உணர்ச்சிகளை வெளியே சொல்லச் சந்தர்ப்பம் கிடைக்காமல் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

தந்தையிட மிருந்து பிரிந்து தன் அறையை நோக்கிச் சென்றான். "அன்பே உயிரின் தாய்; ஆவேசம் அல்ல!" என்று அவன் உள்ளம் உணர்ச்சியுடன் சொல்லிக் கொண்டிருந்தது.


இந்த வார்த்தையை அவன் இரண்டு நாட்களாகச் சொல்லிக் கொண்டே இருக்கிறான். இரவில் அவன் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கும் போதும், வெளியில் தனியே உலாவும் போதும் அவன் அந்தச் சொற்களை "அன்பே உயிரின் தாய்; ஆவேசம் அல்ல!" என்ற சொற்களைச் சொல்லிக் கொண்டேதான் இருக்கிறான். தேன்மொழியைப் பார்த்தால் அவன் எண்ணிக் கொண் டிருக்கும் அந்த வார்த்தைகள் உயிர் பெற்று ஒரு பெண் உருவில் வந்து நின்று பேசி, சிரித்து, ஓடி, ஆடுவது போல அவன் இதயம் இன்பக் கூத்தாடுகிறது. அந்த இன்பத்தைத் தனிமையில் அநுபவிக்காமல் உலகம் அறியச் செய்வதை எதிர் பார்த்து அவன் உள்ளம் வெகு ஆவலுடன் துடி துடித்துக் கொண்டிருந்தது.

அவன் தன் அறையின் ஜன்னலில் அமர்ந்து வெளி உலகத்தைப் பார்த்தான். அவனுடைய உலர்ந்த உதடுகளில் புன்னகை தவழ்ந்தது. அவனைச் சுற்றிலும் எங்கு பார்த்தாலும் தேன்மொழியின் சிரித்த முகம் பிரகாசித்துக் கொண்டிருப்பது போலவே உணர்ந்தான். தூரத்தில் யாரோ இரண்டு பேர் சேர்ந்து பாடும் குரலைக் கேட்டான். ஒன்று மிருதுவான மெல்லிய குரல்; இன்னொன்று பேரிகை முழக்கம் போன்ற குரல். இரண்டும் இசைந்து இனிமையாக ஒலித்தது.

சாதிகள் இல்லையடி பாப்பா;—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்தமதி, கல்வி-அன்பு
நிறைய உடையோர் மேலோர்.

இனியன் இந்தக் கீதத்தை முன்னால் கேட்டிருக்கிறான். இருந்தாலும் இப்பொழுது அவன் உள்ளத்தின் சஞ்சலத்தைப் போக்குவதற்கு இக் கீதம் பாடப்படுவதாக உணர்ந்தான். (தொடரும்)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.


நாளுக்கு நாள் அதிக தெளிவான,
எழிலோங்கும் சருமம்
கேடில் கலந்த ரெக்ஸோனு இந்த அற்புத வேலையைச் செய்யட்டும்.
ரெக்ஸோனுவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் மெதுவாகத் தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும், தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள். அதனால் புதுப் பொலிவுடன் விளங்குவீர்கள்.
Rexona
BLENDED WITH CADYL
Rexona
BLENDED WITH CADYL
ரெக்ஸோனு
கேடில்* கலந்த சோப் இதுஒன்றே
* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.
R.P. 117-50 TM
ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.

REGD. NO. M. 4392
Registered as a newspaper in ceylon